# தினக்கதிர்

வாரவெளியீடு

THINAKKATHIR WEEKLY

දිනක්කදිර්

ஒளி - 02 - கதிர் - 337 24-03-2002 ஞாயிற்றுக்கிழமை பக்கங்கள் - 16 விலை - ரூபா 10/=



இணையத்தளத்தில்

தினக்கதிர்

கிழக்கின் முதல்- ஒரே தினசரி உங்கள் "தினக்கதிர்" இப்போது இணையத்தளத்தில்

www.tamilnaatham.com

என்ற முகவரியில் சென்று பாருங்கள்




**இனவாதக் கட்சிகளுக்கு வரலாறு காணாத தோல்வி**

# உடன்படிக்கையின் 30 நாள் இன்றுடன் பூர்த்தி!

## இன்னமும் சில நடைமுறைகள் நிறைவேறவில்லை

(நமது நிருபர்)

**ஸ்ரீலங்கா அரசுக்கும், தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்துக்குமிடையே செய்து கொள்ளப்பட்ட போர் நிறுத்த உடன்படிக்கை நடைமுறைக்கு வந்து இன்றுடன் 30 நாட்கள் பூர்த்தியாகின்றன. இந்த 30 நாட்களுக்குள் குறிப்பிட்டுச் சொல்லத்தக்களவு பாரிய உடன்படிக்கை மீறல் சம்பவங்கள் எதுவும் நடைபெறாத போதும் உடன்படிக்கையின் இரண்டாம் அத்தியாயம் கூறும் இயல்பு நிலையை உருவாக்குவதற்கான நடைமுறைகள் சில இன்னமும் நிறைவேற்றப்படாமல் உள்ளன.**

ஸ்ரீலங்கா அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையே செய்துக்கொள்ளப்பட்ட போர் நிறுத்த உடன்படிக்கை நடைமுறைக்கு வந்து இன்றுடன் (மார்ச் 24) ஒரு மாதம் பூர்த்தியாகிறது. இந்த ஒரு மாத காலத்திற்குள்,குறிப்பிட்டுச் சொல்லும்படியான ஒப்பந்த மீறல் நடவடிக்கை ஏதும் இடம்பெறாததுடன் ஒப்பந்த நடைமுறைகள் திருப்தி அளிக்கக்கூடியவாறு சென்றுகொண்டிருகின்றன.

ஒப்பந்தத்தின் முதலாம் அத்தியாயம் கூறும் போர் நிறுத்த நடைமுறைகளைப் பொறுத்த வரையில், பரஸ்பர தாக்குதல்கள் எதுவும் நடைபெறாத போதும், மட்டக்களப்பில், களுவன்கேணி அரசடிச் சந்தி ஆகிய இடங்களில் படைத் தரப்பினர் எனச் சந்தேகிக்கப்படும் சிலரால் பொது மக்கள் மீது குண்டு, துப்பாக்கிச் சூட்டுத் தாக்குதல்கள் நடாத்தப்பட்டுள்ளன ஆனாலும் இருதரப்புப் படைகளிடையேயும் மோதல் சம்பவங்கள் எதுவும் இடம்பெறாதது குறிப்பிடத் தக்கது.

உடன்படிக்கையின் 1.8 ஆம் பிரிவின்படி, தமிழ்க் கட்சிகளின் ஆயுதக்கையளிப்பு விடயங்கள் ஓரளவுக்கே நடந்தேறியுள்ளன. புளொட் அமைப்பு, யாழ்ப்பாணம், மட்டக்களப்பு ஆகிய இடங்களில் தம்வசமிருந்த ஒரு தொகுதி ஆயுதங்களைக் கையளித்துள்ளது. ஈ.பி.டி.பி. இன்றைய தினம் ஆயுதங்களைக் கையளிக்கவுள்ளதாக அறிவித்துள்ளது. ஈ.பி.ஆர்.எல்.எவ். (வரதர் அணி) இறுதிக்கால எல்லையான இன்று ஆயுதங்களைக் கையளிக்குமா என்பது பற்றி? அறிவித்தல் எதுவும் விடுக்கப்படவில்லை.

உடன்படிக்கையின் அத்தியாயம் இரண்டில் கூறப்பட்டுள்ளபடி இயல்பு நிலையை உருவாக்குவதற்கான நடைமுறைகள் பல ஆக்கபூர்வமாக நிறைவேற்றப்பட்டுள்ளன.

குறிப்பாக படைச்சோதனை நடவடிக்கைகள் பெருமளவு இல்லாதொழிக்கப்பட்டிருப்பதுடன், பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழான நடவடிக்கைகள் யாவும் இடை நிறுத்தப்பட்டுள்ளன. மூடப்பட்டிருந்த பாதைகள் பல திறக்கப்பட்டு போக்குவரத்து வசதிகள் இலகுவாக்கப்பட்டுள்ளதுடன் இரவு, நேரப் போக்குவரத்துக்களும் ஆரம்பிக்கப்பட்டு, மக்கள் சுதந்திரமாக வீதிகளில் நடமாடும் நிலை உருவாக்கப்பட்டுள்ளது.

மேலும், படைக்கட்டுப்பாடற்ற பகுதிகளுக்கான போக்குவரத்துக் கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டு, தடை நீக்கம் செய்யப்பட்ட பொருட்கள் கொண்டுச்செல்லப்படும் நிலையும் உருவாக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு உடன்பாடு காணப்பட்டபடி பெருமளவு விடயங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள போதும், 30 நாட்களுக்குள் நிறைவேற்றப்பட வேண்டும் எனக் குறிப்பிடப்பட்ட சில விடயங்கள் முழுமையாக நிறை வேற்றப்படாமலுள்ளமையும், அர சியல் அவதானிகள் சிலரால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

குறிப்பாக மட்டக்களப்பு மாவட்டத்தைப் பொறுத்தவரையில், முறக்கொட்டான்சேனை, கொம்மாதுறை, மயிலம்பாவெளி, வாழைச்சேனை, பட்டிருப்பு உள்ளிட்ட பல படை முகாம்கள் அமைந்துள்ள பகுதிகளில் தொடர்ந்தும் வீதிகள் மூடப்பட்டிருப்பதனால் போக்குவரத்தில் தொடர்ந்தும் இடையூறு காணப்படுவதாக பொதுமக்கள் குறைகூறுகின்றனர்.

அத்தோடு உடன்படிக்கை நடைமுறைக்கு வந்து 30 நாட்களுக்குள் கோயில்கள், மத வழிப்பாட்டுத் தலங்களிலிருந்து படையினர் விலக்கிக்கொள்ளப்பட வேண்டும் என்றும் (2.2) பொது இடங்களிலிருந்து வெளியேறுவது தொடர்பாக கால அட்டவணை வெளியிடப்பட வேண்டும் எனவும் (2.4) தெரிவிக்கப்பட்டுள்ள போதும், மட்டக்களப்பு பிள்ளையாரடி, களுவாஞ்சிகுடி, கொம்மாதுறை, கல்குடா, வாழைச்சேனை, நீலாவணை போன்ற படைமுகாம்கள் அமைந்துள்ள இடங்களில் மத வழிபாட்டுத் தலங்கள் காணப்படுவதுடன், பொதுநூலகம், தபாலகம், போன்றனவும் சில முகாம்களுள் காணப்படுவதும் குறிப்பிடத் தக்கது.

மட்டக்களப்பு மாவட்ட 23-3 பிரிகேட் தலைமைச் செயலகம், மட்டக்களப்பு மாநகரசபைக் கட்டடத்திலேயே அமைந்திருக்கிறது எனவும், அத்துடன் மாநகர சபைக் கட்டடத்திற்கு அண்மையில் உள்ள மாவட்டச் செயலகம், வீதி அபிவிருத்தி,நீர்பாசனத் திணைக்களங்கள்,நீதிமன்றக் கட்டடம் போன்றவற்றுக்குச் செல்லும் பிரதான வீதியும், பொது மக்கள் பாவனைக்குக் கட்டுப்படுத்தப்பட்டுள்ளமையும் நலன்விரும்பிகள் பலரால் சுட்டிக்காட்டப் பட்டுள்ளது.



**தமிழர் போராட்டம்**



**தமிழர் பிரச்சினைத் தீர்வில் ஜூலைக் கலவரம்**




**தாகத்துக்குத் தண்ணீர் – தண்ணீருக்கு சோடீஸ்**





**கதிர் சினிமா-புன்னகை தேசம்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தினக்கதிர்**

த.பெ. இல: 06
155, திருமலை வீதி,
மட்டக்களப்பு.
தொ. பே. இல : 065 - 22554

## உடன்படிக்கையைப் புரிந்துகொள்வோம்!

இந்த நாட்டில் இருதசாப்தங்களுக்கு மேலாக நீடித்து வரும் போரை நிறுத்தி, பல தசாப்தங்களாகத் தொடரும், தமிழ் மக்களுடைய பிரச்சினைகளுக்கான தீர்வை, பேச்சுக்கள் மூலம் காண்பதற்கான ஒரு முன்னேற்பாடாக, தற்போது நோர்வே அரசின் மத்தியஸ்தத்துடன், ஸ்ரீலங்கா அரசுக்கும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையே ஓர் புரிந்துணர்வு உடன்படிக்கை செய்யப்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் மேற்கொள்ளப்பட்ட சமாதான முயற்சிகள் போலன்றி, இம்முறை நோர்வே அனுசரணையுடன் நடைபெறும் அமைதி முயற்சிகள், ஆரம்பம் முதலே, எழுத்தில் வடிக்கப்பட்ட சில விதிமுறைகள், உத்தரவாதங்களுடனேயே மேற்கொள்ளப்படுகிறது. இது இருதரப்புக்குமிடையே பரஸ்பர நம்பிக்கையை ஏற்படுத்துவதுடன், சமாதான முன்முயற்சிகளையும் உத்தரவாதப்படுத்துவதாக அமைந்துள்ளது.

சமாதான முயற்சிகளின் முன்னேற்பாடாக, தற்போது கடைப்பிடிக்கப்பட்டு வரும் போர் நிறுத்தம் உட்பட, அதனைக் கண்காணிக்கும் ஏற்பாடுகள், மக்களுடைய இயல்பு வாழ்க்கையை ஏற்படுத்துவதற்கான படிமுறைகள், இந்த உடன்பாட்டிலிருந்து வெளியேறுவதாயினும், அதற்குரிய ஏற்பாடுகள் என்பவை குறித்த விதி முறைகள் அடங்கிய ஒரு புரிந்துணர்வு உடன்படிக்கையிலேயே, பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவும், தலைவர் பிரபாகரனும் கையொப்பமிட்டுள்ளனர்.

தமிழ் மக்களுடைய உரிமைப் போராட்டத்தின், ஒரு முக்கியமான இந்த காலகட்டத்தில், செய்து கொள்ளப்பட்டுள்ள இந்த ஒப்பந்தம், தமிழ் மக்களுடைய அன்றாட வாழ்க்கை நடைமுறைகளில், இயல்பு நிலையையும், பாதுகாப்பையும் உறுதிப்படுத்தக்கூடிய ஒன்றாகவே அமைந்துள்ளது.

ஆனால், துரதிஷ்டவசமாக, தம்முடைய இயல்பு வாழ்வு குறித்துச் செய்யப்பட்டுள்ள இந்த வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஒப்பந்தம் குறித்து,தமிழ் மக்களே போதியளவு அறிவு இன்றியே இருந்து வருகின்றனர். அரச அதிகாரிகள், சமுதாயத்தில் முக்கிய பிரமுகர்கள், ஊடகவியலாளர்கள் கூட, இது குறித்து போதிய விளக்கம் இன்றி இருப்பதை நேற்று முன்தினம் மாவட்ட இணைப்பதிகாரியும், ஊடகவியலாளர்களுடனான சந்திப்பின்போது குறிப்பிட்டிருந்தார்.

இது வேதனையான ஒரு விடயம். தமது உரிமைகளுக்காகப் போராடும் ஒரு இனம், அவ்வினத்தின் முக்கிய பிரமுகர்கள் இவ்வாறு விழிப்புணர்வின்றி இருப்பது மன்னிக்கமுடியாதது.

உடன்படிக்கையின் விபரம் வெளியான உடனேயே, உங்கள் தினக்கதிர், அதனை வரிக்கு வரி மொழிபெயர்த்து, இரு இதழ்களில் தொடர்ச்சியாக வெளியிட்டது. இதனை முழுமையாகப் படித்து, இது குறித்து போதிய அறிவு உள்ளவர்களாக இருப்பது இன்று தமிழ்மக்கள் அனைவரினதும் பாதுகாப்புக்கும் அவசியமான ஒன்று.

## இன்றைய சிந்தனை

### வாழ்வும் மரணமும்

நாம் மற்றவர் மீது வெறுப்பையே காட்டிக்கொண்டிருந்தால் மரணத்தின் பக்கம் திரும்பிக் கொண்டிருக்கிறோம் என்று அர்த்தம். தவறுகள் நடந்திருந்தாலும் மறந்து மீண்டும் அன்பு செலுத் துங்கள் அப்பொழுதுதான் நாம் வாழ்வின் பக்கம் திரும்பியுள்ளோம் எனக்கொள்ளலாம்.

—சுவாமி விவேகானந்தர்—

# இனவாதம் பேசிய கட்சிகளுக்கு வரலாறு காணாத தோல்வி

## –உள்ளூராட்சி மன்றத்தேர்தல் கற்றுத்தந்த பாடம்–

இலங்கையின் அண்மைக் கால தேர்தல்கள் வரலாற்றில் மின்னாமல் முழங்காமல் உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல் நடைபெற்ற போதிலும் சிங்கள மக்கள் மீண்டும் சமாதானத்திக்காக வழங்கிய ஆணையை வலுவாக உறுதிப்படுத்தியுள்ளனர். ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் புரிந்துணர்வு ஒப்பந்தத்தை கைச்சாத்திட்ட பின் பொதுஜன ஐக்கிய முன்னணியும், ஜே.வி.பி. சிஹல உறுமய போன்ற கட்சிகளும் இனவாதத்தை கக்கி உள்ளூராட்சி தேர்தலை எதிர் கொண்டன. மக்கள் புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கு அங்கீகாரம் வழங்கியதுடன் எதிர்க்கட்சிக்கும், இனவாத கட்சிகளுக்கும் தகுந்த பாடத்தைப் புகட்டியுள்ளனர்.

மொத்தமாக நடைபெற்ற 222 உள்ளூராட்சி மன்றங்களில் ஐக்கிய தேசியக் கட்சி 217 உள்ளூராட்சி மன்றங்களையும், பொதுஜன ஐக்கிய முன்னணி 4 உள்ளூராட்சி மன்றங்களையும், ஜே.வி.பி. ஒரேயோரு உள்ளூராட்சி மன்றத்தையும் கைப்பற்றியுள்



ளன. தேர்தல் ஆட்சேபமனு காரணமாக தென்னிலங்கையிலுள்ள 16 உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல் நடைபெறவில்லை.

பொதுஜன ஐக்கிய முன்னணி ஆட்சியில் இருந்தபோது 1997 மார்ச் மாதம் நடைபெற்ற தேர்தலில் பொதுஜன ஐக்கிய முன்னணி 48.97 சதவீத வாக்குகளைப் பெற்று 194 உள்ளூராட்சி மன்றங்களை கைப்பற்றி அமோக வெற்றியீட்டியது. ஐக்கிய தேசியக் கட்சி 41.25 சதவீத வாக்குகளைப் பெற்று 43 உள்ளூராட்சி மன்றங்களை கைப்பற்றியது பொதுஜன ஐக்கிய முன்னணி பதவிக்கு வந்த மூன்று வருடங்களில் இத்தேர்தல் நடைபெற்றது.

ஆனால் ஐக்கிய தேசியக்கட்சி பதவியேற்ற மூன்று மாதங்களில் 222 சபைகளுக்கு நடைபெற்ற தேர்தலில் 57 சதவீத வாக்குகளைப் பெற்றிருக்கிறது. ஆனால் பொதுஜன ஐக்கிய முன்னணி 32 சதவீத வாக்குகளைப் பெற்றிருக்கிறது. நடந்து முடிந்த பாராளுமன்ற பொதுத்தேர்தலில் 9.10 சதவீத வாக்குகளைப் பெற்ற ஜே.வி.பி. ஒரு பிரதேசசபையைக் கைப்பற்றியுள்ள போதிலும் 6.5 சதவீத வாக்குகளையே பெற்றிருக்கிறது. சிஹல உறுமய 0.32 சதவீத வாக்குகளை பெற்றிருக்கிறது.

கடந்த இருதசாப்தங்களாக நடைபெற்ற சகல தேர்தல்களையும் விட ஒப்பீட்டு அளவில் மிகவும் குறைந்த வன்செயல்களுடன் உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல் நடைபெற்றிருக்கிறது. நாட்டின் தலைவரென்ற ரீதியில் பிரதமர் ரணில் விக்கி ரமசிங்க தேர்தல் பிரச்சாரங்களில் கலந்து கொள்ளாத அதேவேளை ஜனாதிபதியும் பிரதமரின் முன்மாதிரியை பின்பற்ற வேண்டியவரானார். குறிப்பாக இம்முறை நடைபெற்ற உள்ளூராட்சி மன்ற தேர்தலில் அரச உடமைகள் பெருமளவில் பயன்படுத்தப்படாத அதே வேளை பொது மக்கள் ஜனநாயக ரீதியில் தமது உணர்வுகளை பிரதிபலிக்க கூடிய வாய்ப்பு பெரும்பாலும் இருந்தது. அந்த வகையில் ஜனநாயக சூழலை கட்டியெழுப்புவதற்கான அத்திவாரமாக இந்த தேர்தல் பயன்படுத்தப்பட வேண்டும்.

கடந்த பாராளுமன்ற ஜனாதிபதி தேர்தல்களில் உத்தியோன பூர்வ வதிவிடத்திலிருந்து வாக்களித்த ஜனாதிபதி உள்ளூராட்சி மன்ற தேர்தலில் குறைந்தளவு பாதுகாப்புடன் தனது சொந்த இடமான நித்தம்புவ ஸ்ரீமகாபோதி வித்தியாலய வாக்களிப்பு நிலையத்துக்கு சென்று வாக்களித்துள்ளார். இது பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, தமிழீழ விடுதலைப்புலிகளின் தேசியத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் ஆகியோர் கைச்சாத்திட்டுள்ள புரிந்துணர்வு ஒப்பந்தத்தினாலேயே சாத்தியமாகியுள்ளது.

சிங்கள மக்கள் சமாதானத்தையே விரும்புகிறார்கள் என்பதை கடந்த நாடாளுமன்றத் தேர்தலின் போது தெளிவாக உணர்த்தியுள்ளனர். புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட 25 தினங்களில் அதுவும் பிரதான எதிர்க்கட்சியான பொது ஜன ஐக்கிய முன்னணி மற்றும் இனவாதத்தை கக்குவதன் மூலம் ஆட்சி அதிகாரத்தை கைப்பற்ற முடியுமென்ற தப்பான அரசியல் நடாத்தும் ஜே.வி.பி மற்றும் சிஹல உறுமய என்பன தகுந்த பாடத்தை க்றறுள்ளன. புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கு இனவாத முலாம் பூசி காட்டுக் கூச்சல் போட்ட ஏனைய கட்சிகள் வரலாறு காணாத படுதோல்வியைத் தழுவியுள்ளன.

உள்ளூராட்சி தேர்தல் மூலம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் தலைமைத்துவத்தின் மீது அளவு கடந்த நம்பிக்கையையும், விசுவாசத்தையும் தென்னிலங்கை மக்கள் தெரிவித்துள்ளனர். எனவே இந்த வாய்ப்பை பயன்படுத்தி இனப் பிரச்சினைக்கு பேச்சு வார்த்தை மூலம் அரசியல் தீர்வு காண்பதற்கு ரணில் விக்கிரமசிங்க இதயசுத்தியுடனும் உறுதியுடனும் முன் வரவேண்டும்.

> **கடந்த பாராளுமன்ற ஜனாதிபதி தேர்தல்களில் உத்தியோன பூர்வ வதிவிடத்திலிருந்து வாக்களித்த ஜனாதிபதி உள்ளூராட்சி மன்ற தேர்தலில் குறைந்தளவு பாதுகாப்புடன் தனது சொந்த இடமான நித்தம்புவ ஸ்ரீமகாபோதி வித்தியாலய வாக்களிப்பு நிலையத்துக்கு சென்று வாக்களித்துள்ளார்.**

1977ம் ஆண்டு யூலை தேர்தலில் ஜே.ஆர். ஜெயவர்த்தனா பெற்ற பெரு வெற்றி அவருக்கு ஏற்படுத்திய நிமிர்த்தனமே ஐக்கிய தேசிய கட்சியின் 'அந்த 17 வருட கொடிய யுத்தத்திற்கும், அரசியல் ஊழலுக்கும் வழி வகுத்தது. அதே போல ரணில் விக்கிரமசிங்க மக்கள் சமாதானத்திற்கு அளித்த ஆணையை தனது அரசியலுக்கு கிடைத்த வெற்றியாகக் கருதி செயற்படமாட்டாரென்றே எதிர்பார்க்கப்படுகிறது. அப்படி எதிர்பார்த்து செயற் படுவாரேயானால் இந்த நாட்டின் இறைமை, ஒருமைப்பாட்டை, பாதுகாக்க இறுதியாக கிடைத்த வாய்ப்பை தவறவிட்ட அவப்பெயரை சம்பாதிப்பார் என்பதை உணர வேண்டும்.


இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதாக கூறி பதவிக்கு வந்த பின்னர் சமாதானத்திற்கான யுத்தம் என்று பேரிகை கொட்டிய சந்திரிகா அம்மையாருக்கு மக்கள் அளித்த பாடத்தை முன்மாதிரியாக ரணில் விக்கிரமசிங்க கொள்ள வேண்டும். இன்று அவரது சொந்தத் தொகுதியான அத்தனகல பிரதேசசபை எதிர்கட்சி தலைவர் ஹம்பந்தோட்டை பிரதேச சபையைக் கூட பொதுஜன ஐக்கிய முன்னணியினால் கைப்பற்ற முடியவில்லை. இலங்கை உள்ளூராட்சி தேர்தல் வரலாற்றில் எதிர்க்கட்சி பெற்ற படுதோல்வியாக கருதப்படுகிறது. பொதுஜன ஐக்கிய முன்னணியைப் பொறுத்தவரை இனவாத அரசியலுக்கு இந்த நாட்டில் இடமில்லை என்பதை சிங்கள மக்கள் தெளிவாக உணர்த்தியுள்ளனர். குறிப்பாக ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா நாட்டின் ஜனாதிபதியாக செயற்படாது பொதுஜன ஐக்கிய முன்னணியின் தலைவியாக நாட்டின் நலன்களுக்கு மேலாக கட்சி நலன்களை முன்னெடுத்து செல்ல முற்பட்டமைக்கு மக்கள் தமது அதிருப்தியைத் தெளிவாக உணர்த்தியுள்ளனர்.

பொதுஜன ஐக்கிய முன்னணி உள்ளூராட்சி மன்ற தேர்தலில் பெற்ற படு தோல்விக்கு சந்திரிக்கா அம்மையார் ஜனநாயக ரீதியில் பிராயச்சித்தம் தேட இரண்டு வழிகளே உண்டு, ஒன்று அவர் பெருந்

**ஜி.நடேசன்**

தன்மையுடன் பதவி விலகி மக்கள் தெரிவுக்கு வழி வகுக்க வேண்டும். அல்லது நாட்டின் ஜனாதிபதியாக, நாட்டின் நிகழ்கால எதிர்கால நலன் கருதும்'பொதுவான சிந்தனையுள்ளவராக, இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதற்கு உதவி செய்யாவிட்டாலும் உபத்திரவம் செய்யாதவராக குறுகிய கட்சி நலன்களுக்கு அப்பால் செயற்பட்டு மக்களிடம் பாவமன்னிப்பு பெறவேண்டும்.

சந்திரிகா ஆட்சிக் காலத்தில் எந்த தேர்தல் நடைபெற்றாலும் வட புலத்தில் ஒரு இராணுவ நடவடிக்கை தொடங்கும். இராணுவ நடவடிக்கைகளின் பெறுபேறுகளை அரச தொடர்பு சாதனங்களூடாக சிங்கள வாக்காளர்களுக்கு பிரச்சாரப் படுத்தப்படும். அத்தோடு ஜனாதிபதி முதல் சகல அமைச்சர்களும் அரசின் சகலவளங்களையும் பயன்படுத்தி பிரச்சாரம் செய்வார்கள். பல்வேறு சலுகைகள் அறிவிக்கப்படும். இதற்கும் மேலாக தேர்தல் மோசடிகளுக்கு மத்தியிலே



யே மயிரிழை வெற்றிகளை அறுவடை செய்தார்கள்.

ஆனால் நடந்து முடிந்த உள்ளூராட்சி மன்றத்தேர்தல் புதிய அரசியல் தேர்தல் கலாசாரத்திற்கு வித்திட்டுள்ளது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க வெற்றி கண்டு மகிழ்ச்சியடைய முடியாது சிங்கள வாக்காளர்கள் அவரின் தோள்களில் சுமையை ஏற்றியுள்ளார்கள். கடினமானதும், கரடு முரடானதுமான சமாதானத்தை அடைவதற்கான பாதையில் சென்று இந்த நாட்டில் நிரந்தர அமைதியை ஏற்படுத்த வேண்டும்.

நோர்வே பிரசன்னத்துடன் கைச்சாத்திட்டுள்ள புரிந்துணர்வு ஒப்பந்தத்தை அடிப்படையாகக் கொண்டு சமாதானப் பேச்சு வார்த்தைகளை அரசு முன்னெடுக்க வேண்டும். அதற்கான பலத்தை மக்கள் மீண்டும் அரசுக்கு வழங்கியுள்ளனர்.

அதேபோல அரசு செய்வதையெல்லாம் எதிர்ப்பது எதிர்க்கட்சி என்ற கலாசாரத்திற்கு மக்கள் சாவுமணியடித்துள்ளனர். பொது ஜண ஐக்கிய முன்னணி ஜே.வி.பி 49 சபைகளில் போட்டியிட்டு இரண்டு உறுப்பினர்களை மட்டும் பெற்றுள்ள சிஹல உறுமய என்பன தமது செயற்பாடுகளை மீளாய்வு செய்ய வேண்டும்.

நாட்டை அதளபாதாளத்திற்கு தள்ளியுள்ள இனப்பிரச்சினைக்கு சகல கட்சிகளுக்கும் இணைந்து அரசியல் தீர்வுகாணத் ஒத்துழைக்க வேண்டுமென்பதையே சிங்கள மக்கள் மீண்டும் சொல்லியுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரலாற்றுக்கு தமிழர் போராட்டம் வழங்கியுள்ள புதிய சூத்திரம்

கோ.றுஷாங்கன்

ஈழத்தமிழர்களுடைய உரிமைப் போராட்டத்திற்கான புதிய திசைகளை, ஸ்ரீலங்கா அரசுடன் விடுதலைப்புலிகள் அமைப்புச் செய்துகொண்ட ஒப்பந்தம் திறந்துவிட்டுள்ளது என முன்பொருதடவை எனது கட்டுரையில் நான் குறிப்பிட்டிருந்தேன். அக்கூற்றை மெய்ப்படுத்துவது போன்ற சம்பவங்கள் தற்போது தொடர்சசியாகத் தமிழீழம் எங்கும் நடைபெற்று வருவதை அண்மைக்காலமாக அவதானிக்க முடிகிறது.

2000 அம் ஆண்டு மார்கழியில் தமிழீழ விடுதலைப் புலிகள் ஒரு தலைபட்சமாகப் போர் நிறுத்தத்தை அறிவித்து, அப்போது நோர்வே அரசு கொண்ட சமாதான முயற்சிகளுக்கு ஆதரவு வழங்கவந்த காலப்பகுதியில், தமிழ் மக்களுடைய உரிமைப் போராட்டதிற்கான அடிப்படைகளை வெளிப்படுத்தும் வகையில், யாழ்.கிழக்குப் பல்கலைக்கழக சமூகங்கள் பொங்குதமிழ் எழுச்சிப் போராட்டங்களை நடாத்தியிருந்தன. இது காலத்தின் தேவையுணர்ந்து ஓர் மக்கள் எழுச்சியாக மலர்ந்திருந்தது.

இதனைத் தொடர்ந்து அரசியல், இராணுவ அரங்கில் தமிழீழ விடுதலைப்புலிகளின் சாமர்த்தியமான நகர்வுகளின் பயனாக, ஸ்ரீலங்காவில் சமாதானத்திற்கான குரல் முன்னெப்போதுமிருந்திராத அளவுக்கு மேற்கிளம்பி, அதன் பயனாக பாரிய அரசியல் மாற்றமும் நடந்தேறியது. சமாதானத்தை வலியுறுத்தி தேர்தலுக்கு முகம் கொடுத்த ஐக்கிய தேசிய முன்னணி, ரணில் தலைமையில் ஆட்சியைக் கைப்பற்றியது.

இதன் பின்னர், சமாதானத்திற்கான ஒரு சூழல் ஸ்ரீலங்காவில் தோன்றியிருந்த நிலையிலேயே, ஏலவே தனது மாவீரர் தின உரைகளில் தான் வலியுறுத்தியபடி, சமாதான முயற்சிகளுக்கான பாதையைத் தலைவர் திறந்துவிட்டிருந்தார். இதனைச் சரியாகப் பயன்படுத்திக் கொண்டு, ஸ்ரீலங்கா அரசும், நோர்வே அரசின் மத்தியஸ்தத்துடன், விடுதலைப்புலிகளுடன் ஓர் போர்நிறுத்தப் புரிந்துணர்வு உடன்படிக்கை செய்து, சமாதான முயற்சிகளை ஆக்கபூர்வமாக முன்னெடுத்து வருகின்றது.

இந்தப் புதிய சூழல், 2001 ஆம் ஆண்டு தை, மாசி மாதங்களில் பொங்கு தமிழாக எழுச்சிகொண்ட மக்களெழுச்சிப் போராட்டங்களுக்கும், புதிய வழிகளைத் திறந்து விட்டிருக்கின்றது. மட்டக்களப்பு, வவுனியா, மன்னார், திருகோணமலை, யாழ்ப்பாணம், மலையகம் என பரந்துபட்ட ஓர் மக்கள் எழுச்சி வெடிப்பதற்கான அடித்தளம், இவ்வளவுகால ஆயுதப் போராட்டத்தின் பின்னர், அதன் பயனாக புலிகளால் இடப்பட்டுள்ளது.

இதிலும் சிறப்பாகப், பல்வேறு இராணுவ ஒடுக்குமுறைகளுக்கு முகம்கொடுத்து அஞ்சி, நடுங்கி, ஒடுங்கி வாழ நிர்ப்பந்திக்கப்பட்ட மட்டக்களப்பு, அம்பாறை, திருமலை, மன்னார் மாவட்ட மக்கள் பேரெழுச்சி கொண்டு எழுந்து வந்திருப்பது நாம் கண்டிப்பாக அவதானிக்க வேண்டிய விடயமாகும். இன்னும், தற்போது செய்யப்பட்டுள்ள போர் நிறுத்தப் புரிந்துணர்வு உடன்படிக்கையை மீறும் படையினரின் செயல்களைக் கண்டித்து, கிழக்கு மாகாணம் மட்டக்களப்பில், மார்ச் 13 ம் திகதி மக்கள் நடாத்திய பரவலான ஆர்ப்பாட்டப் போராட்டங்களும், அன்னை பூபதியின் நினைவையொட்டி அமைக்கப்பட்டிருந்த அலங்காரப் பந்தல்களை படையினர் சேதமாக்கியதைக் கண்டித்து மார்ச் 21 ஆம் திகதி கிரானில் மக்கள் நடாத்திய ஆர்ப்பாட்டப் பேரணியும், படை ஒடுக்குமுறையின் கீழ் வாழ்ந்த மட்டக்களப்பு மாவட்டத்தின் வரலாற்றில் குறிப்பிடத்தக்க மாற்றங்களாக அமைந்துள்ளன.

ஈழத் தமிழர் போராட்ட வரலாற்றில் ஏற்பட்டுள்ள இந்தப் பாரிய அரசியல் பரிணாம வளர்ச்சி பற்றிச் சுருக்கமாக ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

இலங்கை சுதந்திர மடைந்ததாகக் கூறப்பட்ட 1948ம் ஆண்டைத் தொடர்ந்து, ஆட்சி பீடமேறிய, சிங்களப் பேரினவாத அரசுகள், தமிழ் மக்களுடைய வாழ்வுரிமைகளை மறுத்து ஒடுக்குமுறைகளைக் கட்டவிழ்த்து விட்ட நிலையிலேயே, ஈழத் தமிழர்களின் உரிமைப் போராட்டம் ஆரம்பமானது.

ஆரம்பத்தில் இப்போராட்டம் சாத்வீகப் போராட்டமாக மேற்கிளம்பியது. இந்தச் சாத்வீகப் போராட்டங்களுக்கு, பின்னாளில் தமிழரசுக்கட்சி தலைமை தாங்கி, தமிழர் உரிமைப் போராட்டத்தை நடாத்தி வந்தனர். ஆனால், தமிழ் மக்களின் இந்த சாத்வீக ரீதியிலான அமைதிப் போராட்டங்களை, சிங்களப் பேரினவாதிகள் வன்முறை வழியிலேயே எதிர்கொள்ள முற்பட்டனர். ஆயுத வன்முறைகள்,



காடைத்தனங்கள் மூலம் தமிழர்களுடைய சாத்வீகப் போராட்டங்கள் அடக்கப்பட்ட நிலையில், அதனை எதிர்கொள்ளும் பலம் இல்லாத நிலையில் தமிழர் பிரச்சினைக்கு ஒன்றுபட்ட இலங்கைக்குள் சமாதான ரீதியாகத் தீர்வுகாண முடியாது என்ற முடிவுக்குத் தமிழர்கள் தள்ளப்பட்டு, தனியரசுக் கோரிக்கையை முன்வைக்க அவர்கள் நிர்ப்பந்திக்கப்பட்டனர். தனியரசு அமைப்பதற்கான இப்போராட்டம், இளைஞர்களின் ஆயுதப் போராட்டமாகப் பரிணாம வளர்ச்சி பெற்று ஈற்றில் ஒரு மரபு வழிப் படையணியின் வளர்ச்சியாக அது இறுதிவடிவம் பெற்றது. முன்பு [illegible] வழியில் போராடிய தமிழ் மக்களை ஆயுத வன்முறைகள் மூலம் ஒடுக்கக் கங்கணம் கட்டிய பேரினவாத அரசுகள், இளைஞர்களின் ஆயுதப் போராட்டதையும் 'சின்னப்பெடியன்களின் செல்ல விளையாட்டு' எனத் தப்புக் கணக்குப் போட்டு, அதனையும் படை இயந்திரத்தை ஏவிவிட்டு அடக்க முற்பட்டதன் விளைவே, இந்தத் தமிழர் படையின் பேரெழுச்சிக்குக் காரணமாக அமைந்தது. இதனையே, அண்மையில் ரூபவாஹினித் தொலைக்காட்சி சேவைக்கு வழங்கிய விஷேட பேட்டியொன்றில், தமிழீழ அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனும் சுட்டிக்காட்டியிருந்தார்.

தமிழர் படையின் இந்தப் பேரெழுச்சிக்கு முகம் கொடுக்கத் திராணியற்ற நிலையிலேயே, ஸ்ரீலங்காவின் சந்திரிகா அரசு தனது ஆட்சிக்காலத்தில் புதிய பல தந்திரோபாயங்களை வகுத்துச் செயற்பட்டது.

தமிழர்களுடைய உரிமைப் போராட்டத்தை, தலைமையேற்று, ஆயுதப்போராட்டமாக வெற்றிகரமாக வளர்த்தெடுத்து வந்த தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பை ஒரு பயங்கரவாத இயக்கம் என முத்திரை குத்தி, ஆயுதப்போராட்டத்தின் பின்னணிக் காரணியாகவுள்ள, தமிழ் மக்களின் அபிலாஷைகளை இருட்டடிப்புச் செய்வதன் மூலம், புலிகளையும், தமிழர் போராட்டத்தையும் ஒழித்துக்கட்டுவதே இப்புதிய உத்தியின் அடிப்படையாக இருந்தது.

இந்த உத்தியினைச் செயற்படுத்தும் பணியினை 'தவறிப்போய்'த் தமிழனாகப் பிறந்துவிட்ட, சந்திரிகா அரசின் வெளியுறவு அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரே தலைமையேற்றுச் செயற்படுத்தி வந்தார். சர்வதேச நாடுகளெங்கும் பறந்து திரிந்து, தமிழர்களுக்கு இந்த நாட்டில் பிரச்சினை ஏதுமில்லை, புலிகள் வெறுமனே ஒரு போர் மோகம் கொண்ட பயங்கரவாத இயக்கமே என அவர் தீவிர பிரசாரம் செய்து வந்தார்.

அத்தோடுகூடவே, புலிகள் சமாதான வழியில் நாட்ட மில்லாதவர்கள் என்ற மாயையும் பரப்பட்டு, தமிழர் போராட்டம் பற்றிய ஒரு போலி அச்ச உணர்வு சிங்கள மக்கள் மத்தியிலும் சிங்கள அரசுகளால் திட்டமிட்டு பரப்பப்பட்டு வந்தன. இச்செயற் பாடுகள், ஒரு புறம், சிங்களப் படை இயந்திரத்திற்குச் சவால்விட்டு, பலங்கொண்ட தமிழர் படையாக வளர்ந்து, முன்னெடுக்கப்பட்டு வந்த தமிழர் உரிமைப் போராட்டத்திற்கு, பின்புறமிருந்து மேற்கொள்ளப்பட்ட குள்ளத்தனமான சதித்தாக்குதல்களாக அமைந்திருந்தன.

சிங்கள அரசின் இந்தச் சதித்திட்டங்களுக்கு வாய்ப்பாகச், சர்வதேச ரீதியாக, ஆப்கான் பிரச்சினைக்குப் பின்னர் ஏற்பட்ட மாற்றங்களும் அமைந்துவிடவே, இந்தியா, அமெரிக்கா உள்ளிட்ட சில சர்வதேச நாடுகள் எவ்வித அடிப்படையுமின்றி புலிகள் மீது பயங்கரவாத முத்திரையைக்குத்தின.

தமிழர் போராட்டத்திற்கு ஏற்பட்ட இந்த இக்கட்டான சூழ்நிலையில், தமிழீழ விடு தலைப் புலிகள் மேற்கொண்ட சில அரசியல் - இராஜதந்திர நகர்வு களால், தமிழர் போராட்டத்தைப் பாரிய மக்கள் எழுச்சிகளாக, மக்கள் கையிலெடுக்கும் ஒரு சூழ்நிலை தோற்றுவிக்கப்பட்டது.

தமது போராட்டத்தின் அடிப்படைகள் எவையென்பதை உரத்த குரலில் ஸ்ரீலங்கா அரசுக்கும், சர்வதேச சமூகங்களுக்கும் எடுத்துச் சொல்லி, அதற்காகவே விடுதலைப்புலிகள் தலைமையில் ஆயுதப்போராட்டம் நடைபெறுகின்றது எனவும், எனவே இவ்வழியில், தமிழீழ விடுதலைப்புலிகள், ஈழத்தமிழர்களின் உரிமைகளுக்காகக் குரல்கொடுக்கும், அம்மக்களின் ஏகப்பிரதிநிதிகளேயன்றி, அவர்கள் பயங்கரவாதிகள் அல்லர் எனத் தமிழ் மக்கள் பாரிய எழுச்சிப் போராட்டங்கள் மூலம் தற்போது எடுத்தியம்பி வருகின்றனர்.

தற்போது தேசந்தழுவிய அளவில் முன்னெடுக்கப்பட்டுவரும் இந்தப் பாரிய மக்கள் எழுச்சிப் போராட்டங்களுக்கும், ஆரம்பகாலத்தில், மிதவாதத் தலைமைகளின் கீழ் தமிழ் மக்கள் நடாத்திவந்த சாத்வீகப் போராட்டங்களுக்குமிடையே ஒரு பாரிய வேறுபாடு உண்டு.

அதாவது, முன்பு தமிழ் மக்கள் தமது உரிமைகளுக்காகச் சாத்வீக ரீதியில் அமைதிவழியில் போராடியபோது, அதனை அரச படை இயந்திரத்தின் மூலம் ஸ்ரீலங்கா அரசுகளால் கட்டுப்படுத்த முடிந்தது. அன்று, ஸ்ரீலங்காவின் அரசபடை இயந்திரத்திற்கு முகம் கொடுக்கும் பின்னணிப் பலம் தமிழ் மக்களிடம் இருக்கவில்லை.

ஆனால், இன்று நிலைமை வேறு. தமிழ் மக்களின் பின்னால், அவர்களைப் பாதுகாப்பதற்கென்று ஒரு தமிழர் படை இருக்கின்றது. இனியும் ஆயுத முனையில் தமிழ் மக்களை நசுக்க இந்த அரசு முனையுமானால், அது தமிழர் படையின் ஆயுதங்களுக்குப் பதில் சொல்லியாக வேண்டும். ஒரு வகையில், இந்தத் தமிழர் படையின் பேரெழுச்சியின் முன்னால் மண்டியிட்டே, தற்போது ஸ்ரீலங்கா அரசு தமிழர்களுடன் சமரசம் காண முன்வந்துள்ளது. இந் நிலையில் மீண்டும் ஒருமுறை தமிழர் படையைச் சீண்டிப் பார்க்க ஸ்ரீலங்கா அரசு அவ்வளவு இலகுவில் துணியாது. துணிந்தால் அதுவே அதன் முடிவாகி விடும் என்பதுவும் அதற்குத் தெரியும்.

எனவே, தற்போது ஸ்ரீலங்காப்படை தமிழர் படையினால் முடக்கப்பட்டு, தமிழர் பிரதிநிதிகளால், ஸ்ரீலங்கா அரசுடன் ஓர் போர் நிறுத்தப் புரிந்துணர்வு உடன் படிக்கையும் செய்யப்பட்ட நிலையில், தற்போது தமிழ் மக்கள் சுய நிர்ணய உரிமை, தமிழர் மரபு வழித்தாயகம், புலிகளே ஏகபிரதிநிதிகள் ஆகிய தமது அடிப்படைக் கோரிக்கைகளை, பாரிய மக்களெழுச்சிப் போராட்டங்கள் மூலம் வெளிப்படுத்தி வருகின்றனர். இது தமிழர் போராட்டம் எடுத்துள்ள ஓர் புதிய பரிணாமவளர்ச்சி என்பதுடன், விடுதலைப்போராட்டங்களுக்குப் புலிகள் தலைமையில் தமிழர்கள் வகுத்துள்ள புதிய தோர் இலக்கணமும் கூட.

விடுதலைப்போராட்டங்கள் மக்கள் எழுச்சி மூலமே முன்னெடுக்கப்பட வேண்டும் என்பது மனித வரலாறு கண்ட பல்வேறு விடுதலைப்போராட்ட அனுபவங்களூடும் வகுக்கப்பட்ட ஒரு பொதுக் கோட்பாடாகிவிட்டது. பிரான்ஸ், ரஷ்யா, இந்தியா, சீனா என விடுதலைப் போராட்ட வரலாறுகள் நமக்குக் கற்றுத்தரும் பாடமும் இதுவாகவே இருக்கின்றது.

ஆனால், ஸ்ரீலங்கா அரசு போன்ற, மக்கள் எழுச்சியை ஆயுதமுனையில் கொடூரமாக ஒடுக்கும் மனப்பாங்கு கொண்ட ஒரு மூர்க்கத்தனமான ஆக்கிரமிப்புச் சக்திக்கு முன்னால், வெறும் மக்கள் சக்தி என்கின்ற ஆயுதம் கூர் மழுங்கிய கத்தியாக தன்னைத்தானே மாய்த்துக் கொள்ளும் ஒன்றாகவே அமைந்துவிடும்.

இந்த இடத்தில்தான், வெறுமனே முன்கூறப்பட்ட கோட்பாடுகளை அப்படியே பின்பற்றுபவராக அன்றி ''இயற்கை எனது நண்பன், வாழ்க்கை எனது தத்துவாசிரியன் வரலாறு எனது வழிகாட்டி'' என வாழ்ந்துவரும் தமிழ் மக்களின் தேசியத்தலைவர் பிரபாகரன், ஈழத்தமிழர் விடுதலைப்போராட்டத்தை, அது நடைபெறும் சூழலின் தட்பவெட்ப நிலைகைளுக்கேற்ப புதிய வழிகளில் முன்னெடுத்துச் செல்கின்றார். இந்தக்கள அனுபவத்தோடு வகுக்கப்பட்ட புதிய போராட்ட இலக்கணத் தையே, தற்போதைய தமிழர் எழுச்சிகள் காட்டிவருகின்றன

அதாவது, ''மக்கள் எழுச்சிக்கும் ஓர் ஆயுதப் பின் புலம் தேவை'' என்பதே இப்புதிய இலக்கணமாகிறது. ஆயுதப் போராட்டம் வளர்த்தெடுத்த ஓர் அரசியல் அடித்தளத்திலேயே, தற்போதைய ஈழ்த்தமிழர் அரசியல் போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இது வரலாற்றுக்குத் தமிழர்கள் வழங்கியுள்ள ஒரு புதிய சூத்திரம் என்றால் மிகையில்லை.

கடந்த 19ம் திகதி, தமிழர் தலைநகரமாம், திருகோணமலையில் நடைபெற்ற பொங்கு தமிழ் எழுச்சிப் போராட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போது அமைச்சர் சந்திரசேகரன் கூறியதுபோல, 'தமிழ் மக்களது இந்தப் பேரெழுச்சியை, ஆயுதவழியில் எவராலும் நசுக்க முடியாது. தனது இலக்கை அடையும் வரையில் அது ஓயாது.'

ஆயுதப் போராட்டம் வளர்த்தெடுத்த ஓர் அரசியல் அடித்தளத்திலேயே, தற்போதைய ஈழ்த்தமிழர் அரசியல் போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இது வரலாற்றுக்குத் தமிழர்கள் வழங்கியுள்ள ஒரு புதிய சூத்திரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்களும் கலாசாரமும்

தமிழர் கலாசாரம் பேணப்படுவது தொடர்பான கருத்தாடல்கள், தற்போதைய சூழலில் மீளவும் பரவலாக வலியுறுத்தப்பட்டு வருகிறது.

தமிழர் கலாச்சாரம் பாதுகாக்கப்படவேண்டியது என்பதில் எள்ளவும் சந்தேகமில்லை. பல்வேறு கலாச்சாரங்கள்தாம் எமது மனித குலத்துக்கு பல்விதமான உன்னத கலைகளையும் அறிவுப் பாரம்பரியங்களையும் ஈன்றிருக்கின்றது. உலகத்தில் உள்ள எல்லோரும் ஆங்கிலம் பேசி சேர்ச்சுக்குப் போயிருந்திருந்தால் இன்று எங்களுக்கு ஒரு கம்ப இராமாயணம் இருந்திருக்குமா? அரேபியர்களிடமிருந்து நாம் இன்று பெற்றுக்கொண்டிருக்கும் அற்புத இசை வந்திருக்குமா? ஆபிரிக்கர்களிடமிருந்து உலகம் அதி சிக்கலான தாளலயத்தைப் பெற்றுக் கொண்டிருக்குமா? ஈரானியர்களின் நுண்ணிய கட்டிடக் கலை எமக்குத் தெரிந்திருக்குமா? சீனர்களின் விஞ்ஞானம் எமக்குக் கிட்டியிருக்குமா? இந்த அண்ட சராசரங்களைப் பற்றிய சித்தாந் தத் தத்துவத்தைச் சைவம் தந்திருக்குமா? இந்தப் பூமி இவ்வளவு அற்புதமான ஒரு சிருஷ்டியாக இருப்பது ஏனெனில், பல்லாயிரம் விதமான மக்கள் தொகுதியினர் இதனை அலங்கரிக்கின்றனர் என்பதாலாகும். அவர்கள் தங்கள் வாழ்நிலைகளிலிருந்து பரம்பரை பரம்பரையாக பெற்றுக் கொண்ட அனுபவ அறிவின் மூலமும், அவ்வறிவைத் தங்களுக்குள் பகிர்ந்து கொள்வதனால் கூட்டாக அதனை மேலும் மெருகூட்டக் கூடியதாக இருந்ததனாலும் மகோன்னத பாரம்பரியங்களை உருவாக்கியிருக்கின்றனர். அவர்கள் சிந்தனைகளை அவர்களுடைய குறிப்பிட்ட சமய நம்பிக்கைகள், மற்றும் அவர்கள் சமூகத்தில் காணப்பட்ட உற்பத்தி உறவுகள் ஆகியன செதுக்கியிருக்கின்றன. அதன் வளர்ச்சிக்கு அவர்கள் மொழிக்கட்டமைப்புக்கள் பெரும் உதவி வழங்கியிருக்கின்றன. வாழ்க பல்கலாச்சாரப் பாரம்பரியம் (multi culturalism)! அது இல்லாவிட்டால் மனிதகுலமே ஒன்று விடாமல் ஒரே மாதிரி இயங்கும் இயந்திரப் பொம்மைகள் (Robots) அன்றோ? இதனால் தானே கிறிஸ்தவ குழுக்களும் திருச்சபைகளும் மக்கள் மத்தியில் மதமாற்ற நடவடிக்கைகளை மேற்கொள்வதை கொள்கை ரீதியாக நாம் எதிர்க்கின்றோம்?

ஆகவே ஒரு கலாச்சாரத்திற்கு அதற்கேயுரிய சமயப் பாரம்பரியங்கள் வேண்டும், அதற்குரிய மக்கள் குறிப்பிட்ட வாழ்முறைகள் உடையவர்களாக இருக்க வேண்டும், அதற்கு மேலாக அது ஒரு மொழியைக் கொண்டிருக்க வேண்டும். ஆம், ஒரு கலாச் சாரத்திற்கு அதன் மொழிதான் உயிராகும். எமது அறிவுக்கு உருவம் கொடுப்பதற்கும், அதனைப் பிறருடன் பகிர்ந்து விருத்தி செய்வதற்கும் இதுவே வாகனமாகின்றது. அதனால்தான் எமது மொழியில் நாம் கற்க வேண்டும் என்பதை நாமெல்லோரும் வற்புறுத்த வேண்டும். உயர் வர்க்க தமிழர் மத்தியில் இன்று தமது பிள்ளைகளை சர்வதேசப் பாடசாலைகளில் கல்வி கற்பிக்கும் மோகம் பீடித்திருக்கின்றது. ஆங்கிலக் கல்வி, பிரித்தானிய பாட விதானம் என்று என்னென்னவோ மாயங்களில் மயங்கியிருக்கின்றனர். நவீன சர்வதேச சந்தையுடன் நாம் இணைய வேண்டுமென்றால் ஆங்கிலம் மிக அவசியம். நாமெல்லோரும் அவசியமாக ஆங்கிலத்தைக் கற்றுக் கொள்ளவேண்டும், ஆனால் இரண்டாம் மொழியாக மட்டுமே. எமது பிள்ளைகள் எமது பாரம்பரியங்களையும் வரலாறுகளையும்



கட்டாயம் கற்றுக்கொள்ள வேண்டும். தமிழ் இசையினைப் போற்றி வளர்கக வேண்டும். எமது மொழியினைத் துய முறையில் பேசப் பழகவேண்டும்.

**தமிழை வழங்கு மொழியாக விருத்தி செய்தல்**

இதற்கு நாம் செய்யவேண்டியது என்ன? தமிழை வழங்கு மொழியாக விருத்தி செய்ய வேண்டும். கணனியிலும் விஞ்ஞான மற்றும் சமூகவியல் கருத்தாடல்களிலும் சரளமாக வழங்கக் கூடிய அளவுக்கு அன்றாட உபயோகத்துக்குக் கொண்டு வரவேண்டும். அரசியல், சமூகவியல், கணிதம், விஞ்ஞானம், மனோதத்துவவியல், வைத்தியத் துறை, அபிவிருத்தி, பொறியியல், கட்டிடக்கலை, குடியியல் போன்ற எல்லா விடயங்களிலும் ஆயிரக் கணக்கான ஆய்வு நூல்களை நாம் வெளிக்கொணர வேண்டும். அப்பப்பா, எவ்வளவு வேலைகள் மலை போலக் காத்திருக்கின்றன? பல்கலைக்கழகங்களும் ஆய்வு நிலையங்களும் தொடர்பூடகங் களும் எத்தனை பேரை இதற்கென உருவாக்க வேண்டும்? எமது கல்வியியலாளர்கள் மத்தியில் எவ்வளவு ஆற்றல் விருத்திகளை நாம் செய்ய வேண்டும்? நிறைய வேண்டாம், தமிழில் உள்ள சிறுவர் இலக்கியத்தின் தரம் என்ன என்று கேட்டால், உதட்டைப் பிதுக்கத்தான் சொல்லும். முதலில் அதை விருத்தி செய்ய எவ்வளவு முதலீடு வேண்டும்? ஆனால் இதை யெல்லாம் விட்டுவிட்டு, கலாச்சாரத்துடன் நாம் எங்கு தாவுகின்றோம்? பெண்கள் மீதுதான் தாவுகின்றோம். அவர்கள் என்ன உடை உடுக்கின்றார்கள் என்றுதான் வானத்துக்கும் பூமிக்குமாகக் குதிக்கின்றோம். பெண்கள் உடுக்கும் ஆடையிலா மேலே குறிப்பிட்ட ஆழமான பாரம்பரியங்கள் தொங்குகின்றன? இது ஏன்?

**பெண்கள் மட்டுமே பண்பாட்டின் உறைவிடமா?**

எந்த மக்களினதும் கலாசாரங்கள் ஒருபோதும் ஒரு குறிப்பிட்ட உருவில் உறைந்திருந்தது கிடையாது. அது நீர் போல ஊற்றப்படும் பாத்திரத்திற்கேற்ப தனது உருவத்தை மாற்றிக் கொள்ளும். இதனால், கலாச்சாரம் என்று திட்டமாகக் குறிப்பிடுவதை விட்டு கலாசாரப் பாரம்பரியங்கள் என்று குறிப்பிடுவது கூடிய பொருத்தமாகும். இன்றைய எமது பாரம்பரியம் எமது கடந்த பல்லாயிரம் பாரம்பரியங்களின் கூட்டு விளைவாகும். அது எமது சமூகத்தில் நிகழ்ந்த பொருளாதார மாற்றங்களினாலும், சூழல் மாற்றங்களினாலும், வெளி நாகரீகங்களின் ஆளுமையினாலும் பாதிக்கப்பட்டு மாற்றமடைந்து கொண்டு வந்திருக்கின்றன. தூய கலாச்சாரம் என்ற ஒன்றுமே இல்லையென்றாலும் கூட, ஒவ்வொரு குழுமங்களுக்கும் அவரவர்களுடைய தனித்துவமான வரலாற்றுக்கே பிரத்தியேகமான கலாசாரப் பாரம்பரியம் உண்டு. பெண்களின் ஆடைதான் எங்களுக்குப் பிடித்தமான விடயமெனில் (உலகில் எத்தனையோ மிக முக்கியமான விடயங்கள் இருந்தும்) அதையே உதாரணமாக எடுத்துக்கொள்வோமே. நூற்பது ஆண்டுகளுக்கு முன்னர் யார் ஜீன்ஸ் உடுத்திருப்பார்கள்? நாங்கள் சேலைக்கு இரவிக்கை போடத் தொடங்கியே ஒரு நூறு வருடங்கள்தானே ஆகின்றன? சேலை என்பதே நம்மவருக்கு சாதாரணமாக முன்னூறு வருடத்து

> *பெண்களை சமூகம் தனது கட்டுப்பாட்டில் அடக்கியொடுக்கி வைக்க முற்படும் போது. அந்தநேரம். அது தனது பல் வேறு கலாச்சாரப் பாரம் பரியங்களையும் குடைந்து குடைந்து பார்த்து, பெண்களை உடல் ரீதியாக அடக்கியொடுக்க மிகத் தோதான ஒரு பாரம்பரியத்தினை கொழுவியெடுக்கும். அதுதான் சிறந்தது என்று பாவம் பெண்களையே நம்பச் செய்து, அந்த வட்டத்துக்குள்ளேயே அவர்களை வளைய வரச்செய்து தனது பிடிக்குள் இறுக்கும்.*




ஆடைதானே? அதற்கு முன்னர் எமது மூதாதைப் பெண்கள் பலகாலமாகக் குறுக்குக் கட்டிக்கொண்டுதானே திரிந்தனர்? அதற்கு முன்னர்?.......கச்சை கட்டிக் கொண்டு திரிந்தார்கள். கிறிஸ்தவ மதகுருமார் ஐரோப்பாவிலிருந்து எமது நாடுகளுக்கு

முதலில் வருகை தந்த போது உடை உடுக்காமல் அம்மணமாகத் திரியும் காட்டுமிராண்டிகள் என்றுதான் எம்மை வர்ணித்தனராம். அவர்கள் அவ்வாறு கூறும்வகையில் எமது பெண்கள் இடையில் மட்டும் ஆடை கட்டித் திரிந்த நாட்களும் உண்டு. இவையெல்லாவற்றுக்கும் முன்பு இலை குழை உடுத்துக் கொண்டும் நாம் திரிந்தோம். இலை குழை, குறுக்குக் கட்டு, கச்சை, அரையாடை, பாவாடை சட்டை, இரவிக்கையும் சேலையும், ஏன் ஜீன்ஸ்"ம்கூட தமிழ் மக்களின் கலாச்சாரப் பாரம்பரியங்களைச் சார்ந்த வைதாம். இதில் எதனை எமது தூய கலாச்சாரம் என்று அடித்துக் கூறுவோம்?

கூறமுடியாது. ஆனாலும் கூறுவோம்: எப்போது? பெண்களை சமூகம் தனது கட்டுப்பாட்டில் அடக்கியொடுக்கி வைக்க முற்படும் போது. அந்தநேரம், அது தனது பல்வேறு கலாச்சாரப் பாரம்பரியங்களையும் குடைந்து குடைந்து பார்த்து, பெண்களை உடல் ரீதியாக அடக்கியொடுக்க மிகத் தோதான ஒரு பாரம்பரியத்தினை கொழுவியெடுக்கும். அதுதான் சிறந்தது என்று பாவம் பெண்களையே நம்பச் செய்து, அந்த வட்டத்துக்குள்ளேயே அவர்களை வளைய வரச்செய்து தனது பிடிகுள் இறுக்கும். இல்லாவிடில், ஏன் இதே "கலாச்சாரக் கதை"யை ஆண்களுக்கும் அது அவிழ்த்து விடுவதில்லை? அவர்கள் வேஷ்டித் துண்டில் ஏன் எமது கலாச்சாரங்கள் தொங்குவது கிடையாது? இந்த கபடத்தனம் எம்மவருக்கு மட்டுமே உரித்தானதல்ல. எல்லா நாகரிகங்களிலும் காணப்படுகின்றது. உலகம் முழுவதும் உள்ள பெண்களின் பொதுமையான அனுபவமே இது. முஸ்லிம்களுக்கும் தமது இனத்தின் சுயகௌரவத்தினையும் தனித்துவத்தினையும் உலகுக்கு பிரகடனப்படுத்தத் தேவையிருந்தது. அது நியாயமான உணர்வுதான். ஆனால் அவ்வாறு பிரகடனம் செய்ய அகப்பட்டவர்கள் யார்? வேறுயார், அவர்களுடைய பெண்கள்தான். அதுவரை, நாசூக்காக சேலையை மூடியும் மூடாததுமாக தலையில் சுற்றி நளின அழகு காட்டி வந்தவர்கள், தலை கழுத்து தோள்கள் உடல் எல்லாம் மூடிய ஹிஜா உடுக்க வேண்டியவர்களானார்கள். எமது ஈரலிப்பும் வெப்பமும் கூடிய சுவாத்தியத்தில் அவர்களுக்கு எவ்வளவு அவஸ்தை. வெளியே சென்றால், திரும்ப தமது அறைகளுக்குள் வந்து தங்கள் தலை யுடுப்பினைக் கழற்றி எறிந்துவிட்டு தலையெல்லாம் பறபறவென்ற தேய்த்து விட்டுக் கொள்வார்கள். அவ்வளவுக்கு வியர்வை அரிப் பெடுத்திருக்கும்.

ஆடையில் மட்டுமல்ல. பெண்கள் ஆண்களுடன் பேசலாமா இல்லையா, அவர்களுடன் எந்த வரையறைகளுக்குள் பழகலாம், எந்தக் காரணங்களுக்கு மட்டும் வெளியில் திரியலாம், எந்தத் தொழில்களைப் புரியலாம் என்று எல்லாவற்றிலும், உண்மையாக எல்லாவற்றிலுமே சமூகம் வரை யறைகள் வைத்திருக்கின்றது. சர்வ தேச மனித உரிமைகள் பிரகடனத்தில் மனிதர்களுடைய அடிப் படை உரிமையென்று "சொந்த வாழ்க்கைக்கு உரிமை" (the right to privacy) என்றொன்று உண்டு. ஒவ்வொரு மனிதருக்கும் தமது சொந்த வாழ்க்கையில் தாம் விரும்பியவாறு உண்ணவும் உடுக்க வும் இருக்கவும் உரிமை உண்டு. அந்த சொந்தத் தளத்தில் (private space) தலையிட யாருக்குமே உரிமை கிடையாது. பெண்களுக்கு இந்த எளிமையான அடிப்படை உரிமை கூட நிராகரிக்கப்படுகின்றது.

**இங்கும் தலிபான் கலாசாரமா?**

சமீபத்தில் தமிழ் பத்திரிகையொன்றில் ஒரு செய்தி காணப்பட்டது. கட்டைப் பாவாடை அணி[illegible]ழுங்கையில் சென்ற ஒரு இளம் பெண்ணின் காலில் ஒரு ஆண் சவர பிளேட்டினால் கீறிக் காயம் ஏற்படுத்தினானாம். அந்தப் பெண் அவமானம் தாங்கமாட்டாமல் தற்கொலையும் செய்ய முயற்சித்தாளாம்.

இந்த அவலச் செய்தி உறுதிப்படுத்தப்பட்டதாவென்று தெரியவில்லை. ஆனால், எந்தச் சமூகத்திலும் கிறுக்குப் பிடித்த தீவிரவாதிகள் இருக்கத்தான் செய்கின்றனர். சமூகம் ஒட்டு மொத்தமாகப் போற்றும் விழுமியங்களே இப்படியானவர்களைக் கட்டுப்பாட்டில் வைத்திருக்கின்றன. ஆனால் சமூகமே பெண்கள் என்ன உடுக்கின்றார்கள் என்று காய்ச்சல் கண்ணுடன் பார்க்க ஆரம்பித்து விட்டால் தீவிரவாதிகளின் காட்டில் மழை தான். ஏற்கனவே சற்றுப் பிசகிய மூளையுடன் இருப்பவர்கள் இப்போது சந்தோஷமாக சவர பிளேட் டுடன் உலா வரலாமே. என்ன, தலிபான் கலாசாரத்தையா நாங்கள் இப்போது தமிழ் பேசும் மக்கள் கலாச்சாரமாக ஆக்கத் திட்டமிட்டிருக்கின்றோம்?

தமிழ் பேசும் மக்களைப் பொறுத்தவரையில் இனிவரும் காலம் மிக முக்கியமானதாகும். நாம் புதிய சமூக, அரசியல் கட்டமைப்புக்களை நிறுவக்கூடிய வாய்ப்பு எம்மை நெருங்கி வந்து கொண்டி ருக்கின்றது. இப்புதிய கட்டமைப்பில் உண்மையான ஜனநாயகமும் சமத்துவமும் அமைய வேண்டில், முதலில் பெண்களுக்கு அவர்கள் உரிமைகள் உறுதிப்படுத்தப்படும் கௌரவமான அந்தஸ்து வழங்கப் படவேண்டும். பெண் ஒடுக்கு முறையே சமூகத்தின் மிக அடிப் படையான முரண்பாடாகும். அதுதான் மனிதர்கள் மத்தியில் ஆதிக்கக் கலாச்சாரத்தினை நிலை நாட்டியது. இந்த ஆதிக்கக் கலாசாரத்தையொட்டித்தான் வர்க்கம், சாதி, இனம் போன்ற பாகுபாடுகள் உருவாகின. ஆகவே பெண்ணொடுக்கு முறை யைத் தீர்க்காமல் நாம் எந்த வகையிலும் நீதியான சமூகத்தை உருவாக்க முடியாது. ஒரு புதிய உலகத்தை சிருஷ்டிக்க வரலாறு தரும் இந்த பொன்னான வாய்ப்பினை முட்டாள்தனமாக நாம்சாக்கடையில் விட்டெறியக் கூடாது. பெண்கள் உரிமைகளை நாம் பேணுவோம். அவர்களும் மனிதர்களே.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தமிழர்களின் பிரச்சினைத் தீர்வுக்கு துணை புரிந்த ஜூலைக் கலவரம்

1983 யூலைக் கலவரம். இலங்கையில் புதிய அத்தியாயத்தினை தொடக்கி வைத்தது. தமிழர்கள் ஒன்றுபட்டு ஓர் இலட்சியத்திற்காக பாடுபட வேண்டியதை உணர்த்தி நின்றது.

13 வது திருத்த சட்டம் அரசியல் யாப்பில் கொண்டு வரப்பட்டது. இதன் மூலம் ஸ்ரீலங்கா பாராளுமன்றத்தில் காணப்பட்டிருந்த தமிழர் பிரதிநிதித்துவத்திற்கு ஆப்பு வைக்கப்பட்டது. தமிழர்களுக்கெதிராக கொண்டு வரப்பட்ட முக்கிய சட்டரீதியான நடவடிக்கை இதுவாகும்.

மறுபக்கம் ஈழத்தமிழரின் பிரச்சினையானது சர்வதேச முக்கியத்துவத்தையும் அடைந்து கொண்டது.

மிக முக்கியமானது, அதுவரை அகிம்சா ரீதியிலேயே போராட்டங்கள் நடாத்தப்பட்டன. அவை பெருமளவில் வெற்றியளித்திருக்கவில்லை. அதற்குரிய மரியாதையையும் பேரினவாத அரசாங்கங்கள் வழங்கவும் இல்லை.

இந்தியாவின் தலையீடும் ஏற்பட்டுக்கொண்டது. எனவே யூலைக் கலவரம் புதிய அத்தியாயதின் தொடக்கத்திற்கு துணை புரிந்து கொண்டது.

எனவே, யூலைக்கலவரத்தினைத் தொடர்ந்து தமிழர் பிரச்சனை தொடர்பான அரசியல் தீர்வின் அவசியத்தை இந்தியா இலங்கைக்கு



உணர்த்த தொடங்கிற்று. இதன் விளைவாக பல பேச்சுவார்த்தைகள், மாநாடுகள். நடாத்தப்பட்டிருந்தன.

அத்தகைய தீர்வு வடிவங்களில் ஒன்றுதான் இந்த 'திம்பு மாநாடு- 1985' இதுவரை நடாத்தப்பட்ட இணக்கப் பாடுகள் எல்லாம் தமிழர் சார்பு மிதவாதிகளுடன் தான் பேசப்பட்டு

நடாத்தியிருந்தார். இதன் விளைவு, 1985 யூன் 18 ஆம் நாள் முதல் 3 மாதங்களுக்கு யுத்த நிறுத்தமொன்றைக் கடைப்பிடிக்குமாறு இந்தியா போராளி அமைப்புக்களை வலியுத்திற்று, யுத்த நிறுத்த மீறல்களை கண்காணிப்பதற்கென 'யுத்த நிறுத்தக் கண்காணிப்புக்குழு' ஒன்றும் உருவாக்கப்பட்டிருந்தது.

காட்டும் உண்மையாகும். ஆனால். திம்பு மாநாட்டில் சற்று இறுக்கமாக போராளி அமைப்புக்களால் இக்கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டிருந்தன.

1985 யூலை 14 ஆம் நாள் முதலாவது அமர்வு ஒத்தி வைக்கப்பட்டது. தமிழ்க் குழுக்களின் கோரிக்கைகளை ஜனாதிபதி ஜேஆர் ஏற்க மறுத்து விட்டார் என்ற செய்தி கிடைக்கப் பெற்றிருந்தது. இதனால் மாநாட்டின் ஸ்திரத்தன்மையும் நம்பிக்கையும் குறை வடையலாயிற்று.

இருந்தும் தமிழர் அமைப்பு உறுப்பினர்கள் மாநாட்டில் பங்கு பற்றிக் கொண்டிருந்தனர். வவுனியாவில் சிங்கள சிப்பாய்களினால் நூற்றுக்கு மேற்பட்ட தமிழர்கள் கொடுரமாகக் கொலை செய்யப்பட்டிருந்தனர்.

யுத்த நிறுத்தம் அமுலில் இருந்த வேளையில் இவ்வாறான கொடூர சம்பவம் நடைபெற்றுள்ளது.

தமிழ் பிரச்சனைக்கு தீர்வுகாணும் வகையில் பேச்சுவார்த்தை நடந்து கொண்டிருந்த வேளையில் திட்டமிட்ட வகையில் நடைபெற்ற இனப்படுகொலையினைக் கண்டு கொண்டு, தொடர்ந்து இனப்பிரச்சனை தொடர்பாக பேசுவதில் அர்த்தமில்லை என்று கூறி மாநாட்டினை தமிழர் அமைப்புப் பிரதிநிதிகள் 1985 ஆகஸ்ட் 22 முதல் பகிஷ்கரித்துக் கொண்டனர்.

இதனைத் தொடர்ந்து மாநாட்டினைத் தொடர்ச்சியாக நடாத்துவதற்கும், அதில் தமிழர் அமைப்பு உறுப்பினர்களை பங்குபற்றச் செயவதற்கும், வெளியுறவுச் செயலர் திரு.ரொமேஸ் பண்டாரி முயற்சித்தார். அவரின் முயற்சிகள் அனைத்தும் தோல்வியில் முடிவடைந்தன. அதுமட்டுமல்ல தமிழர் அமைப்பு உறுப்பினர்கள் பண்டாரியின் கோரிக்கையினை முற்றாக புறக்கணித்தனர். இந்த இடத்திலிருந்தே போராளி அமைப்புகளுக்கும் இந்தியாவிற்குமிடையிலான

## திம்பு மாநாடு - 1985

முன்னைய எனது கட்டு ரைகளில் தோல்வியடைந்த காந்தி வழிப் போராட்டங்கள் பற்றிக் குறிப்பிட்டுள்ளேன். எனவே போராட்டவடிவத்தை மாற்ற வேண்டியது காலத்தின் தேவையாகியது. அது மாற்றப்பட்டது. அதாவது ஆயுதப்

வந்தன. ஆனால் நிலமை இப்போது மாறுபட்டதாகக் காணப்பட்டது. போராளி அமைப்புகளுடன் முதன்முதலாக நேரடியாகப் பேசப்பட்டது. இது இந்த மாநாட்டினை மேலும் முக்கியத்துவப் படுத்திற்று. அத்தோடு ஆயுதப்போராட்டத்தை நியாயப்

மற்றோர் விடயமாகும்.

சிங்களவர் தமிழர் ஆகியோருக்கிடையிலான பிரச்சனையைத் பேசித் தீர்த்துக் கொள்வதற்கு வெளிநாட்டு மத்தியஸ்தத்துடன் வெளிநாடு ஒன்றில் பேச்சுவார்த்தை தொடங்கப்பட்டது. பூட்டான் நாட்டின்

**எனவே, யூலைக்கலவரத்தினைத் தொடர்ந்து தமிழர் பிரச்சனை தொடர்பான அரசியல் தீர்வின் அவசியத்தை இந்தியா இலங்கைக்கு உணர்த்தத் தொடங்கிற்று.**

போராட்டம் வலுப்பெற்றுக் கொண்டது. ஏராளமான தமிழ் இளைஞர்கள் தேசியவாத நோக்கில் ஆயுதம் தாங்கிய இயக்கங்களுடன் இணைந்து கொண்டனர். காலத்துக்குக்காலம் பல்வேறு வகையான பிரச்சனைகளுக்கு முகம் கொடுத்த கிழக்குவாழ் இளைஞர் யுவதிகளின் பங்களிப்பு கணிசமானளவு காணப்பட்டது என்பது மறுக்க முடியாத உண்மையாகும். இது 1983 யூலைக் கலவரத்தின் முக்கிய விளைவுகளில் ஒன்றாகும்.

சிங்கள தமிழ் இனக் கலவரத்தின் மூலம் தமிழர்கள் விலைமதிப்பற்ற உயிர்கள், உடமைகள், பண்பாட்டம்சங்கள், மரபுகள் என்பனவற்றை இழந்து கொண்டனர். அது மட்டுமல்ல உள் நாட்டிற்குள்ளும், வெளிநாடுகளிலும் இடம்

**எஸ்.கே.சிவகணேசன்**

பெயர்ந்து வாழ வேண்டியும் ஏற்பட்டது. சர்வதேசம் முழுவதிலும் 'அகதி' என தமிழர் அழைக்கப்படவும் வழிவகுத்தது. இனக்கலவரம் இதனால்தான் 'சுதந்திர தாயகம்' தொடர்பான எண்ணக் கருவலுப்பெற்று வளர்ந்து கொண்டது.

அதுமட்டுமல்ல இந்திய புவியியல் அரசியல், ரீதியில், இலங்கை மீது செல்வாக்கு செலுத்துவதற்கும் யூலைக் கலவரம் வழிசமைத்துக் கொடுத்தது. தமிழர் பிரச்சினையை சாட்டாகக் கொண்டு, புவியியல் ரீதியான தன் நலன்களை உறுதிப்படுத்திக் கொள்ளும் வகையில்

படுத்திற்று.

1984 ஒக்ரோபர் மாதம் அன்னை இந்திரா காந்தி சுட்டுக்கொல்லப்பட்டார். இதனை அடுத்து வந்த தேர்தலில் வெற்றி பெற்ற ராஜீவ் காந்தி இந்தியப் பிரதமராக செயற்பட்டு கொண்டார். இலங்கை இனப் பிரச்சனை தொடர்பாக தன் தாயிலும் சற்று மாறுபட்ட கொள்கையினை இவர் கடைப்பிடிக்கலானார்.

இலங்கை அரசுடன் இணக்கப் பாட்டினை ஏற்படுத்துமாறு தமிழர் அமைப்புக்களை ராஜீவ் காந்தி வலியுறுத்தினார். இந்த வகையில் இந்தியாவின் பிரதமர் கூட்டணியினருடன் பேச்சு நடாத்தினார்.

இச் சந்திப்பின் போது முக்கிய விடயங்கள் தொடர்பாக, தமது நிலைப்பாட்டினை இந்தியா தெரிவித்து விட்டது.

ஒரு போதும் தமிழர் பிரச்சனையைத் தீர்த்துக் கொள்ளும் வகையில், இந்தியா, இராணுவ தலையீட்டினை மேற்கொள்ளமாட்டாது என்பது ஒன்றாகும்.

இரண்டாவது இலங்கையின் ஒற்றையாட்சிக்குட்பட்ட வகையிலேயே சுமூகமான தீர்வுகாண முயற்சிக்கப்படும். பிரிவினை என்பதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

இந்தியாவின் மாநிலங்களுக்கு உள்ள அதிகாரங்களுக்கு மேற்படாத அதிகார பிரிப்பு முறை மூலம் தமிழர் பிரச்சினைக்கு தீர்வுகாணப்படும். என்பது மூன்றாவது நிபந்தனையாகும்.

பேச்சு வார்த்தைக்கு முன்னோடியாக இலங்கை ஜனாதிபதி, பிரதமர் ராஜீவ் காந்தியுடன் பேச்சுக்களை

தலை நகர் திம்பு. இங்குதான் இலங்கை அரசும் பிரதி நிதிகளும், தமிழ் போராளி அமைப்பு பிரதிநிதிகளும் 1985 யூலை 8 ஆம் நாள் நேருக்கு நேர் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டுக் கொண்டனர். இதுவே இன்று வரை 'திம்பு மாநாடு' அல்லது திம்பு பேச்சு வார்த்தை' என முக்கியத்துவப்படுத்தி பேசப்பட்டு வருகின்றது.

போராளி அமைப்புக்கள், கூட்டணி என்பனவற்றிலிருந்து தலா இரண்டு அங்கத்தவர்கள் மாநாட்டில் கலந்து கொண்டனர். இலங்கை அரசின் சார்பில், அப்போதைய ஜனாதிபதியின் சகோதரன் எஸ்.டபிள்யு ஜயவர்த்தனா தலமையிலான குழு பங்கு பற்றியிருந்தது. இந்தியக் குழு அவதானிப்பாளராக கலந்து கொண்டது.

தமிழ் சார்ப்புக் குழுக்களினால் நான்கு அம்சக்கோரிக்கைகள் மாநாட்டில் முன்வைக்கப்பட்டன.

**(அ) இலங்கைத் தமிழர்களை தேசிய இனமாக அங்கீகரிக்க வேண்டும்.**

**(ஆ) தமிழர்கள் செறிந்து வாழும் பிராந்தியங்களை தமிழர் தாயகமாக அங்கீகரிக்க வேண்டும்.**

**(இ) தமிழர்களின் நீதியான சுயநிர்ணய உரிமையினை அங்கீகரிக்க வேண்டும்.**

**(ஈ) இலங்கை வாழ் தமிழர்கள் அனைவருக்கும் குடியுரிமையளிக்க முன்வர வேண்டும்.**

இத்தகைய கோரிக்கை திம்பு மாநாட்டில் தான் முதன் முதலாக முன்வைக்கப்பட்டவையல்ல. மாறாக 1949, இல் எஸ்.ஜே.வி. செல்வநாயகம் அவர்களால் முன்வைக்கப்பட்டிருந்தன என்பது குறிப்பிடத்தக்கது. அதாவது, தமிழ்த்தேசிய இனம், மரபுவழித்தாயகம், சுயநிர்ணய உரிமை எனும் மூன்று [illegible] அவரால் முன்வைக்கப்பட்டி[illegible] என்பது வரலாற்றுத் தகவல்கள்

**போராட்டவடிவத்தை மாற்ற வேண்டியது காலத்தின் தேவையாகியது. அது மாற்றப்பட்டது. அதாவது ஆயுதப் போராட்டம் வலுப்பெற்றுக் கொண்டது.**

முரண்பாடுகள் ஆரம்பமாயிற்று எனலாம்.

ராஜீவ் காந்தி அவர்கள், போராளி அமைப்புகளின் உறுப்பினர்கள் சிலபேரைக் கூட சந்திக்க மேற்கொண்ட முயற்சிகள் கூட பலனளிக்கவில்லை.

இதனால் ஆத்திரம் கொண்டு, போராளி அமைப்புக்களின் தலைவர்கள் சிலபேரை நாடு கடத்துவதற்கான உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தது. இந்த நாடுகடத்தலில் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் திரு.சி.சந்திரஹசன், திரு. எஸ்.சந்தியேந்திரா என்போர் உள்ளடக்கப்பட்டனர்.

எனவே திம்பு மாநாடு அதுவரை தமிழர் பிரச்சனைக்கு தீர்வாக கொண்டு வரப்பட்டு கைவிடப்பட்ட தீர்வுத் திட்டங்களோடு ஒன்றாகிப்போய் விட்டது.

திரு.ரணில் விக்கிரமசிங்க அவர்கள் திம்புக் கோட்பாட்டின் அடிப்படையில் தீர்வு காண்பதில் கவனம் செலுத்துவாரா? அல்லது குறைந்த பட்சமாக, வேறு வகையான தீர்வுத் திட்டங்களோடு அலைவாரா? என்பதற்கு காலம் தான் பதில் சொல்லப்போகிறது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இன்று நான் அழப்போவதில்லை

விடுதலைப் போராட்டத்தின் உயிரோட்டமான போர்க் குணாம்சத்தைப் பாதுகாப்பதாக மக்கள் எழுச்சிகளே முக்கிய பங்கு வகித்தமை வரலாறு. அவ்வாறான எழுச்சிகளை, அரசியல் விழிப் புணர்வைத் திடப்படுத்தி அடுத்தகட்ட அரசியல் போராட்டங்களுக்கு முன்னகர்த்தியமையும் தான் வெற்றியை அத் தேசங்களில் விரை வாக்கியிருந்தது.

இதனிலும் உயரிய வரலாற்றைப் படைத்து நிற்கும் நாம் பொங்கு தமிழ் முதலான தேசம் தழுவிய மக்கள் எழுச்சியை வியாபிக்கச் செய்வதுடன் அரசியல் விழிப்புணர்வு நிரம்பப் பெற்றவர்களாக எம்மை மாற்றமுறச் செய்யவும் வேண்டும்.

''போர் ஓயலாம், போராட்டம் ஓயக்கூடாது'' என்பதன் அர்த்தத்தை முழுமையாக உள் வாங்கிச் செயற்படுத்துவோம். மீள மீள நாம் இப் பத்தியினூடாக வலியுத்துகின்ற ''என்றும் விழிப்பு ணர்ச்சியோடு இருப்பதுதான் நாம் விடுதலைக்கும் கொடுக்கும் விலை'' என்ற வரலாற்றுக் குரலின் தாற்பரியத்தையும் திறம்பட வெளிப்படுத்துவது, பேச்சுக்கான பேச்சுக் கள் நிகழவுள்ள காலகட்டத்தில் மிக அவசியமாகின்றது.

**கோ.துரைகுமாரன்**

கியூப சுதந்திரப் போராட் டத்தின் தலைவரும் தற்போதைய கியூப அதிபருமான ஃபிடல் காஸ்ரோ (1994 இல் சர்வதேச கியூப ஆதரவு மாநாட்டில்) தெரிவித்த சில கருத்துக்கள் இன்றைய சூழலில் சிந்திக்கத் தேவையா வ தைப் பாருங்கள்.

''நாம் மாற்றத்தை செய்யப் போகிறோம். அதற்காக எந்தக் காரணத்தைக் கொண்டும் சுதந்திரத் தையும், சுயாதிபத்தி யத்தையும் விட்டுக் கொடுக்கப் போவதில்லை.

''இன்றைய கால கட்டத்தில் பல்வேறு வாய்ப்புக்களை நாம் பெற்றிருக்கின்றோம். சுதந்திரத்திற்கான வாய்ப்பு, சுய சார்ப்புக்கான வாய்ப்பு, விடுதலைக்கான வாய்ப்பு, சமூக நீதிக்கான வாய்ப்பு என்று அனைத்து வாய்ப்புக்களையும் நாம் பெற்றிருக்கிறோம்.

**எழுச்சிக்குரல்**

''நாங்கள் எங்கள் தேசத்தைக் காக்க வேண்டும், நாங்கள் புரட்சியைக் காக்க வேண்டும் புரட்சியை எந்த விலை கொடுத்தேனும் காப்போம், அதற் காக உயிரையே கொடுப்பதனாலும்''

இவ்வாறான வரலாற்று மேற்கோள்களூடாக மக்கள் மட்டுமே வரலாற்றை நிர்ணயிப் பவர்கள் என்பதை உள்ளுணர்ந்தவாறு தேச விடுதலைக்கான எமது பங்களிப்பை பல வகையினூடும் நல்குவோம்.

இவ்வார ''எழுச்சிக் குரல்'' ஆக த.மலர்ச்செல்வன் (ஆரையம்பதி) எழுதிய ''நான் போகிறேன் யாரும் தேட வேண் டாம்'' என்ற கவிதை ஒலிக்கின்றது. தமிழீழ விடுதலைப் புலிகளின் கலை பண்பாட்டுக் கழகத்தின் வெளியீடான ''வெளிச்சம்'' சஞ்சிகையின் பவள இதழில் இருந்து இக் கவிதை நன்றியுடன் பெறப்படுகின்றது.

**''அழப் போவதில்லை**
**நேற்றுச் செத்த நண்பனுக்காய்**
**இன்று நான் அழப்போவதில்லை.**

**தொண்டையடைக்க**
**துயர் கொண்டெழ**
**ஆடுமாடாய்**
**அடைபடப் போவது மில்லை**

**இனி என் தருணம் வந்து விட்டது**
**எத்தனை நாளைக்கு ஆமை வாழ்வு?**
**சொல்லுங்கள்**

**போகிறேன்**
**என் ஊர்**
**என் உறவு**
**என் பாசம்**
**நான் வளர்த்த மரங்கள்**
**யாவற்றையும் விட்டு**
**...மீட்புக்காய்**
**நான் போகிறேன்'**

**அம்மா!**
**என்னைத் தேடித்**
**தெருத்தெருவாய்**
**அலைய வேண்டாம்**

**அப்பா!**
**உணர்ச்சி பொங்கி**
**உறைய வேண்டாம்!**

**தம்பி, தங்கைகளே!**
**பாசம் கொண்டு**
**கதறியழ வேண்டாம்!**
**அண்ணன் வருவான்,**
**ஒரு கால்**
**தங்கச்சிக்குத் தாவணியும் பாவாடையும்**
**தம்பிக்கு,**
**பச்சைப் புள்ளி போட்ட ரீ சேட்டும்**
**கறுத்த காற்சட்டையும்**
**வாங்கி,**
**அண்ணன் ஒருகால் வருவான்.**

**நான் போகிறேன்**
**யாரும் தேடவேண்டாம்**

**மஞ்சந் தொடுவாய்**
**செக்பொயின்றில்,**
**நேற்றுச் செத்துப்போன நண்பனாய்,**
**நானும் மாளவிரும்பவில்லை**

**என் தேசம் என் இனம் நோக்கிப் போகிறேன்**
**யாரும் தேட வேண்டாம்''!**

# சகலகலாவல்லவன் ஈழத்து நாதனின் அதிகார துஷ்பிரயோகங்கள்

(சென்றவாரத் தொடர்ச்சி....)

தங்கத்துரை அவர்களால் குறையாக விடப்பட்ட பணிகளைப் பூர்த்தி செய்வதில் தன் கவனத்தைச் செலுத்தினார். அபிவிருத்தி பணிகள் மாத்திரமல்லாது நியமனங்கள் விடயத்தில் கூட தங்கத்துரை அவர்களின் எண்ணத்துக்கு ஊறு நேராதவாறு கவனித்துக் கொண்டார். தங்கத்துரை பற்றிய விமர்சனங்களைக் கட்சி உறுப்பினர்கள் மேற் கொள்ளும் போதெல்லாம் இறந்த ஒருவனைப்பற்றி விமர்சனம் செய்வது பண்பான செய்கையல்ல என்று ஒரே வார்த்தையில் முற்றுப்புள்ளி வைத்துவிடும் பழக்கத்தைக் கைக் கொண்டிருந்தார்.

இரா.சம்பந்தன் பாராளுமன்ற உறுப்பினராகப் பதவியேற்ற பின் கட்சியின் மாவட்டக்கிளை சுறுசுறுப்பாக இயங்கத் தொடங்கி இரா.சம்பந்தன் அவர்களும் கட்சி கிளையின் அபிப்பிராயங்களையும் பெற்றே செயல்பட்டார். தனது குறுகிய பதவிக்கால எல்லைக்குள் பதின் மூன்றரைக் கோடி ரூபா பெறுமதியான அபிவிருத்தித் திட்டங்களைச் செய்து முடித்திருந்தார் என்பது போற்றத்தக்க ஒன்றாக இருந்தது. இவரது அபிவிருத்திப் பணிகள் கட்சி உறுப்பினர்களிடம் அவ்வப்போது பேச்சுவாக்கில் தெரியப்படுத்தப்பட்டு இருந்தபோதிலும் முழுமையான ஆவணமாக அவர் வெளிப்படுத்தாமல் விட்டது பிற்காலத்தில் கட்சிக்குப் பாரிய பின்னடைவை ஏற்படுத்தக் காரணமாயமைந்ததையும் இங்கே குறிப்பிட்டாக வேண்டும்.

## அரசியலில் ஓர் எழுத்தாளரின் அனுபவம்



இது மாத்திரமல்ல கட்சியின் அடுத்த தேர்தல் நடவடிக்கைகளுக்கு உகந்த சூழலை அரசியல் வாதியாக நின்று தோற்றுவிக்காமல் விட்டதையும் அவன் சம்பந்தன் மேற்கண்ட குறைபாடாகவே கருதுகிறான். தன்னை விளம்பரப்படுத்தும் நடவடிக்கை சம்பந்தன் அறவே செய்திருக்கவில்லை. தனக்குத் துணையாக நின்றவர்களின் தேவைகளை அறியவோ அவர்களுக்கு வலிந்து உதவி செய்யவோ அவர் தவறியிருந்தார். தூர நின்றவர்களும் கட்சி ஆதரவாளர்களாக இல்லாதவர்களும் அவரிடம் அடிக்கடி வந்து பெற்றுக்கொண்ட உதவிகள் பட்டியலாக நிற்கின்ற அதேசமயம் உடனிருந்தவர்கள் கௌரவம் கருதி எதையும் கேட்காமல் இருந்ததாலோ என்னவோ ஒரு சிலரைத் தவிர ஏனையோர் அனேகமாக எதையும் பெற்றுக் கொள்ளாதவர்களா கவே இருந்தார்கள். இந்த நிலைப்பாடு சம்பந்தனுக்கு ஒரு விதத்தில் பலமாகவும் இருந்தது.

காலப் போக்கில் சம்பந்தன் பாராளுமன்ற உறுப்பினரான பின் கிளைத் தலைமையின் போக்கில் மாறுபாடுகள் தோன்றுவதை அவன் அவதானித்தபோதிலும் அதையிட்டுப் பெரிது படுத்தாமலிருந்தான். கிளைத் தலைவராக ஈழத்து நாதன் இருந்தார். அவனின் காலத்துக்கு முன்பே கட்சியில் இணைந்து நேர்மையாக உழைத்து வந்தார். சிறந்த பேச்சாளர் தர்க்க ரீதியாக நியாயங்களைக் கேட்போர் மனதில் பதிய வைக்கக்கூடியவர் என்ற பெருமைகளை அவரின் எதிரா ளிகள் கூட மறுக்க மாட்டார்கள். ஈழத்து நாதனுடைய நேர்மை கட்சிக்காக அவர் ஆற்றிய உழைப்பு என்பவற்றிற்கு மேலாக அவன் தனிப்பட்ட வகையில் அவர் மேல் அபரிதமான மதிப்பு வைத்திருந்தமை போன்ற காரணங்கள் அவனைச் சந்தேகம் கொள்ளாமற் தடுத்திருந்தன. எனவே நல்ல இயல்பு கொண்ட மனிதர் நல்ல தலைவராகவும் செயல்படுவார் என்ற நம்பிக்கையில் அவன் இருந்தான்.

**அருண்**

ஆனால் ஈழத்து நாதான் நல்ல தலைவராக இருப்பதில் சில நாட்கள் தடுமாற்றம் கண்டு விட்டார் என்பதை அவன் பின்னால் உணர்ந்து கொண்டான். இந்தத் தடுமாற்றம் சுமார் நாற்பது ஆண்டுகளாக ஈழத்து நாதன் கட்டி வளர்த்த இமேஜ் தவிடு பொடியாகக் காரணமாயிற்று. கட்சிக்கு வெளியிலுள்ளோர் சம்பந்தன் அவர்களைத் தாறுமாறாக விமர்சிக்கக் காரணமாயிற்று. கட்சிக்குச் சேறு பூசக் காத்திருந்தவர்களுக்கு கரும்பு கிடைத்தது போலாயிற்று. கிளையின் உறுப்பினர்கள் கூட அணிபிரியத் துணையாயிற்று. ஏன் இரண்டாயிரமாம் ஆண்டுத் தேர்தலில் திருகோணமலை மாவட்டத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு எதிராக முன் வைக்கப்பட்டு பாரிய பிரச்சாரமாகவும் அது மாறி முதன் முதலாக ஆசனத்தைப் பறிகொடுக்கும் அவலத்துக்கும் வழிகோலிற்று.

ஈழத்து நாதனின் அரசியல் சரிவு வேலை வாய்ப்பு என்ற போர்வையில் வந்து சேர்ந்தது. இரா.சம்பந்தன் அவர்களுக்கு இலங்கைத் துறைமுக அதிகார சபையில் சில வேலை வாய்ப்புக்கள் பெற்றுக்கொடுக்கக் கூடிய சந்தர்ப்பமொன்று வந்தது. இது 1999 இன் ஆரம்பப் பகுதி என அவனுக்கு ஞாபகம். இப் பொறுப்பைக் கிளைத் தலைவர் என்ற வகையில் ஈழத்து நாதனிடம் அவர் ஒப்படைத்திருக்கிறார். ஏற்கனவே தங்கத்துரை அவர்கள் தன் காலத்தில் வேலை வாய்ப்புக்களைக் கிளைத் தலைமையுடன் கலந்தாலோசிக்காமல் செய்து வந்தார் என்ற குற்றச்சாட்டு இருந்து வந்தமையும் பாராளுமன்ற உறுப்பினரை இவ்வாறு செய்யத் தூண்டியிருக்கலாம்.

தங்கத்துரை வேலை வாய்ப்புக்கான நியமனங்களை தன்னிஷ்டப்படியும், தன்னைச் சூழவிருந்த கைத்தடிகளின் ஆலோசனைப் படியும் செய்து வந்ததைக் கட்சிக் கிளை ஏற்றுக் கொள்ளவில்லை. அதற்கான நியாயமான காரணங்களையும். கட்சிக் கிளை முன் வைத்தது. மக்களிடையே உண்மையாக ஊடுருவி, நிற்பவர்கள் கட்சிக் கிளையின் உறுப்பினர்களேயன்றி பாராளுமன்ற உறுப்பினரோ அவரைச் சுற்றி நின்று நன்மை பெறுபவர்களோ அல்லர். கட்சியின் வாக்குப் பலத்தை பேணுவதுடன் தொண்டர்களாகவும் இயங்கி கிளை உறுப்பினர்களிடம் ஆலோசனை பெறாமல் செய்யப்படும் நியமனங்கள் சரியான இடங்களைச் சென்றடைவதில்லை. இது கட்சிக்குள்ள ஆதரவை சிதைத்து விடும் என்றெல்லாம் சரியாகவே காரணங்கள் கூறப்பட்டன. அவனும் இக் கூற்றுக்களை முற்றுமுழுதாக ஏற்றிருந்தான்.

இத்தகைய காரணங்களை ஈழத்து நாதன் முன் வைத்து தங்கத்துரை பிழை விடுகிறார் என்று தர்க்கரீதியாக நிரூபித்து வந்தார். தனது நிருபணங்களுக்குத் துணையாக நியமனங்கள் பெற்றுக் கொண்ட சிலரின் பெயர்களையும் குறிப்பிட்டு அவர்கள் தமிழர் ,விடுதலைக் கூட்டணியிடம் உதவி பெற எவ்வகையிலும் அருகதை இல்லாதவர்கள் என்றும் வலுச் சேர்த்து வந்தார். இத்தகைய விமர்சனங்கள் தனக்கெதிராக எழக் கூடாதென்று தற்காப்பு உணர்வாலும் சரியானதைச் செய்யவேண்டுமென்ற உந்துதலாலும் சம்பந்தன் துறைமுக அதிகார சபை நியமனங்களுக்காக உரிய பெயர்களைத் தர நடவடிக்கை எடுக்கும்படி கட்சியின் மாவட்டக் கிளைத் தலைவர் ஈழத்து நாதனிடம் கேட்டுக்கொண்டிருந்தார். ஈழத்து நாதன் தனக்குத் தரப்பட்ட அதிகாரத்தைச் சரியான முறையில் பயன்படுத்த வேண்டும் என்ற எண்ணத்தைக் கொண்டிருக்கவில்லை. இவ்வெண்ணம் அவரையறியாமல் ஏற்பட்டதென்று அவன் எப்போதும் கூறத் தயாராக இல்லை. அறிவும் அனுபவமும் நிறைந்த ஈழத்துநாதன் திட்மிட்டேதான் இப்படி நடந்து கொண்டார் என்பதில் அவனுக்கு இன்றுவரை சந்தேகம் கிடையாது. சுமார் எழுபது நியமனங்கள் விடயத்தில் ஈழத்துநாதன் தன்னை ஒரு சகலகலாவல்லவனாகப் பாவித்து அதிகாரத்தைத் துஷ்பிரயோகம் செய்திருக்கிறார்.

இரா.சம்பந்தன் அப்போது திருக்கோணமலையில் தங்குவது குறைவாக இருந்தது. அரசியல் காரணங்களுக்காக அவருக்கு உயிராபத்து ஏற்படலாம் என்ற அச்சம் பரவலாக இருந்தது. இந்த நியாயமான அச்சத்தை ஒரு சிலர் திட்டமிட்டு சம்பந்தரிடம் பூதகரமாக்கித் தங்கள் காரியங்களைச் செய்வதற்காக மக்களிடமிருந்து அவரைத் தூரப் பிரிந்து வைத்திருந்தார்களோ, என்று பிற்காலத்தில் அவன் எண்ணுமளவுக்கு சம்பந்தனின் திருக்கோணமலை விஜயம் குறைவாகவே இருந்தது அது மாத்திரமல்ல இரகசியமாகவும் இருந்தது.

(அடுத்தவாரம் தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

JAFFNA



# பொங்கும் மலையில் 'பொங்கு தமிழ்'

"அழுகையும் சிரிப்பும் அனைவருக்கும் உரியது ஏன் அழுகை மாத்திரம் நமக்கு நிரந்தரமானது?"

மேலே கூறப்பட்ட வாசகம் ஈழத்தமிழன் ஒவ்வொருவனது மனதிலும் எழுப்பப்படும் கேள்வி இயற்கையாக மனிதனுக்குக் கிடைக்கும் சூரிய ஒளியும், இளந்தென்றலும் அனைவருக்கும் உரியதென்றால் கருத்துக் கூறவும், சிந்திக்கவும், பேசவும், நடமாடவும் மட்டும் மனிதனுக்குக் கட்டுப்பாடு ஏன்?

இந்தக் கேள்வி மனதிலே கனன்று கொண்டிருந்த நிலையில் தான் கடந்த செவ்வாய்க்கிழமை தமிழீழத் தலைநகராம் திருமலையில் பொங்கு தமிழ் நிகழ்வு நடைபெற்றது.

"ஈழத்தமிழரின் உணர்வை உலகுக்கு உணர்த்துவோம்" என்ற தலைப்பில் நடைபெற்ற இந்தப் பொங்கு தமிழ் நிகழ்வில் ஐம்பதினாயிரத்துக்கும் மேற்பட்ட தமிழ் முஸ்லிம் மக்கள் திரண்டு வந்து சாதனை படைத்தனர்.

காலையில் 8.30க்கு ஊர்வலங்களை ஆரம்பித்து 9.30க்கு ஊர்வலம் மைதானத்தை வந்தடைந்ததும் நிகழ்வுகளை ஆரம்பிக்கலாம் எனக் காத்திருந்த அமைப்பாளர்கள் ஏமாந்து போனார்கள். அணி அணியாகத் திரண்டு வந்த மக்கள் வெள்ளம், ஊர்வலத்தில் இணைய இணைய பாம்புவால் போல் நீண்ட ஊர்வலம் பொங்கு தமிழ் நிகழ்வு நடைபெற்ற பெரிய முற்றவெளி மைதானத்தை அடைய சுமார் மூன்று மணிநேரம் எடுத்தது. இதனால் அமைப்பாளர்கள் அனுராதபுரம் சந்தியில் இருந்து ஆரம்பமான ஊர்வலத்தைக் காத்துக் கொண்டிராமலே நிகழ்வை ஆரம்பிக்க வேண்டி ஏற்பட்டது.

பெரிய கடை ஏகாம்பரம் மைதானத்தில் இருந்து ஆரம்பமான ஊர்வலத்தில், கந்தசாமி கோவிலடி, மனையாவெளி, சோனகவாடி, வித்தியாலயப் பகுதியைச் சேர்ந்த பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

உவர்மலைச் சந்தியில் இருந்து ஆரம்பமான ஊர்வலத்தில், உர்மலை, சிகாரை வீதி, திருஞான சம்பந்தர் வீதி, சிவன் கோ விலடி, என்.சி. வீதி, திருக்கடலூர் போன்ற இடங்களைச் சேர்ந்த மக்கள் கலந்து கொண்டனர்.


மூன்றாங்கட்டைச் சந்தியிலிருந்து ஆரம்பமான ஊர்வலத்தில், நிலாவெளி, கும்புறுப்பிட்டி, சல்லி, சாம்பல்தீவு, உப்புவெளி, செல்வ நாயகபுரம் ஆகிய இடங்களைச் சேர்ந்த மக்கள் இணைந்து கொண்டனர்.



அனுராதபுரம் சந்தியிலிருந்து ஆரம்பமான ஊர்வலத்தில் அன்புவழிபுரம், செல்வநாயகபுரம், தம்பலகாமம், கப்பல்துறை, பத்தினிபுரம், ஆலங்கேணி, ஈச்சந்தீவு, லிங்கநகர், பாலையூற்று பாலம் போட்டாறு போன்ற இடங்களைச் சேர்ந்தோர் கலந்து கொண்டனர்.

இந்த ஊர் வலங்களில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசமான மூதூர் பகுதியில் இருந்து முதல் நாளே வருகை தந்திருந்த பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்களும் இணைந்து கொண்டனர். அத்துடன் அமைச்சர் பெ.சந்திரசேகரன், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்களான த.தங்கவடிவேல், ஞா.கிருஸ்ணபிள்ளை (வெள்ளிமலை) யோசப் பரராஜசிங்கம், அ.சந்திரநேரு, இரா.சம்பந்தன், இராஜகுகனேஸ்வரன், சிவசக்தி ஆனந்தன், மாவை சேனாதிராஜா, இ.ரவிராஜ், அ.விநாயகமூர்த்தி, கஜேந்திரகுமார் பொன்னம்பலம், எம்.கே.சிவாஜிலிங்கம் ஆகியோரும் ரெலோ முதல்வர் என்.சிறிகாந்தா, அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் பொதுச் செயலாளர் என்.குமரகுருபரன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

தமிழீழத் தலைநகர் திருமலையில் நடைபெற்ற இந்த பொங்குதமிழ் நிகழ்வில் அரச அதிகாரிகளில் பெரும்பாலானோரைக் காணமுடியவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.



சண்.தவராஜா

வடக்கு கிழக்கு மாகாண திணைக்களங்கள் பலவும் அமைந்துள்ள இந்த இடத்தில் அதிகாரிகளுக்குக் குறைவில்லை என்பது தெரிந்ததே. ஆனாலும் அவர்களில் ஒரு சிலர் மட்டுமே பிரசன்னமாக இருந்தனர்.

ஆனாலும் மக்களின் எழுச்சி பிரமிக்கத்தக்கதாக இருந்தது. மூவின மக்களும் சமமாக வாழும் நகரில் முப்படையினரும் நிறைந்து வழியும் ஒரு நகரில் தலைவர் பிரபாகரனின் 20 அடி உயர கட்டவுட்களை வைத்து சிவப்பு, மஞ்சள் கொடிகளால் வீதிகளை அலங்கரித்து தலைவர் பிரபாகரனின் படங்களை மார்பில் தாங்கி நெஞ்சை நிமிர்த்தி நடந்தமை பெருமை தருவதாக அமைந்திருந்தது.

"உயிர் தமிழுக்கு உடல் மண்ணுக்கு" "எங்கள் தலைவர் பிரபாகரன்" வேண்டும், வேண்டும், தமிழீழம் வேண்டும்" என கோஷமிட்டவாறு சிறுவர் முதல் வயோதிபர் வரை ஊர்வலத்தில் கலந்து கொண்டனர். இதுவரை காலமும் ஆக்கிரமிப்புப் படையினரின் கால்களுள் கிடந்து நசிபட்ட ஆத்திரம், ஆதங்கம், பழிவாங்கும் உணர்ச்சி என்பன இந்த ஊர்வலத்திலும், நிகழ்விலும் தெளிவாகத் தெரிந்தது. அதே போல் தமிழ் மக்களின் உள்ளக் குமுறல் அவர்கள் கையில் வைத்திருந்த சுலோக அட்டைகளிலும் நன்கு வெளிப்பட்டது.

- உயிர் உன்னதமானதே, ஆனால் அதனிலும் மேலானது சுதந்திரம், கௌரவம்"
- வேங்கைகளின் தலைவன், எங்களின் தலைவன் பிரபாகரன்.
- எங்கள் தமிழினம் தூங்குவதோ? சொந்த மண்ணில் வாழ்வுக்கு ஏங்குவதோ?
- தமிழே எங்கள் உயிர், அவ்வுயிரே பிரபாகரன்.
- தடையை நீக்கி பேச்சைத் தொடங்கு, புலிகளே எமது ஏகப் பிரதிநிதிகள். புலிகள் பயங்கரவாதிகள் அல்ல!
- தமிழர்கள் சுயமாக வாழ வழிவிடு!
- ஊரூராய் பொங்கும் தழிழ் உலகெங்கும் பொங்கு தமிழ்!

போன்ற கோசங்கள் அடங்கிய சுலோக அட்டைகளுடன் உணர்ச்சி பூர்வமாக மக்கள் இவ் ஊர்வலத்தில் கலந்து கொண்டனர். ஊர்வலத்தின் முடிவில் பொங்கு தமிழ் பிரகடனம் மேற்கொள்ளப்பட்டது.

"தமிழ் மக்களாகிய நாம் மன உறுதியுடனும் நம்பிக்கையுடனும், மனித உரிமைகள் பற்றிப் பேசுகின்ற போதிக்கின்ற சர்வதேச சமூகத்துக்கு எமது சமாதானம் பற்றிய நிலைப்பாட்டினை மீண்டும் இன்றைய தினம் தமிழினத் தலைநகரில் பிரகடனப் படுத்துகின்றோம்.

நாம் ஆயுத வெறிபிடித்த பித்தர்கள் அல்லர், சமாதானத்தை நேசிக்கின்ற மனித நேயமுள்ள, மனித உரிமைகளை மதிக்கின்ற மானிடவர்க்கமாவோம். நாம் நேசிக்கின்ற சமாதானம் எமது அபிலாஷைகளாகிய சுயநிர்ணய உரிமை, மரபு வழித் தாயகம், தமிழ் மக்கள் தனித்துவமான தேசிய இனம் என்பவற்றை அங்கீகரிக்கின்றதாக இருக்க வேண்டும். இச் சமாதானத்தினை அடைவதற்கான முழுச் சக்தியாகவும், தமிழ் மக்களின் ஏக பிரதிநிதியாகவும், தமிழீழ விடுதலைப் புலிகளை அங்கீகரிக்கின்றோம்.

இத்தருணத்தில் தமிழீழ தேச விடுதலைக்காக வீழ்ந்து வித்தாகிப்போன எம் உடன் பிறப்புக்களை நாம் உணர்வு பூர்வமாக நினைவு கூர்கிறோம். உள் நாட்டிலும் வெளிநாட்டிலும் தமிழீழ விடுதலைப் புலிகள் மீதான தடை நீக்கப்பட வேண்டுமெனக் கோரி நிற்கின்றோம்.

பொங்கு தமிழ் எமது உள்ளக் குமுறல். இது அடக்கும் வரை நாம் பொங்கிக் கொண்டே இருப்போம்.

வாழ்க! தமிழ் வளர்க தமிழ்!!

## பொங்குதமிழ் எழுச்சி~2002

## தமிழ் முழக்கம்!

நீரிடை, நிலத்திடை, தீயிடை, வானிடை,
காற்றிடை, அடர் கானகத்தினிடை வாழ் – தமிழ்
வேங்கை வீரரும், வேந்தனும் தாமே – எம்
தமிழ் மண்தனைக் காப்பவராம்; – மண்ணின்
மணம்தனைச் சுவாசிப்பவராம்; – தமிழ்
மொழிதனை வாசிப்பவராம்; – தமிழ்த்
தாய்தனை வணங்குவோராம்; – தமிழ்க்
கலைதனை வளர்ப்பவராம் – இவ்வுண்மைதனை
உலகமே அறிந்திடும் வண்ணம்
பொங்கி எழும் சங்கே முழங்கு!
சங்கத் தமிழ்ப் பாடல் வழங்கு!

மண்ணீர், மழைநீர், உவர் நீர் கலந்த கடல்தானும்
வென்னீரெனமாறி ஆவியான பின்னே – இம் மண்ணில்
கண்ணீரும், செந்நீரும் கலந்த
துளியே பொழிந்தனவாம்; – செந்நீர் பீச்சிய
ஊற்றே கசிந்தனவாம்; – செந்நீர் சேர்ந்த
நதியே பாய்ந்தனவாம்; – செந்நீர் நிரம்பிய
கடலே இருப்பனவாம்; – இந்நிலைத்னை
ஈழம்தனில் தங்கிய செந்தமிழ்க் கடலே முழங்கு!
கடல் தரும் அலையே எழும்பு!

உண்மையாம் நீதிக்காய், உரிமைக்காய்,
உறவுகளை, உடமைகளை,
உடல்தனை, உயிர்தனை, உணர்வுகளை
இந்தச் சந்தண மண்ணில் ஈந்திட்ட – எம்
தமிழீழத்தேச உடன் பிறப்புகட்காய்,
பொன்மேனியருக்காய் – இங்கு நாம்
ஈகைச் சுடரேற்றும் சேதியினை
இவ்வண்டமே அறிந்திடும்படி
தேன் தமிழ்த் தீயே துலங்கு! - தீயின்
செவ்வணற் பிளம்பாய் விளங்கு!

புலியெனப்பாய்ந்து, பயம், அறுத்து
சிறுத்தைகளாய்ச் சீறியே களமாடும்
வேங்கைக் குணம் படைத்த
குழந்தைகளை ஈன்ற வீரத்தனமும், ஈரமனமும்
இரண்டற வைத்த தமிழ்த் தாய்மாரின்
பெருமை பாடுவோம் – அவர் பாதங்கள் கழுவுவோம்.
அதற்காய் பகை ஆட்டம் கண்டு, அஞ்சி
ஓட்டம் எடுக்க எத்தணித்த – என்
தமிழ்க் காற்றே திரும்பு! வென்றிடப்
பெரும் புயலெனக் கிளம்பு!

இவ் வீழத் தலைநகர் மீது நின்று கதறுகின்றோம்
தன்மானத் தமிழினம் உற்பத்தி செய்யப்பட்டதல்ல,
உயிர்பெற்று உதித்தது என்பதை;
உணர்வுகள் ஊட்டப்பட்டதல்ல, உயிரோடு கூட்டப்பட்டது என்பதை;
உடமைகள் பறிப்பதற்கல்ல பாதுகாப்பதற்கு என்பதை;
விடுதலை விட்டுக் கொடுத்ததால் கிடைப்பதல்ல,
கட்டை அவிழ்த்துப் பெறுவது என்பதை; உணர்த்தியே
தாயகம் மீட்டுத், தாகம் தீர்திடத் தடைவரின்
இதுவரை குருதி குடித்த மண்ணே குளம்பு! பெருந்
தமிழ்க் குன்றெனத் திரண்டு எழும்பு!

வரைந்தவர் :- தமிழ்நெஞ்சன்
உணர்பவர் :- தன்மானத் தமிழர்கள்
வெளியிடுபவர் :- திருமறைக் கலாமன்றம் - திருமலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூனாக்கானாவுக்கு ஒரு மடல்

**நேற்று (23-03-2002) ஆரையம்பதி இ.கி.மி.வித்தியாலயத்தில் பிரபல அறிஞர் மூனாக்கானாவின 'இலக்கிய நெஞ்சம்' நூல் வெளியீட்டு விழா நடைபெற்றது. அதையொட்டி இக்கட்டுரை பிரசுரிக்கப்படுகிறது.**

பேராசிரியர் சி.மௌனகுரு,
கிழக்குப் பல்கலைக்கழகம்

**பெ**ரு மதிப்புக்கும் அன்பிற்கு முரிய மூனாக்கானா அவர்கட்கு!

'இலக்கிய நெஞ்சம்' என்னும் பெயருடைய தங்களின் கட்டுரைத் தொகுதி நூல் ஒன்றிற்கு என்னுடைய முன்னுரையை வேண்டி நண்பர் இரா.நாகலிங்கம் (அன்பு மணி) நூற் பிரதியினை எனக்கு அனுப்பி யிருந்தார். அப்பிரதியினைப் படித்த போது எனக்கு பழைய சம்பவங்கள் பல ஞாபகத் திற்கு வந்துபோயின.

1976ம் ஆண்டு என்று ஞாபகம். மட்டக்களப்பு மரபுவழி நாடகங்கள் எனும் தலைப்பில் கலாநிதிப் பட்டத்திற்கான ஆய் வினை நான் மேற்கொண்டிருந்த சமயம் அது. மட்டக்களப்பின் பெரும்பாலான கிரா மங்களையும், மக்களின் வாழ்க்கை முறைக ளையும், கலைஞர்களையும் நான் நேரடி யாக அறிய வந்த காலம் அது.

கிராமங்கள் தோறும் சென்று கள ஆய்வுகளை மேற்கொண்ட போது நான் ஆரையம்பதிக்கு வருகிறேன். அன்புமணி என்னை உங்களிடம் இட்டு வருகிறார். கூட நவம் மாஸ்ரரும் ஆரையூர் இளவலும் வருகின்றனர்.

உங்களை முதலில் கண்டமை எனக்கு நன்றாக ஞாபகமிருக்கிறது. தங்க ளின் குழந்தைச் சிரிப்பு, வாஞ்சையான வரவேற்பு ஆர்வமிக்க உரையாடல், தாங் கள் எனக்கு ஆரையம்பதியின் சில அண் ணாவிமார்களை அறிமுகம் செய்கிறீர்கள். கூத்து ஏடுகள் சிலவற்றைக் காண்பிக்கிறீர் கள். கூத்துப் பாடல்களைப் பாடிக்காட்டுகிறீர் கள். சில ஆட்டங்களையும் ஆடிக்காட்டுகி றீர்கள். கூத்துக்கு உடுப்பு செய்யும் மேஸ் திரியார், சின்னத்தம்பி அவர்களின் வீட்டிற்கு அழைத்துச் செல்கிறீர்கள். அங்கு வட மோ டிக் கூத்துக்குரிய மரத்தினாற் செய்து, தஞ் சாவூர் பட்டையால் அலங்கரிக்கப்பட்ட பழைய கிரீடம், புஜ கீர்த்தி, கடகம் இவற் றைக் காட்டுகிறீர்கள். கரப்புடுப்பை எடுத்துக் காட்டி, அதை அணிந்து கொண்டு நிற்கிறீர் கள். தென்மோடிக்குரிய அலங்காரமான வாள் ஒன்றைக் காட்டி அதனை தென்மோ டிக் கூத்தர் பிடிக்கும் வகையினை அபிநயக் கிறீர்கள். விளக்குகிறீர்கள். அன்பு மணியின் காலம் சென்ற தம்பியார் அனைத்தையும் படம் பிடிக்கிறார்.

ஒரு சிறு பையன் போல் அனைத் தையும் நீங்கள் செய்த வேகமும் கூத்தில் தங்களுக்கிருந்த பாண்டித்தியமும் கூத்துக் கலையின் மீது தாங்கள் வைத்திருந்த அபரி மிதமான அபிமானமும் தங்கள் குழந்தை உள்ளமும் கூத்து பற்றி உங்களுக்கு தெரி ந்த தனைத்தையும் அள்ளிக் கொடுத்துவிட வேண்டும் என்ற தங்கள் உள்ள ஆதங்க மும் எனக்கு வெகுவாகப் பிடித்துக் கொண் டன. ஒரு நல்ல முழுமையான கலைஞ ரைக் கண்ட திருப்தியுடன் நானும் திரும்பு கிறேன்.

பின்னர் இரா.நாகலிங்கம் (அன்பு மணி) மூலம் உங்களைப் பற்றி மேலும் பல தகவல்களை அறிகிறேன். தாங்கள் வேடம் கட்டி, பிரதான பாத்திரங்கள் தாங்கி கூத்துக் கலைஞனாக கூத்தாடி, ஒருவர் மனதில் இடம் பிடித்துக் கொண்டமையி னையும் தெரிந்து கொள்கிறேன். ஆரை யம்பதி நண்பர்கள் பலர் அன்புமணியின் கூற்றினை உறுதி செய்கிறார்கள்.

அரசரும் பிரபுக்களும் கடவுளரும் புராண இதிகாச பாத்திரங்களும் பவனி வந்த வடமோடிக் கூத்தில், மட்டக்களப்புச் சாதா ரண மனிதர்களை போடியார், சாத்திரியார், முல்லைக்காரன், விதானையார், சட்டம் பியார் போன்ற பாத்திரங்களை நடமாடவிட்டு நகைச்சுவை இழையோட சமகால விடயங் களை உள்ளடக்கமாக்கி 1948 களில் அர சினர் ஆசிரிய கலாசாலையில் கூத்திலே புதிய மாற்றங்களைத் தாங்கள் செய்ததாக அறிகிறேன்.

அறுபதுகளில் பேராசிரியர் சு.வித் தியானந்தன் மட்டக்களப்பு வடமோடி, தென் மோடிக் கூத்துக்களை பேராதனைப் பல்க லைக்கழகத்தில் அறிமுகம் செய்து பல்கலைக் கழக மாணவ மாணவியரைக் கொண்டு ஆட வைப்பதற்கு பல வருடங்க ளுக்கு முன்னரேயே மட்டக்களப்பு அரசினர் ஆசிரிய கலாசாலையில் தங்கள் ஆசிரிய மாணவப் பருவத்தில் 1948ல் கூத்துக்களை அறிமுகம் செய்தது மாத்திரமன்றி ஆசிரியர் மாணவர்களைக் கொண்டு ஆடவைத்து நீங் களும் பங்கு கொண்டதையும் நான் அறிந்து கொள்கிறேன். எனக்கு உங்கள் மீது பெரும் மதிப்பு ஏற்படுகிறது.

இடையிலே, இடைக்கிடை உங்க ளின் ஆக்கங்களைத் தினசரிப் பத்திரிகை களிலும், சில சஞ்சிகைகளிலும் காண்கிறேன். மெல்லிய நகைச்சுவை இழையோட தாங்கள் மரபுப்பணியில் வரையும் செய்யுள்களும் இசைப்பாடல்களும் படிப்பதற்கு வெகு சுவா ரஸ்யமாயிருக்கும். சரளமான ஓட்டமும் சொற் பிரயோகங்களும் ரசிக்கும் படியாக இருக்கும் கொத்தமங்கலம் சுப்புவின் பாணி அது. கிரா மிய சொற்களையும் பேச்சு மொழி யினையும் எளிமையான ஓசையினையும், கொண்டு அமைக்கப்படும் பாணி அது.

உங்களைப் பற்றி அன்புமணி 'எங்க ளின் கொத்தமங்கலம் சுப்பு' என்று அடிக்கடி கூறுவார்.

கூத்தின் மீதும், கிராமியக் கதை களின் பாலும், கிராமிய மக்களின் பேச்சு வழக்கிலும், தாங்கள் வைத்திருந்த ஆத்மார் ந்த ஈடுபாட்டின் வெளிப்பாடு அது.

1999 இல் தங்களின் நெறியாள் கையில் உருவான மட்டக்களப்பு கவியினை ஆணும் பெண்ணும் பாடுவதாக வரும் நிகழ் வொன்றின் சிறப்பைக் கேள்வியுற்று. அந்நி கழ்வை கிழக்குப் பல்கலைக்கழக நுண்க லைத்துறை தான் நடாத்தும் உலக நாட கத்தின விழாவில் மேடையிடுகிறது. தங்களா லேயே இயற்றப்பட்ட புதிய கிராமியக் கவிகள் அவை.

*யானும் நீரும் ஆண்டினுள் முதிர்ந்தனம்*
*மூப்பினும் வினையுள*
*சா்தல் எய்து முன் மேதகவுடைய*
*செயல்சில புரிகுவம்*
*வம்மின் நண்பீர்!*
*ஆம், மூப்பினும் வினையுள.*


கூத்தில் . நூலாசிரியர்

மேடைமீது மாணவர்களோடு நீங் கள் நின்று அக்கவி நிகழ்வை அவைக் காற்றுகிறீர்கள். பார்வையாளர்கள் அந்நிகழ் வை வெகுவாக ரசிக்கிறார்கள். பாடல் ஒவ் வொன்றும் முடியமுடிய கர ஒலி; நிகழ்வு முடிய பலத்த கர ஒலி.

அம்முறை உங்களை ஒருநாள் விழாவுக்கு பிரதமவிருந்தினராக நுண்கலைத் துறை அழைத்திருந்தது. வெள்ளைத் தலை மயிர் பறக்க நீண்ட சால்வை இருபுறமும் தொங்க நின்று பிரதம விருந்தினர் உரையாற் றுகிறீர்கள். கூத்தைப்பற்றி உரையாற்றத் தொடங்கிய நீங்கள் உரை முடிவில் பின்வ ருமாறு கூறினீர்கள்.

'மட்டக்களப்பு மக்களாகிய நாங்கள் கிளிபோல் வளர்த்த எங்கள் சொந்தப் பெண் ணாகிய இக்கூத்துக் கலையை பல்கலைக் கழகம் என்ற மாப்பிள்ளைக்குத் திருமணம் செய்து கொடுக்கின்றோம். அருமை பெரு மையாக நாம் வளர்த்த பெண்ணைக் கண்க லங்காமல் வைத்திருப்பதுடன் மேலும் அப் பெண்ணுக்குச் சிறப்புகள் செய்ய வேண்டியது மாப்பிள்ளையின் கடமையாகும்'


மூனாக்கானா

பெண்ணின் தந்தையின் ஸ்தானத் திலிருந்து நீங்கள் கூறியவை இப்போதும் காதுகளில் ஒலிக்கின்றன. அந்தக் கூற்றுக்க ளை நாங்கள் வெகுவாக சிலாகித்து கதைக் கிறோம்.

கூத்திலே ஊறி கூத்தோடு வாழ்ந்து கூத்தால் வளர்ந்து, கூத்தை மதிக்கும் ஒரு மூத்த கலைஞரின் வார்த்தைகள் அவை. அவ் வார்த்தைகளை நாங்கள் மட்டக்களப்பு மக் களின் குரலாகவே கொள்கிறோம்.

2001ம் ஆண்டில் கிழக்குப் பல்க லைக்கழக நுண்கலைத்துறை தனது அதியுயர் விருதான தலைக்கோல் விருதினைத் தங்க ளுக்கு அளித்துப் பெருமை கொள்கிறது.

ஊர்வலமாக மாலைமரியாதையுட னும் மரபுவழி மத்தள இசையுடனும் உங்க ளை அழைத்து வந்து மண்டபத்தின் மேடை யில் அமர்த்தி, மங்கல வாத்தியம் முழங்க பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், பல்க லைக்கழக மாணவர்கள், மக்கள் எனக்கலந் திருந்த ஆயிரத்திற்கு மேற்பட்ட சபையினர் எழுந்து நின்று கரஒலி செய்ய உபவேந்தர் பொன்னாடை போர்த்த நான் மிகுந்த மகிழ் வோடு தங்களுக்கு தலைக்கோல் விருதினைத் தருகிறேன். தங்களின் கூத்து அர்ப்பணிப் பிற்கும் கூத்துப்பணிக்கும் வாழ்நாள் பூராவும் கூத்துடன் பிணைந்திருந்தமைக்கும் மதிப்ப ளித்துத் தந்த விருது அது,

தலைக்கோல் விருது பெற்ற பின்னர் பல்கலைக்கழக நுண்கலைத்துறை விரிவுரை யாளர்களும் மாணவர்களும் ஆர்வலரும் பங்கு கொண்டதும் எம்மால் நெறியாள்கை செய்யப்பட்டதுமான இராவணேசன் வடமோடி நாடகத்தை கூத்துப்பாணியில் அமைந்த நாடகத்தை நீங்கள் என்னருகில் இருந்து சபை யோருள் ஒருவராகப் பார்க்கிறீர்கள். மிகவும் ரசித்து ரசித்துப் பார்க்கிறீர்கள்.

பல்கலைக்கழக மாப்பிள்ளையிடம் ஒப்படைத்த கூத்துப் பெண்ணை கண்கலங் காமல் மாத்திரமல்ல சிறப்பாகவும் வைத்துக் கொள்ளுகிறார்கள் என்ற மாமனாரின் திருப்தி உங்கள் முகத்திலே தென்படுகிறது. நாடகம் முடிய அனைத்துக் கலைஞர்களையும் அணைத்து முத்தமிட்டு மகிழ்கின்றீர்கள். என் னை ஆரத்தழுவிக் கொள்ளுகிறீர்கள்.

உங்கள் கண்களில் கண்ணீர். ஆனந்தக் கண்ணீர்!

மிகுந்த மகிழ்வோடும் மனநிறை வோடும் விடைபெற்றுச் செல்கிறீர்கள். உங் களைப் போன்ற அர்ப்பணிப்பும், ஈடுபாடும், உண்மையும், பரந்த மனமும் மிக்க கலை ஞர்களுக்கே இப்பாக்கியம் வாய்க்கும்.

இன்று உங்கள் அனுபவத்தின் அறு வடையாக 'இலக்கிய நெஞ்சம்' என்ற நூலி னை வெளியிடுகிறீர்கள். தாங்கள் இடைக் கிடை எழுதிய கட்டுரைகளினதும் சில புதிய கட்டுரைகளினதும் தொகுப்பு இது. அவைக் காற்றுக் கலைகளில் மாத்திர மின்று, எழுத் துத் துறையிலும் தங்களுக் குள் ஈடுபாட் டினைக் காட்டும் முயற்சி இது. தங்களது இலக்கிய ஈடுபாடும் கிராமியக் கலை ஈடு பாடும் இக் கட்டுரைகளிற் புலனாகின்றது.

இலக்கியப் பாடல்களை இரசனை முறையில் விளக்கும் பண்பு இதுவரை பல ராலும் மேற்கொள்ளப்பட்டு வந்துள்ளது. இலக்கியப் பாடல்களை மாத்திரமல்ல நாட் டுப் பாடல்களையும் ரசனை முறையில் விளக்கினர். ஆனால் இந்நூலிலே இலக்கி யப் பாடல்கள் நாட்டுப் பாடல்களுடன் மட் டக்களப்பின் கூத்துப் பாடல்களும் இரசனை முறையில் விளக்கப்படுகிறது இந் நூலின் சிறப்பம்சமாகும். மட்டக்களப்பில் ஆடப் படும் கூத்துப் பாடல்கள் இதுவரை ரசனை முறையில் விளக்கப்படவில்லை. இலக்கிய நயமும் ஓசை நயமும் வாய்ந்த அப்பாடல் கள் சரியான முறையில் விளக்கப்படல் வேண்டும். அவை தவிர தங்களுக்குப் பிடித் தமான மந்திரம், சோதிடம், வைத்தியம், பற்றிய கட்டுரைகளையும் எழுதியுள்ளீர்கள். ஓய்வான காலத்தில் ஒதுங்கி விடாது சுறு சுறுப்பாகப் பணிபுரியும் உங்களிடம் காண நிறைய உண்டு.

1976 இல் நான் உங்களிடம் கண்ட சுறுசுறுப்பு, குழந்தை மனம், அர்ப் பணசிந்தை எடுத்த காரியத்தில் ஈடுபாடு 25 வருடங்களின் பின் இன்னும் அப்படியே உங் களிடம் உள்ளன. உங்களுக்கு 78 வயது என்று யார் சொல்ல முடியும். வயது சென் றாலும் வாலிப மிடுக்கு உங்களை விட்டு இன்னும் செல்லவில்லை. கூத்து தந்த மிடுக்கு அது.

அன்று கூத்தில் வந்த குமாரன் போலவே இன்றும் நீங்கள் கம்பீரமாக நிமிர்ந்து நடந்து செல்கிறீர்கள். பல்லுப் போய்விட்டது ஆனால் இன்னும் உங்களு டைய அந்த மிடுக்குப் போகவில்லை.

நீங்கள் ஓர் இளைஞன், கிழ இளைஞன், இந்தக் கிழ இளைஞரிடம் இன் றைய இளம் தலைமுறையினர் மிகுந்த விட யங்களை எதிர்பார்க்கின்றனர்.

நிறைந்த அனுபவம் உங்களுக்கு கூத்துக்கலையிலுண்டு. 1930களில் ஆரம் பித்த உங்கள் கலைப்பயணம் 40கள் 50 கள் 60கள், 70கள், 80கள், என்று பல ஆண்டுகளைத் தாண்டி வந்துள்ளது. உங்க ளுடைய இந்த நீண்ட அனுபவங்கள் நூ லாக வேண்டும். நீங்கள் பார்த்த கூத்துக் கள். அதன் விபரங்கள் ஆடப்பட்ட முறைகள் நீங்கள் ஆடிய கூத்துக்கள். பழக்கிய அண் ணாவிமார்கள் அவர்கள் கூத்துப் பழக்கிய விதங்கள், அன்றைய மக்கள் கூத்தை ரசித்த முறைமை ஊருக்கும் கூத்துக்குமிடையே யிருந்த உறவுகள் கூத்துக்கலை வளர்ச்சி பெற்ற முறைகள் அதிற்கலந்த புது மோடி கள், நவீன, உலகு உங்களுக்குத்தந்த சவால்கள் நீங்கள் அவற்றை எதிர்கொண்ட முறைமை, அந்த நவீனத்தை உங்கள் பின் னோர்கள் எதிர்கொண்டு கூத்தைக் கொண்டு செல்லும் பாங்குகள் அதன் வீரியம், பல வீனம் அனைத்தும் உங்கள் பார்வையில் எழுதப்பட வேண்டும்.

கூத்துக்கலை சாரா உலகம் ஒன்று உங்களுக்குண்டு. அது சமூகமும் அரசியலும் கலந்த இன்னோர் உலகம். அதுவும் பதியப்பட வேண்டும். உங்களைப் போன்ற அனுபவ முதிர்வு பெற்ற ஒருவரால் எழுதப்படும் அத்தகையதொரு அனுபவ ஆவணம் இளம் தலைமுறையினருக்கு மிகுந்த பயனுடையதாக இருக்கும்.

மூப்பு அனைவருக்கும் வருவ தொன்றுதான். எனினும் எப்போதும் இயங்கிக் கொண்டிருப்பவர்க்கு மூப்பு ஒரு பொருட் டன்று.

கிரேக்க காவியமான ஓடிஸியில் வரும் வயது சென்ற யுலிசிஸ் கூறுவதாக சுவாமி விபுலானந்தர் ஒரு செய்யுள்யாத் துள்ளார். இந்த வரிகள் இவை.

*யானும் நீரும் ஆண்டினுள் முதிர்ந்தனம்*
*மூப்பினும் வினையுள*
*சாதல் எய்து முன் மேதகவுடைய*
*செயல்சில புரிகுவம்*
*வம்மின் நண்பீர்!*
*ஆம், மூப்பினும் வினையுள*

ஆம், ஒப்பினும் விளையும் தங்கள் மூப்பையும் பொருட்படுத்தாது தங்கள் அனு பவங்களை நூலாக்குங்கள் என்று இவ் விட யத்தில் தங்களைக் கேட்டுக் கொள்கிறேன். வாழ்த்துக்கள்.

மிக்க அன்புடன்,
சி.மௌனகுரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்று பாஸ்கா திருவிழிப்புக்காக அந்தப் பிரமாண்டமான பெரிய அழகிய மாதா கோவிலை இளைஞர்கள் அலங்காரம் செய்துகொண்டிருந்தார்கள். அவர்களில் எட்வினும் ஒருவனாக நின்றிருந்தான். வெகு விரைவாக வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருந்தன. தூரத்தில் யூட் வந்துகொண்டிருந்தான். அவனைப் பார்த்த எட்வின் அவனைக் காணாதது போல் தான் வேலையில் மும்முரமாக ஈடுபட்டுக்கொண்டிருப்பதாகக் காட்டிக் கொண்டு மறுபக்கம் திரும்பிக் கொண்டான்.

எட்வினும் யூட்டும் நெருங்கிய உயிர் நண்பர்கள். எட்வின் பணக்கார வீட்டுப் பிள்ளை. யூட் ஒரு ஏழை வீட்டுப் பிள்ளை. அத்தோடு பெற்றோரை சிறு வயதிலேயே இழந்துவிட்டு கத்தோலிக்க சபையால் ஒவ்வொரு பங்குகளில் இருந்தும் அநாதைப் பிள்ளைகளை எடுத்து கல்வியூட்டி வளர்க்கும் விடுதியில் யூட்டும் அவன் பங்குச் சுவாமியாரால் சேர்க்கப்பட்டு இன்று வளர்ந்த இளைஞனாகவும் ஆளாகி இருந்தான். இப்படி இருக்கும் போதுதான் அவன் படிக்கும் பாடசாலையில் சிறுவயதில் இருந்து பழகிய நண்பர்கள் தான். எட்வினும் யூட்டும். எட்வின் மீது யூட் தன் உயிரையே வைத்திருந்தான். எட்வின் ஒரு நாளாவது பாடசாலை வரவில்லை என்றால் துடித்துப் போவான் யூட். ஞாயிற்றுக் கிழமைகளில் பூசைக்கு உதவுவதானால் அது எட்வினும் யூட்டுமாகத்தான் இருப்பார்கள். அந்த பங்குப் பாதருக்கும் கூட இவர்களது அன்பு தெரிந்த விடயமே. இதனால் அவர் மறைக்கல்வி பாடம் நடத்தும் போது படிக்கும் பிள்ளைகள் அனைவருக்கும் உதாரணமாக யூட்டும் எட்வினும் என்று நல்ல விசயங்களுக்கு அவரது வாயில் அடிக்கடி உச்சரிக்கப்படுவார்கள். எட்வினும் யூட் மீது அன்பு கொண்டிருந்தான். அதேவேளை அதிகமாக எல்லாவற்றிலும் சுதந்திரத்தை எதிர்பார்ப்பவன். பெற்றோர் சொல்லுக்கு ஒரு அளவுதான் கட்டுப்படுவான். அளவுக்கு அதிகமாக சுகங்கள் எல்லாவற்றுக்கும் பணத்தைத் தண்ணீர் போல் செலவழிப்பவன். நண்பன் என்ற உரிமையில் யூட் அவனைக் கடிந்து கொள்வான். அப்போதெல்லாம் எட்வின் என்ன சொல்வான் தெரியுமா?

''டேய் யூட்! சுத்தப் பத்தாம் பசளியாக இருக்கிறாயே. உன்னாலயும் என்னோட என்ஜோய் பண்ண விருப்பம் இல்ல. பள்ளி, கோவில், விடுதி என்றுட்டு இருக்கிறாய். டேய், ஆண்டவன் நம்மள உலகத்துல படைச்சி பணக்கார வீட்டுல பொறக்க வெச்சிருக்காரு என்றால், ஏன்..ம்.. வாழ்க்கையை நல்லா அனுபவிச்சி வாழு என்றுதான். இருபதுல என்ஜோய் பண்ணாம அறுபதிலயாடா என்ஜோய் பண்றது?" என்பான். அப்போது திரும்பவும் யூட் அவனிடம் சொல்வான்,

''அப்படி இல்லடா. இறைவன் உன்மீது அன்பு கொண்டதால உனக்கு நல்ல பெற்றோர்களையும், நல்ல வசதியான வாழ்க்கையையும், கல்வியையும் தந்துள்ளார். ஏன் தெரியுமா?

எஸ்.சங்கர் சிறிதேவி,
வேலூர்-கல்லடி.

இப்படி ஊதாரித்தனமா அழிக்கவும் வாழவும் இல்ல. உனக்கு கடவுள் தந்த வளத்தைக் கொண்டு பிறருக்கு உதவப்பாரு" என்று நாசூக்காகக் கூறுவான்.


இதைக் கேட்ட எட்வின், ''உதவாமலா நேற்று நம்ம பிரண்சுக்கெல்லாம் தாராளமாய் பார்ட்டி போட்டன்" என்பான். அவன பாரட்டி எப்படிப்பட்டது என்று அறிந்திருந்த யூட்டுக்கு அவன பதிலைக் கேட்டு சிரிப்பதா? அழுவதா? என்று தெரியாமல் தவிப்பான். இருந்தும் அவனுக்காக தன் செபத்தில் செபிப்பான்.

என்ன இருந்தாலும் இரு நண்பர்களும் ஒருவர் மீது ஒருவர் உயிராக அன்பை வைத்திருந்தார்கள். எட்வின் அவன் மீது காட்டும் அன்பால் எட்வினின் மற்ற நடத்தைகளைப் பெரிதாக யூட் எடுத்துக்கொள்வதில்லை. தன் மனதில் தோன்றும் துன்பங்கள், வேதனைகள் அனைத்தையும் எட்வினிடம் கொட்டித் தீர்ப்பான் யூட். அந்த வேளைகளில் எட்வின் யூட்டின் மனதுக்கு ஆறுதல் தரும்படி நடந்துகொள்வான். இவ்வாறு அவர்கள் இருவரின் நட்பும் வளர்ந்துக்கொண்டு வரும்போது யூட்டுக்கு அந்த அதிஷ்டத்தை இறைவன் கொடுக்க முனைந்தார்.

யூட்டின் பெரியப்பா ஒருவர் அமெரிக்காவில் பெரிய கம்பனி ஒன்றில் மனேஜராக தொழில் புரிபவர்.அவருக்கு ஒரு முறை யூட் தன் நிலைகளை விளக்கி ஒரு மடல் போட்டான். அந்த மடலில் தனக்கு மடல் போடுவதானால் இந்த முகவரிக்குப் போடுங்கள் என தன் நண்பன் எட்வினின் வீட்டு முகவரியைக் கொடுத்தான். அவன் தான் தங்கியிருக்கும் விடுதியின் முகவரியைக் கொடுக்காமல் தன் நண்பனின் முகவரியைக் கொடுத்ததற்கும் ஒரு காரணம் உண்டு. என்னவென்றால் தன் கூடவே தங்கும் தன்னைப் போன்ற நண்பர்களில் நல்லவர்களும் இருக்கிறார்கள். கெட்டவர்களும் இருக்கிறார்கள். இவர்கள் அவனை அடிக்கடி கிண்டல் பண்ணி வம்புக்கு இழுப்பார்கள். காரணம் யூட் யாருடனும் அநாவசியமாகப் பேச்சு வைப்பதில்லை. தானும் தன் பாடும். தன் படிப்பும் என இருப்பதோடு விடுதியில் கூறப்பட்டுள்ள சட்டதிட்டங்களை ஒழுங்காகக் கடைப்பிடிப்பவன். இதனால் விடுதியில் அவனுக்கு நல்ல பெயரும் உண்டு. அவனுடைய உறவினர்கள் அவனுக்கு எப்பவாவது இருந்துவிட்டு மடல் போடுவதுமுண்டு. ஆனால் அம்மடல் எதுவும் முழுதாக அவன் கரம் கிடைப்பதில்லை. அவனை அலைக்கழித்து, அழவைத்து துன்பப்படுத்தியே கொடுப்பார்கள் அவன் நண்பர்கள் சிலர். இதே நிலை பெரியப்பா தனக்குப் போடும் மடலுக்கும் நேரக்கூடாது என்றுதான் தன் உயிர் நண்பன் எட்வினின் வீட்டு முகவரியைக் கொடுத்தான். இதை எட்வினும் ஏற்றுக்கொண்டான். ''உனக்கு மடல் வந்தால் நானே என் கையாலே கொண்டுவந்து உன்னிட்ட தாரேன்" என்று எட்வினும் வாக்களித்தான். ஆனால் இன்றுவரை அவனுக்கு தன் பெரியப்பாவிடம் இருந்து எவ்வித தகவலும் வந்தபாடில்லை. சில வேளைகளில் தன்னை மறந்து சிந்தனையில் ஆழ்ந்திருப்பான் யூட். அவனது எண்ணங்களில் அடிக்கடி இந்தக் கேள்வி எழுவதுண்டு.

ஏன்... பெரியப்பா இன்னும் ஒரு மடலாவது போடாமல் இருக்கிறார். நான் ஒரு அநாதை. என்னால் என்ன பிரயோசனம் என்று நினைத்துவிட்டாரோ. நான் மடல் போட்டு 5 மாதங்களாகின்றனவே. என் கடிதம் போய்ச் சேரவில்லையா? இல்லை நமக்கு ஏன் தேவையில்லாத சரவை என என்னை ஒதுக்கிட்டாரோ. அதுதான் ஒரு பக்கம் இருக்க, இந்த எட்வினுக்கு என்னதான் ஆச்சுது. மூன்று மாதமாக என்னை வெட்டி வெட்டி நடக்கிறானே. முன்னம்போல் என்கூட அவ்வளவாகப் பேசுவதில்லையே ஏன்? நான் என்ன செய்தேன். அவனுக்கு ஒரு நாளில் ஒரு நேரமணியாவது விடுதிக்கு வந்து என்கூடப் பேசாமல் இருக்க மாட்டானே. சிலவேளை மற்ற நண்பர்கள் என்னிடம் சொல்லியதை நானும் அப்படியே எண்ணி விட்டதாக நினைத்துக் கொண்டானோ? ச்சீ எட்வின் அப்படிப்பட்டவனில்லை. அவன் எனக்குப் போய் அப்படிச் செய்வானா. எங்கள் இருவரின் நட்பை உடைக்க வேறு யாரோ பிடிக்காதவர்கள்தான் இந்தக் கதையைக் கட்டி இருப்பார்கள். பெரியப்பா எனக்குக் கடிதம் போடாததற்கு அவன் என்ன செய்ய முடியும். எதுக்கும் பாதரிடம் போய் அவருடன் பேசினால்தான் என் இதயச் சுமை குறையும் போல் இருக்கிறது. எட்வினோ என்னைக் கண்டதும் மறுபுறம் திரும்பி விட்டான். ஏன் என்றுதான் தெரியவில்லை. இவ்வாறு நினைத்துக் கொண்ட யூட் பாதரின் இருப்பிடம் நோக்கி நடந்தான். இவன் வருவதைக் கண்ட பாதரும், விசிட்டர்ஸ் அறைக்குள் நுழைந்தார்.

''வாரும் வாரும் யூட். எப்படி இருக்கிறாய்?" எனக் கேட்டார் பாதர். ''நலமாய் இருக்கிறேன் பாதர்". சிரத்தை இல்லாமல் சொன்னான் யூட். ''சரி உட்காரும். என்ன விசயம். முகமெல்லாம் ஏன் இப்படி வாடிப்போய் இருக்கிறாய். விடுதியில்




ஏதும் பிரச்சினையா சொல்லும்? எனக்கேட்டார்.

அவன் தயங்குவதைப் பார்த்த பாதர். ''பரவாயில்லை யூட். சொல்லும். என்னால் முடிந்த உதவியைச் செய்கிறேன். வாட் ப்ரப்ளோம்" என்றார்.

அவன் உள்ளத்தில் கிடந்து கனன்ற துன்பத்தை பாதரிடம் சமர்ப்பித்தான்.

''பாதர், என் பெரியப்பா ஒருவர் அமெரிக்கால இருக்கார். அவருக்கு என் நிலைகளை விளக்கி ஒரு கடிதம் போட்டேன். அதுல எனக்கு மடல் போடுறது என்றால் இந்த முகவரிக்குப் போடுங்கள் என்று என் நண்பன் எட்வினின் வீட்டு முகவரியை எழுதினேன். 5 மாதமாகிவிட்டது பெரியப்பாவிடமிருந்து எனக்கு எந்தத் தகவலும் இல்லை. எட்வினிடம் கேட்டேன். அதுபற்றி எதுவுமே வரவில்லைடா என்றுட்டான். அவன் என் நண்பன். எனக்குப் பொய் சொல்ல மாட்டான். ஆனா என் கூட இருக்கிற நண்பர்கள் என்ன சொல்கிறார்கள் தெரியுமா? பாதர், 'டேய் பைத்தியகாரா? உன் பெரியப்பா உனக்கு எப்பவோ மடலும் போட்டு பணமும் அனுப்பி விட்டார். அவன்தான், உன் உயிர் நண்பன் இருக்கானே எட்வின், அவன் சுருட்டிவிட்டான்.' என்று சொல்லுகிறார்கள் பாதர். என்னை அப்படிச் சொல்லிச் சொல்லி துன்பப்படுத்துகிறார்கள். பெரியப்பா கடிதம் போடாட்டி அது எனக்குப் பெரிசில்லை. என் நண்பன் இப்படி செய்துவிட்டான் என்று அவர்கள் அவனைத் தப்பாக எண்ணி இப்படிக் கதைப்பதைக் கேட்கக் கேட்க எனக்கு வேதனையாகவுள்ளது. இப்போது எல்லாம் எட்வின் என்கூட அளவுக்கு அதிகமாகப் பேசுவது கிடையாது பாதர். சிலவேளை நானும் சேர்ந்து அப்படி நினைத்துவிட்டதாக அவன் எண்ணி விட்டானோ தெரியாது. என்னைக் கண்டால் காணாதது போல் மறுபக்கம் தீரும்பி விடுவான். காரணம் என்னவென்றுதான் எனக்குப் புரியவில்லை." அவன் பேசிக்கொண்டு இருக்கும்போதே அவனையும் அறியாமல் அவன் கண்கள் கலங்கி இரண்டு சொட்டு நீரை உதிர்த்தின.

பாதர் அவனை அன்பு ததும்பப் பார்த்துக்கொண்டே ''சரி சரி அழாதேயும் யூட். எட்வின் அப்படிப்பட்டவன் இல்ல என்பது உனக்குத் தெரிந்ததே. யாரும் என்ன கதைத்தாலும் அதை எடுத்துக் கொள்ளாமல் நீ இயல்பாகவே இருக்கப்பாரும். நான் ஒருக்கா எட்வினோட என்ன பிரச்சினை என்று பேசிப்பார்க்கிறேன். போம்... போய் ஆண்டவரின் திவ்ய நற்கருணைப் பேழைமுன் முழந்தாளிட்டு மனச்சுமைகளை ஆண்டவர் யேசுக்கிறிஸ்துவிடம் ஒப்புக்கொடும். எல்லாத்துக்கும் விடை கிடைக்கும். அவரிடம் சொல்லி அழும். உன் இதயத்துக்கு ஆறுதல் தருவார்" என பாதர் கூறி அவனை அனுப்பி வைத்தார். ஆண்டவரே இப்பிள்ளையை ஏற்று ஆறுதல் வழங்கும் சுவாமி. அவர் மனம் யூட்டுக்காக வேண்டிக் கொண்டது.

ஆலயத்தினுள் சென்ற யூட் நற்கருணைப் பேழையின் முன் முழந்தாளிட்டு அதன் அருகிலே இரண்டு கரங்களையும் விரித்த வண்ணம் சிரசில் முள்முடி சூரிய அழகு வதனத்தில் இரத்தக் கறைகள் வடிய இரண்டு கண்களிலும் பரிவைக் காட்டி சிலுவையில் தொங்கிக் கொண்டு இருந்த ஆண்டவர் இயேசுக் கிறிஸ்துவை நோக்கினான் யூட்.

அவரது பரிவான பார்வை அவனைப் பார்த்து, 'என் மகனே வா. என்னிடம் உனது துன்பத்தைத் துடைக்கிறேன்' என்று தன்னை அழைப்பது போல் இருந்தது அவனுக்கு ஆண்டவின் திருமுகத்தைப் பார்த்துக் கொண்டிருந்தவனின் கண்களிலிருந்து தாரை தாரையாக கண்ணீர் வழிந்தது. ஆண்டவரை நோக்கி செபித்தான் யூட் ''ஆண்டவரே நான் ஒரு அனாதை. எனக்கு நீதான் அம்மா, நீதான் அபபா. உன அருளால்தான் நான் இன்று நலமாக உயிர்வாழ்ந்து கொண்டிருக்கிறேன். யேசுவே! என் நண்பர்கள் என்னவோ எல்லாம் சொல்லுகிறார்கள். எட்வினும் கூட என்னை நிமிர்ந்து பார்ப்பதில்லை. எட்வின் மீது நான் எந்த ளவு அன்பு வைத்திருந்தேன் என்று உனக்குத் தெரியும்தானே. எட்வின் ஏன் இப்படி என்னை வெறுக்கிறான். தந்தாய் என் இத யம் நோகுதப்பா... என் மனம் சிறைக்குள் அடைப்பட்ட கைதி போல் தவிக்கிறது. ஏன் நீயும் ஒரு விதத்தில் கைதியாகத்தானே வாழ்கிறாய் ஆண்டவரே இந்த நற்கருணைப் பெழையினுள் ஒரு சிறைக் கைதிபோல் நீ இரவும் பகலும் விழித்தவண்ணம் இருக்கிறாய். உன்னைக் கடந்து உன்மக்கள் போவதும் வரு வதுமாக இருக்கிறார்கள். ஆனால் நீ மட்டும் சிறு கூட்டுக்குள் இருந்த வண்ணம் அவர்களையும் அவர்கள் செய்யும் பாவங் களையும் இரவு பகல் விழித்துக்கொண்டு வேதனையுடன் பார்த் துக் கொண்டிருக்கிறாய். நீ எல்லோரையும் நினைத்துப் பார்த்துக் கொண்டிருக்கிறீர் சுவாமி. ஆனால் உன்னைப்பற்றி உன் மக்களில் யார் தான் கவலை கொள்கிறார்கள். ஏதோ உன்னைக் கடந்து போகும் போதும் வரும்போதும் கடமைக்கு தடால் என்று விழுந்து எழுந்து செல்கிறார்கள். நமக்காக ஒருவர் இந்தக் கூட்டுக்குள் இரவு பகல் அடைபட்டுக் கிடக்குறாரே என்றும் அவருடைய இதயத்துக்கு ஒரு மணி நேரம் ஆறுதல் தருவோம் என்றும் யார் தான் நினைத்துப் பார்க்கிறார்கள். நீயும் பாவம் தான். என் மனதுக்கு ஆறுதல் தரும்படி உன்னை கேட்கிறேன் சுவாமி."

தன் செபத்தை முடித்துக்கொண்டு யூட் விடுதியை நோக்கி சென்றான். அவன் போவதை ஒருபுறம் பாதர் கண்டார். மறுபுறம் எட்வினும் கண்டு கொண்டான. அவன் மனம் அவனை என்னவோ செய்தது. அடுத்த நாள் பாவமன்னிப்பு நடைபெறவிருந்தது. ஆலயத்தினுள் மக்கள் திரண்டு இருந்தனர். பங்குத் தந்தை ஆலயத்தினுள் ஒருபுறம் அமர்ந்துகொண்டு ஒவ்வொருத்தருடைய பாவங்களுக்கம் மன்னிப்பு வழங்கிக் கொண்டிருந்தார். அப்போது அடுத்தவராக அவர் காதருகில் மிக அருகில கேட்டது அந்தக் குரல்.

''பாவியாய் இருக்கும் என்னை ஆசிர்வதியுங்கள் சுவாமி." பாதர் ஒரு கணம் நிமிர்ந்து பார்த்தார். அது எட்வின். பாதர் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தினார். ஆண்டவர் மீது பாரத்தை வைத்துவிட்டு பாதர் அவனிடம் பேச ஆரம்பித்தார்.

அவரது கரத்தால் சிலுவை அடையாளம் இட்டு அவனை ஆசீர்வதித்துக்கொண்டே ''ஆண்டவர் உன் பாவங்களை ஏற்றுக் கொள்ளட்டும் மகனே" என்றார். எட்வின் பாவ அறிக்கையை ஆரம்பித்தான். ஓவ்வொன்றாகச் சொல்லியவன் அவ்வளவுதான் பாதர் என்று முடித்தான்.

அவனை நிமிர்ந்து பார்த்த பாதர். அவன் கண்களைக் கூர்மையாக கூர்ந்து பார்த்தார். அந்தப் பார்வை அவனை என்னவோ செய்தது. பாதர் பேசினார் அவனிடம்.

''மகனே எட்வின். நீ செய்த பெரியதொரு பாவத்தை அறிக்கையிட ம்றந்துவிட்டாயே. மறந்து விட்டாயா? அல்லது மறைத்துவிட்டாயா?"

ஒரு கணம் நிலை தடுமாறிய எட்வின், ''பாதர் என்ன சொல்லுகிறீர்கள்" என்று கேட்டான்.

''நான் கேட்பது உனக்கு விளங்க வில்லையா எட்வின். நீ என்னிடம் மறைக்கலாம். ஆனால் ஆண்டவர் யேசு உன் உள்ளத்தைப் பார்ப்பவர் அவரிடம் நீ மறைக்க முடியாது. நீ செய்த காரியத்துக்கு மனம் வருந்தாமல் உன் பாவங்களை அவர் ஏற்றுக்கொள்ள மாட்டார். உனக்கு மன்னிப்பு வழங்கவும் மாட்டார்." பாதர். எட்வின் மீது இடிவிழுந்தது போலானான். எதைச் சொல்கிறார். ''ஓ.. நா..நா..யூட்டுக்கு. ஐயோ.. அது எப்படி இவருக்குத் தெரிந்தது. ஏன் கூடவே ஒன்றாக தின்றானுகளே. ஓன்றாக குடித்தானுகளே. ஆவனுகள்ல யாராவது ஒருத்தன் குடிச்சிட்டு உளறியிருப்பான் போல்' இவ்வாறு அவன் மனதுக்குள் மின்னலடிக்க, பாதர் மேலும் பேசினார்.

''சொல்லும் எட்வின். எனக்கு எல்லாமே தெரியும். எதற்காக நீ இவ்விடத்திற்கு வந்தாய். பெற்றோர் சொல்லை மீறுவதற்காக மன்னிப்பு கேட்டு வந்தாயா? இல்ல பணத்தை பெற்றோர் கஸ்டப்பட்டுத் தேடும் பணத்தை ஊதாரித்தனமாக அழித்தாயே, அதற்கு மன்னிப்பு வேண்டி வந்தாயா? குடியும் கூத்துமாக இந்தத் தவக்காலத்தில் ஆண்டவரைப்பற்றி கொஞ்சமேனும் சிந்திக்காமல் உன் ஊதாரி நண்பர்களுடன் ஆட்டம் போட்டியே அதற்கு மன்னிப்பு வேண்டுமா? இல்ல எல்லாவற்றையும் விட உன்னைத் தன் உயிராக நினைத்து உன்மீது அன்புகொண்டு உன்னை நம்பிய அந்த அநாதைக்கு இறைவனாகப் பார்த்து அவன் பெரியப்பா மூலம் உதவியதை அவனுக்குத் தெரியாமல் சுருட்டி விட்டாயே இதற்கு மன்னிப்பு வேண்டி வந்தாயா?"

ஐயோ... பாதர் என்னால் தாங்க முடியவில்லை. நிறுத்துங்கள். நான் பாவி பாதர். நான் பெரும்பாவி. என்மீது நம்பிக்கை கொண்டிருந்த நண்பனுக்கு துரோகம் இழைத்து விட்டேன். ஐயோ யேசுவே. அவன் வாய் விட்டுக்கத்த ஆரம்பிக்க,

''உஸ்ஸ்... எட்வின் சத்தம் போடாதே.. உன்னை நிச்சயம் ஆண்டவர் மன்னிப்பார் மகனே சிந்தித்துப்பார்.

(15ம் பக்கம் பார்க்க...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்களுடன் சில நிமிடங்கள்...

எல்லாக் காலமும் விளையக் கூடிய விளை நிலம்போல் செழிப்புடன் இருக்க வேண்டிய எமது வாழ்க்கை வரண்டு வற்றி பசுமை குன்றிப்போவது ஏன்?

அனேக சந்தர்ப்பங்களில் நம்மை யே நம்மால் புரிந்து கொள்ள முடியாதிருப் பது ஏன்? மனம்விட்டு ஒருமுறை கூட சிரிக்க முடியாத படி உள்ளம் அழுந்துவது ஏன்?

மனதிலே உள்ளதை வெளியே

## பிரார்த்தனை...! பிரார்த்தனை...!

கொட்டினால் பாரம் குறையும் போல் உள் ளதா..?

யாரிடம் சொல்லி அழுவது..? யாரிடம் சொன்னால் சுமை இறங்கும்..?

யாரையும் ஏன் அலைய வேண்டும்? எம்மால் வெளிக்கொணர முடி யாத சுமைகளைக்கூட சுமந்து பங்கெடுக்க எமக்குள்ளேயே ஒரு சினேகம் இருப்பதை யாரும் புரிந்து கொள்வதில்லை. அந்த சினேகம் எம் உயிரிருக்கும் வரை எமக் குள்ளேயே இருப்பது. கூப்பிட்ட குரலுக்கு ஓடி வரச் சித்தமாய் இருப்பது..?

நான் சொல்ல வருகின்ற சினேகம் இறைவனுடனானது.. விசித்திரமாய் இருக்கலாம். சில போது வேடிக்கையாய்க் கூட இருக்கலாம். யோசித்துப் பாருங்கள். வாழ்வே புதிரானது, விசித்திரமானதுதான்! அதைவிடவும் விசித்திரமானதல்ல நான் சொல்லப் போவது.

எம்மில் அனேகமானோர் துன்பம் வரும் போதுதான் இறைவனைப் பற்றி நினைக்கிறோம். ஆலயங்களுக்குச் செல் கின்றோம், வணங்குகிறோம், தொழுகி றோம், கெஞ்சுகிறொம், அழுகிறோம். ஏன்? எம் மனதில் இருக்கவேண்டிய சுமை குறைய வேண்டும் என்பதற்காகத்தானே..?

துன்பமும் இல்லையெனில் எம் மனதில் இறை எண்ணமுமில்லை. இது எம் சுயநலத்தை அல்லவா பிரதிபலிக்கிறது...!

இறைவன் நேருக்கு நேர் பேசுவ தில்லை, ஆறுதல் சொல்வதுமில்லை. அது சிந்தைக்கு அடங்காத ஒரு சக்தி

இறைவனை எப்போதும் தியாணிப் பவர்களாய் வழிபடுபவர்களாய் நாமிருக்க வேண்டும். இறைவன் கருணை உள்ளவன். அடியான் மீது அன்புள்ளவன். மன்னிப்பவன். நமக்கு அவனில் இருக்க வேண்டியது பக்தியே அன்றி வெறும் பயமில்லை. எமக்கும் அவ னுக்குமிடையிலான சினேகத்தை வளர்த்துக் கொண்டோமெனில் எமக்குத் துன்பமிருக்காது. சுமை இருக்காது.

எமது பாவங்களை பிரார்த்தனை என்ற ஆயுதம் கொண்டுதான் அழிக்க முடியும். மனதில் சுமை வரும் போதெல்லாம் யாரை யும் தேடி நாம் அலைய வேண்டியதில்லை. இறைவனின் சந்நிதானத்தில் கிடைப்பதைப் பார்க்கிலும் மன அமைதியை யாராலும் எமக் குத் தர முடியாது.

அவனது சந்நிதானத்தில் பரிசுத் தமான மனதுடன் பக்குவப்பட்ட சிந்தனைக ளுடன் கண்கள் நனைய அழுது மன்னிப்புக் கேட்கலாம், எம் கோரிக்கைகளை முன் வைக் கலாம். எம் தேவை எதோ, கேட்டுப் பெறலாம்.

நாம் கேட்டது கிடைத்ததோ இல் லையோ, எம் கோரிக்கை ஏற்றுக் கொள்ளப்பட் டதோ...நிராகரிக்கப்பட்டதோ... எம் உள்ளம் தெளிவாய் இருக்கும். எம் சிந்தனைகள் முடிவுகள் நேர்மையானதாய் இருக்கும்.

பல சமயங்களில் எம் மனதை நெருடிக் கொண்டிருந்த விடயம் ஒரு நேரம் பிரார்த் தனையால் இடத்தெரியாது போவதுண்டு 'வேண்டும் வேண்டும்' என்று மனது அடம் பிடித்த ஒன்று பிரார்த்திக்கப்பட்ட பின், மனது வேண்டாம் என்று எண்ணுவதுண்டு. எதை உயர்ந்ததென எண்ணி வருந்தி அழுது கொண்டிருந்ததோமோ அது, பிராத்தனையின் பின் எம்மாலே குறைவாக மதிப்பிடப்படும் சந்தர்ப்பங்கள் ஏற்படுவதுண்டு.

சந்தோஷமும் மன அமைதியும் வெளியிலில்லை. எமக்குள்ளேதான் இருக்கின் றது. துன்பம் எமக்குக் கிடைக்கின்ற அனு பவத்திலில்லை. நாம் பார்க்கின்ற கோணத்தி லேதான் இருக்க முடியும்.

அற்ப விஷயங்களுக்காக அழுது வடிப்பது கோழைத் தனம். நெஞ்சில் துணி விருக்க வேண்டும். சக்திக்கப்பாற்பட்ட துயரத் தை எமக்கு இறைவன் தருவதில்லை.

வாழ்வெனப்படுகின்ற களத்தில் நாம் ஒவ்வொருவரும் போராளிகள் தான். நாம் வாழப் பிறந்தவர்கள். இப்படித்தான் வாழ வேண்டும் என்ற வாழ்வின் வரையறையி லிருந்து இம்மியளவும் பிசகாது வாழ்கையில் துன்பம் எமைத் தீண்டாது. தீண்டினும் எமைக் கொல்லாது.

நாம் பிரார்த்திக்கத் தொடங்கும் போதே எம் வாழ்விலும் வசந்தம் தொற்றிக் கொள்ளும். ஆனந்தம் மணம் கமழும்.

பிரச்சினைகள் இல்லை யெனில் வாழ்வில் என்ன அர்த்தம் இருக்க முடியும்? பிரார்த்தனைகளை மறந்து விடின் மனதில் சாந்தியும் இருக்க வழியில்லை...!

நிமிடங்கள் ஊடாக மீண்டும் சந்திப்போம்.

**அகமட் ஸர்மிளா**

# ஞாயிறு சாளரம்

-பகீ-



## ஆசை

உந்தன் கூந்தல்க் காட்டுக்குள்
ஒளிந்திருக்க ஆசை!

உன் தலையணையில்
முகம் புதைத்து
முத்தமிட ஆசை!

உன் நெற்றியில்
பொட்டு இட்டு
மகிழ ஆசை!

உன்னிரு- நீண்ட
புருவங்களுக்கும்
கருமை தீட்ட ஆசை

உன் இதமான
செவ்விதழ்களுக்கு
செம்மை தீட்ட ஆசை!

உன் கண்ணீரில்
நீச்சலடித்துக்
கரைசேர ஆசை!

உன் முகப்பருவில்
முத்தெடுக்க
ஆசை!

உன் உள்ளங்கால்
முள்ளை
எடுத்தெறிய ஆசை!

உன் கழுத்தில்
தாலி கட்டி உனைத்
தாரமாக்க ஆசை!

இனி வரும் பிறப்புகளிலும்
உன்னுடனே ஒன்றாய்
வாழ ஆசை!

'வெல்லவூர் நவம்'

# ஒவ்வொரு பெண்ணும் அழகிதான்

ஒவ்வொரு பெண்ணும் அழகி தான். அழகில்லாத பெண்ணிடமும் ஏதோ ஒரு வடிவில் அழகு மறைந்து பொதிந்து கிடக்கின்றது. அந்த அழகை வெளிப்படுத் தவும் மெருகூட்டவும் அனேகமான பெண்க



ளுக்கு வழிமுறைகள் தெரிவதில்லை. சில ருக்கு அழகை பாதுகாக்க, மெருகூட்ட, வெளிப்படுத்த பொருளாதார வசதிகள் கிடைப்பதில்லை. சில பெண்களிடமும் முக ஒப்பனை (பேஷியல்) செய்தால் தான் முகம் அழகாக காணப்படும் என்ற எண்ணம் ஏற் பட்டுள்ளது. அதிக புணம் செலவழித்து, பேஷி யல் செய்வதையும் கிறீம் லோஷன் வாங்கி பாவிப்பதை தவிர்த்தும் இயற்கையான முறையில் குறைந்த செலவில் நமது அழ கைப் பேணிப் பாதுகாக்க வேண்டும். அதற் கான எளிமையான செலவில்லாத **வழி முறைகள் சில:-**

நோய் இல்லாதபடி உடம்பைப் பாதுகாக்க வேண்டும். ஆரோக்கியமாக வாழ வேண்டும். அடிக்கடி நோய் வந்தால் அழகு குன்றி விடும்.

**முகம்:-**

முகத்தை எப்பொழுதும் சுத்தமாக வைத்திருக்க வேண்டும். முதலில் பேபி கிறீ மை எடுத்து முகத்திலும் கழுத்திலும் தாரா ளமாக பூச வேண்டும். பத்து நிமிடங்கள் ஊறிய பின் ஒரு பாத்திரத்தில் ஆவி பறக்கும் சூடான வெந்நீரை எடுத்துக் கொள்ளவும். ஒரு தடிப்பான துவாயினால் முகத்தை நன்றாக மூடி ஆவி முகத்தில்படும்படி 15 நிமிடங்கள் செய்ய வும். பின் பஞ்சு அல்லது மெல்லிய துணியினால் முகத்தை நன்றாக துடைக்கவும். இந்த முறை யினால் முகத்தில் உள்ள நுண்ணிய துவாரங் கள் விரிவடைந்து அழுக்குகள் வெளியேறு வதுடன் முகம் பொலிவுடன் காணப்படும்.

**2. முகத்தின் சருமம் வரண்ட தாக இருந்தால்**

தேன் ஒரு கரண்டி, எலுமிச்சைசாறு சில துளி, முட்டையின் மஞ்சட்கரு மூன்றையும் கலந்து முகத்தில் தடவவும். 10, 15, நிமிடங்க ளின் பின் குளிர்ந்த நீரினால் முகத்தை கழுவ வும். அல்லது கடலைமா, பயற்றமா, இரண்டில் ஏதாவது ஒரு மா 1 தேக்கரண்டி, தேன் 1 தேக்கரண்டி, புசுப்பால் ½ தேக்க ரண்டி வீதம் வேர்த்து முகத்தில் தடவவும்.

**சருமத்தைப் பாதுகாப்பது எப்படி?**

(அடுத்த வாரம் தொடரும்)

**றோசறி தம்பிராசா,**
**நாவற்குடா.**

## அன்பே கொஞ்சம் கேள்

நான் கிறுக்கியது பல
அதில் ஓவியமாகியது சில
நான் உளறியது பல
அதில் கவிதையாகியது சில
கவிதைகள் ஓராயிரம்
அதில் சுவைத்தது ஒன்றிரண்டு
மாதர்கள் ஓராயிரம்
அதில் கவர்ந்தது ஒருத்தி
கனவுகள் நூறாயிரம்
அதில் பிடித்தது அவள் வருகை
சிரிப்புக்கள் பல விதம்
அதில் ரசித்தது அவள் சிரிப்பு
வாழ்க்கை பல விதம்
அதில் நீ இணைந்தால் புது விதம்.

**பா. அச்சுதா, 1ம் குறுக்கு,**
**செல்வநாயகம் வீதி, மட்டக்களப்பு.**

# இன்பமும் துன்பமும்

வாழ்க்கையில் துன்பம் வரும் சம யங்களில் அனேகமானோர் ஆண்டவனைக் கூடத் திட்டித் தீர்ப்பார்கள். ''இந்தக் கண்கெட்ட கடவுள் ஏன்தான் இப்படியெல்லாம் எம்மை வாட்டி வதைக்கிறான்? சோதனைகளையும் வேதனைகளையும் ஏன்தான் எங்கள் சொந்தங் களாக்கித்தருகிறான்? என் றெல்லாம் அடிக்கடி புறுபு றுத்துக் கொள்வார்கள். மனம் நொந்து கொள்வார் கள். இறைவனைத் திட்டி என்ன பலன் அவர்களுக் குக் கிட்டப் போகிறது. இது தகுமா? இது முறையா? இதனை விடுத்து அவர்கள் நினைத்தால் அந்தத் துன் பத்தில் கூட இன்பத்தைக் காணலாம். எம்மில் தானே எல்லாம் தங்கியிருக்கிறது துன்பத்தைக் தூளாக்குவ



தில் வெற்றி காணுகின்ற மனிதன்தான் உண் மையில் வையகத்தில் வாழத் தெரிந்த மனிதன். வீரமுள்ள மனிதன்.

இன்பம் வரும்போது இறுமாப்பு அடை வதோ, துன்பம் வரும்போது துவண்டுவிடுவ தோ உண்மையில் மனித வாழ்க்கைக்கு அப் பாற்பட்டதொன்றே என்றே கூறலாம். இன்பம் வரும்போது ஆணவம் அடைந்து இறுமாப்பு எய்தக் கூடாது. ஏனெனில் அந்த இன்பத்தை அடுத்து வரப் போவது நிச்சயமாக துன்பமாகவே இருக்கும். இன்பமோ துன்பமோ தொடர்ந்து நிலைத்திருக்காது. மேற் சொன்னாற் போல் அவை மாறிமாறித் தான் வாழ்க்கையில் வரும். எனவே இன்பம் வரும்போது மனம் போன போக்கிலே நடக்காமல் அதற்காய் துன்பம்வந்து நம்மை தொற்றிக் கொள்ளப் போகின்றது என் பதை உணர்ந்து அதற்கேற்றபடி நடப்பதே நல் லது. அதேபோன்று வாழ்க்கையில் துன்பம் வரும்போது துவண்டுவிடக்கூடாது. தைரியமாக இருக்க வேண்டும். அந்தக் துன்பத்தை அடுத்து இன்பம் வரப்போகிறது. என்பதனை உணர வேண்டும். அதை உணர்ந்து கொண்டால், துவண்டு போகின்ற தன்மை வரவே வராது.

எம்மில் பலபேர் துன்பம் வந்து வருத்தும்போது கன்னங்களில் கைகளை ஊன்றிக் கொண்டும், புலம்பிக்கொண்டும், அதைப்பற்றியே எண்ணியெண்ணி ஏங்கிக் கொண்டும் இருப்பார்கள். இதை நாம் கண் கூடாகக் காணக்கூடியதாகஇருக்கிறதல்லவா? இப்படி இருந்தால்என்ன நடக்குமென்றால் துன்பம் தான் கூடிக் கொண்டிருக்கும். அது குறைவதற்கு வாய்ப்புப் குறைவாகவே தான் இருக்கும். இதற்கு என்ன செய்ய வேண்டு மென்றால் துன்பத்து க்கு எதிராய் எதிர் நீச் சல் போடவேண்டும். ''அதெல்லாம் மனித வாழ்க்கையில் சகஜம் துன்பத்தைக் கண்டு நாம் ஏன்தலை குனிய வேண்டும்? போன்ற எண்ணங்களை எம்மில் வளர்த்தால் துன்பம் என்பது துன்பமாகவே எமக்குத் தெரியாது. அதேவேளை துன்பத்தை முற்றாக வெல்லவும் முடியாதுதான். ஏனெனில் துன்பமும் இன்பமும் கலந்துதான் வாழ்க்கையாக இருக்கிறதே.

எனவே ஒட்டுமொத்தமாக நோக் கின் இன்பமும் துன்பமும் இணைந்த வாழ்வில் வரும் தருணத்தில் இறுமாப்பு அடையாமலும் துன்பம் வரும் தருணத்தில் துவண்டு போகா மல் வாழும் வாழ்க்கையே மகத்தான வாழ்க் கை மகிமை வாய்ந்த வாழ்க்கை. இன்ப துன்பம் இரண்டினையும் அனுபவிக்கத்தக்கவர் களே வையகத்தில் வாழ்க்கை எனும் வண் டியை சிறப்பாய் ஓட்ட வல்லவர்கள். துன்பம் துன்பம் என்று கொண்டிருக்காமல் அத் துன் பத்துக்குள்ளும் நாம் முயன்றால் இன்பம் காணலாம். ஆனாலும் அவரவர் வாழ்க்கையில் வரும் இன்ப துன்பங்களை அவரவர் அனுப வித்தே ஆக வேண்டும். வந்த இரண்டினையும் அனுபவிப்பதே வாழ்க்கை வாழ்வதற்கே! வாழ் வோம் துன்பத்திலும் இன்பம் காண்போம்.

**சரவணமுத்து நவேந்திரன்,**
**எருவில்லூர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தினக்கதிர் சினிமா

# புன்னகை தேசம்

முயற்சி இருந்தால் வாழ்க்கையில் வெற்றி பெறலாம் என்ற கருத்தை வலியுறுத்தி உருவாக்கி இருக்கிறார்கள்.

நல்ல பாடகனாக வர ஆசைப்படும் குணால், ஐ.ஏ.எஸ். அதிகாரியாக வர ஆசைப்படும் அம்சவர்தன், மிமிக்ரி கலைஞனாக கின்னஸ் சாதனை புரிய துடிக்கும் தாமு, இம்மூவரின் ஆசைக்கு அவரது பெற்றோர்கள் ஊக்கம் அளிக் காமல் அவர்களது ஆசையை எதிர்க்கிறார்கள். இதனால் ஊரை விட்டு ஓடிவந்து சென் னையில் வாய்ப்பை தேடி அலைகிறார்கள்.

இந்நிலையில் இந்த மூவரின் நண்பன் தருண்குமார் மாமன் மகள் ஸ்னேகாவை திருமணம் செய்து கொள்ள ஆசையாக மாமனை தேடி வருகிறார். ஆனால் மாமனோ இவரை அடித்து விரட்டுகிறார்.

வாய்ப்பு தேடி அலையும் குணால், தாமு, அம்சவர்தனுடன் தருண்குமாரும் சேர்கிறான். இவர்களது முயற்சிக்கு தருண்குமார் உழைக்கிறார். இவர்களது லட்சியத்தை எட்டுவதற்கு உதவி புரிகிறார்.

மூவரும் வெற்றி பெற்றார்களா ? தருண்குமார் தன் மாமன் மகளை கைப்பிடித்தாரா என்பதே படத்தின் கதை.

சூப்பர்குட் பிலிம்ஸ் என்றாலே ஏதாவது விசேஷம் இருக்கும். இதிலும் இருக்கிறது. வாழ்க்கையில் எதற்கும் முயற்சி செய்தால் லட்சியத்தை அடையலாம் என்ற கருத்தை டைரக்டர் ஷாஜ்ஜகான் சொல்லி இருக்கிறார்.

தருண்குமார், நடிகை ரோஜாரமணியின் மகன். தெலுங்கில் முன்னணி ஹீரோவாக இருக்கும் இவர் தமிழில் இப் படத்தின் மூலம் அறிமுகம் ஆகி இருக்கிறார் என்பதால் இவரது நடிப்பை பற்றி சொல்லி தெரிய வேண்டிய அவசியம் இல்லை.

முதல் தமிழ் படத்திலே ரசிகர்களின் மனதை கொள்ளை கொள்கிறார். தெளிவான தமிழில் வசனம் பேசி நடித்து இருக்கிறார். தனது நண்பர்கள் குணால், தாமு, அம்சவர்தனுக்காக எச்சில் கிளாஸ் கழுவி அவர்களது முயற்சிக்கு உதவுவதும், சபாவில் குணால் பாட ரூ.60 ஆயிரம் தேவை என்கிற போது தனது ஹோட்டலை விற்று பணம் கட்டி அவரது லட்சியத்திற்கு உதவுவதும், தனது தாய்மாமன் தன்னை விரட்டி அடித்ததை நண்பர்களிடம் சொல்லாமல் கௌரவமாக சொல்லுவதும், துன்பங்களை அடக்கிக் கொண்டு நண்பர்களுக்கு தருண்குமார் உதவி செய்யும் போது படம் பார்ப்பவர்களுக்கும், நமக்கும் இப்படி ஒரு நண்பன் கிடைக்க மாட்டானா என்று ஏங்க வைக்கிறார்.

குணால் பாடகனாக புகழ்பெற முயற்சி செய்யும் போது சந்திக்கும் இடைஞ்சல்கள், நண்பர்களை திருப்திபடுத்த பிரபல இசை அமைப்பாளரிடம் உதவியாளராக இருப்பதாக சொல்லுவதும் நடிப்பில் யதார்த்தம் தெரிகிறது. அம்சவர்தன் நடிப்புக்கு வாய்ப்பு தந்துள்ள படம். இவரது வெற்றிக்கு இந்த படம் திருப்பு முனையாக அமையும். இதுவரை நகைச்சுவையில் கலக்கிக் கொண்டு இருந்த தாமு குண சித்திர வேடத்திலும் கலக்க முடியும் என்பதை நிரூபித்து இருக்கிறார்.

தருண்குமாரின் மாமன் மகளாக வரும் ஸ்னேகா அழகான சிரிப்பால் சொக்க வைக்கிறார். தருண்குமாரிடம் தனது காதலை சொல்ல தயங்குவதும், தருண் குமார் தனது முறைமாமன் என்று தெரியாமல் இருப்பதும், ஸ்னேகா தான் மாமன் மகள் என்று தெரியாமல் தருண்குமார் மாமன் மகளைத்தான் திருமணம் செய்வேன் என்று ஸ்னேகாவிடம் சொல்ல, ஸ்னேகா காதல் தோல்வியால் விரக்தியாவதும் யதார்த்தமாக இருக்கிறது.



அம்சவர்தனை துரத்தி காதலிக்கும் ப்ரீத்தா விஜயகுமார் நெஞ்சில் நிற்கிறார். மலேசியா வாசு தேவன், நிழல்கள் ரவி, வினு சக்கரவர்த்தி, வடிவுக்கரசி, மதன்பாப் ஆகியோர் தங்களுக்கு கொடுக்கப்பட்ட கதா பாத்திரத்தை நிறைவு செய்து இருக்கிறார்கள்.

எஸ்.ஏ.ராஜ்குமார் இசையில் ஆறு பாடல்களும் சூப்பர். டோலி டோலி, எங் கள் மூச்சுக்குள்ளோ ஆகிய பாடல்கள் ஒன்ஸ்மோர் கேட்க வைக்கிறது.

ஆர்.பி.சௌத்ரி தயாரிப்பில் கே.ஷாஜ்ஜகானின் ாபுன்னகை தேசம் ாமக்கள் தேசமா

முயற்சி உடையார் இகழ்ச்சி அடையார் என்ற கருத்தை சுவாரஸ்யமாக சொல்லி இருக்கும் டைரக்டருக்கு ஒரு சபாஷ் போடலாம்.

புன்னகை தேசம் இன்றைய இளைஞர்களுக்கு தேவையான, பார்க்க வேண்டிய படம்.

□□□□□□

## உன்னிடத்தில் என்னைக் கொடுத்தேன்



ஏதோ ஒரு பாட்டு என் காதில் கேட்கும்
கேட்கும் போதெல்லாம்
சில ஞாபகம் தாலாட்டும்
என் கண்களின் இமைகளிலே சில
– ஞாபம் சிறகடிக்கும்.
நான் சுவாசிக்கும் மூச்சினிலே சில
– ஞாபகம் கலந்திருக்கும்.
ஞாபகங்கள் மழையாகும் ஞாபகங்கள்
– குடையாகும்
ஞாபகங்கள் தீ மூட்டும் ஞாபகங்கள்
– நீரூற்றும்!
அம்மாகை கோர்த்து நடை பழகிய
– ஞாபகமே
தனியே நடை பழகி நான் தொலைந்தது
– ஞாபகமே
புத்தகம் நடுவே மயிலிறகை நான்
– வளர்த்தது ஞாபகமே
சின்னக் குழந்தையில் சேலை கட்டும்
– ஞாபகம்
வெட்கம் வந்ததும் முகத்தை மூடும்
– ஞாபகம்!
ரயிலின் பயணத்தில் மரம் நகர்ந்தது
– ஞாகபமே
சுற்றும் ராட்டணத்தில் நான் மயங்கிய
– ஞாபகமே
காகிதக் கப்பல் கவிழ்ந்ததுமே நான்
– அழுதது ஞாபகமே
கட்ட பொம்மனின் கதையைக் கேட்ட
– ஞாபகம்
அட்டைக் கத்தியில் சண்டை போட்ட
– ஞாபகம்!

உன்னிடத்தில் என்னைக் கொடுத்தேன் என்ற இந்த திரைப்பரப்பாடல் மூலம் மானிடர்களே உங்கள் மனதில் எங்கோ ஒரு மூலையில் புழுதி படிந்துகிடக்கும் ஞாபகங்களை அசை போட்டு செல்கின்றது. வைரமுத்துவின் வைர வரிகள் மனதை வசீகரப்படுத்த பலரையும் பல முறை கேட்க வைக்கிறது. ஒவ்வொரு மனிதனின் கடந்த காலத்தை நினைவுக்கு கொண்டு வரும் இப் பாடல் சிறுவயதில் தாயின் கரம் கோர்த்து நடை பழகிய ஞாபகம் மனதில் நிழலாடும் அதே வேளை நாம் ஒவ்வொருவரும் விளையாடிய குழந்தைகளுக்கே உரித்தான சில விளையாட்டுக்களையும் இப் பாடல் எம் மனக் கண் முன் கொண்டுவரச் செய்கின்றது. எஸ்.ஏ.ராஜ்குமாரின் இசையில் சுஜாதாவின் குரலும் சேர்ந்து தொலைந்த எல்லோருடைய ஞாபகத்தையும் ஒரு கணம் மீட்டிப் பாக்கச் செய்கின்றன.

சுசாந்தினி

## சினிமா துணுக்குகள்

அஜீத்குமார்-சிம்ரன் இணைந்து நடித்த உன்னைக்கொடு என்னைத் தருவேன் படத்தை இயக்கிய கவி.காளிதாஸ் தொடர்ந்து பட வாய்ப்புகள் கிட்டாததால் தன் குரு இயக்குனர், கே.பாக்கியராஜிடமே மீண்டும் உதவி இயக்குனராக இணைந்து விட்டாராம் தற்போது !





பிரசாந்த் கதாநாயகராக நடிக்க, 'ஜட்ஜ்மெண்ட்' எனும் பெயரில் 'யார்' கண்ணனிடம் இயக்குனர் பயிற்சி பெற்ற வரும் குட்டி பத்மினியின் டி.வி. சீரியல்களில் எபி ஸோட் இயக்குனராக இருந் தவருமான பரஞ்ஜோதி, ஒரு புதிய படத்தை இயக்குகிறார்.



* ரம்பா, தன் தோழிகள் ஜோதிகா-லைலாவுடன் இணைந்து நடிப்பதோடு, தன் அண்ணன் வாசு மற்றும் அம்மா உஷாரா ணியின் பெயரில் தயாரிக்கவும் செய்யும் 'த்ரி ரோஸஸ்' படத் திட்டத்தை கைகழுவி விட்டாராம். எல்லாம் அம்மணியின் அண் ணன் செய்த மெகா ஊழல்தான் காரணமாம். அப்படி என்ன ஊழல் ? தங்கையிடம் நிறைய கணக்கு காட்டி குறைத்து செலவு செய்து லட்சம் லட்சமாய் கமிஷன் அடித்தது பாதி படம் வளர்ந்த நிலையில் ரம்பாவிற்கு தெரியவந்தது. இனி நீயே தயா ரித்து கொள். நான் ஃபிரியாக நடித்துத் தருகின்றேன் என்று தங்கை ஒதுங்கிக் கொண்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ஜிம்மியின் கதை...

நான் பிறந்தது அமெரிக்காவில் எனது எஜமான் இலங்கையைப் பிறப்பிடமாகக் கொண்ட அமெரிக்கப் பிரஜையொருவர். அவர் என்னை ஜிம்மி, ஜிம்மி, என்று செல்லமாக அழைப்பார். அவருக்கு என்மீது அலாதிபிரியம். தினந்தோறும் விதவிதமான இறைச்சி, மீன் வகைகளை உண்பதற்குத் தருவார். அவரது அதி தீவிர கண்காணிப்பில் வளர்ந்து பெரியவனாகி விட்டேன். அவர் தொழில் நிமித்தம் அடிக்கடி வெளிநாடுகளான இங்கிலாந்து, சீனா, அவுஸ்ரேலியா, நைஜீரியா போன்ற நாடுகளுக்குச் சென்றுவருவார்.



மனைவியிடம் சென்று விடைபெற்றுக் கொள்ளும்பொழுது மறக்காமல் என் அருகில் வந்து தனது கைகளினால் பாசத்துடன் தடவிக் கொடுப்பார். நானும் எனது வாலை ஆட்டி நன்றியைத் தெரிவித்துக் கொள்வேன்.

ஒரு நாள் எனக்கு உடல் நலக்குறைவு ஏற்பட்டுவிட்டது. இதனை அவதானித்த அவர் உடனடியாக மிருக வைத்திய நிபுணர் ஒருவரை அழைத்துவந்து உரிய சிகிச்சை அளித்தார். இதனால் எனது நோய் இரண்டொரு நாட்களில் குணமாகிவிட்டது. எனக்கு வெறி (விசர்) ஏற்படாதிருக்க அதற்குரிய மருந்தினை ஊசிமூலம் ஏற்றும் படி மிருக வைத்தியரிடம் கூறுவார்.

எஜமானாருக்கு நன்றிக் கடனாக அவரது மாளிகை போன்ற பங்களாவை இரவு பகலாகக் காவல் காத்து வருவேன். கள்வர்கள் உட்புக முடியாதவாறு வாசல் கதவில் அமர்ந்து கொண்டு சுற்று முற்றும் அவதானித்துக் கொண்டிருப்பேன்.

ஒரு நாள் அவுஸ்திரேலியா சென்றுவிட்டு வீடு திரும்பும் பொழுது கறுப்பு வெள்ளை நிறமுடைய எனது இனத்தைச் சேர்ந்த ஒன்றுடன் வந்திருந்தார். அது எனது இனம் என்றாலும் வேறு வர்க்கத்தைச் சேர்ந்தது.

அதனைக் கண்டதும் நான் குழப்பமோ, கலக்கமோ அடையவில்லை. வழக்கம் போல் வாலை ஆட்டி வரவேற்றேன். அது சற்றுக்கிலேசம் அடைந்ததாகக் காணப்பட்டது.

எஜமான் அதை எனக்கு அறிமுகப்படுத்தினார். அன்றிரவு அதுவும் என்னோடு சேர்ந்து வீட்டைக் காவல் காத்தது. இருவருக்கிடையில் சண்டை சச்சரவுகள் ஏற்படுவதில்லை ஒற்றுமையாகவே வாழ்ந்து வந்தோம். எங்கள் இருவருக்கும் ராஜ மரியாதை தரப்பட்டது.

அன்றொரு நாள் எஜமான் நோய்வாய்ப்பட்டு துடியாகத்துடித்தார். அவரது மனைவி கலக்கமடைந்தவராக தொலைபேசி மூலம் வைத்தியர்களை வரவழைத்து ஆக வேண்டிய பரிசோதனைகள் நடைபெற்றன.

இறுதியில் எஜமானுக்கு ஈரல் புற்று நோய் ஏற்பட்டிருப்பதாக வைத்தியர்கள் கூறிவிட்டனர். வைத்தியர்களின் கூற்றின் படி எஜமான் இன்னும் மூன்று மாத காலத்திற்கே உயிர் பிழைப்பார் என்று தெரிய வந்தது. அவரது மனைவி கலவரமடைந்து காணப்பட்டதோடு, உலகின் பல்வேறு திக்கிலுமுள்ள அவர்களது உறவினர்களுக்குத் தெரியப்படுத்தினார்.

அவர்கள் அனைவரும் விமானமூலம் இங்கு வந்து சேர்ந்தனர். மூன்று மாத காலமாக டாக்டர்களின் தீவிர கண்காணிப்பில் இருந்த எஜமான் ஒரு நாள் எங்கள் எல்லோரையும் விட்டுப் பிரிந்து சென்றுவிட்டார்.

கருணையுள்ளம் படைத்த எஜமானாரை எப்பொழுது? எங்கே காணப்போகின்றோம்.

**அருணா தருமலிங்கம்,**
**காகித நகர்.**


## ரோஜா

சின்னச் சின்ன ரோஜா
சிங்காரா ரோஜா

வண்ண வண்ண ரோஜா
வாசம் வீசும் ரோஜா

பெண்கள் சூடும் ரோஜா
பெண்கள் நெஞ்சே ரோஜா

என்னைக் கவரும் ரோஜா
எழில் மிகு ரோஜா




*ச. நிரேஸ்*
*தரம்– 9*
*மட்/தேர் தாத்தீவு ம. வித்தி.*

## பொது அறிவு

1. நம் நாட்டின் தேசிய பூ - நிலேற்பலப் பூ
2. இலங்கையின் சமாதானப் பறவை- வெண்புறா
3. இலங்கையின் தேசிய மிருகம் - பறக்கும் அணில்.
4. இலங்கையின் அதி உயர்ந்த நீர்வீழ்ச்சி- பம்பரக்கந்த நீர் வீழ்ச்சி
5. இலங்கையின் புதிய பாராளுமன்றம் அமைந்துள்ள இடம்- கோட்டை ஸ்ரீ ஜயவர்த்தனபுரம்
6. இலங்கையில் அமைந்துள்ள இயற்கைத் துறைமுகம்- திருகோண மலை துறைமுகம்
7. இலங்கையில் உள்ள இயற்கை வனம் -சிங்கராஜ வனம்
8. இலங்கையில் உள்ள மிருகக் காட்சிசாலை - தெஹிவளை மிருகக் காட்சிச் சாலை
9. இலங்கையில் விலங்குகளின் சரணாலயம்- யாலை, வில்பத்து
10. பல நாட்கள் தண்ணீர் குடிக்காதிருக்கும் பிராணிகள்- ஒட்டகம், தீக் கோழி.

எம்.ஜமாலுல்லா அஷ்ரப் அலி,
தரம்-5, மட்/அல்ஹீறா வித்தியாலயம், காத்தான்குடி-05.

## மாணவரின் கைவண்ணம்



தே. மதன்ராஜ்,
தரம்-9[B],
மட்/மெதடிஸ்த மத்திய கல்லூரி.

## கண்டு பிடியுங்கள்-44

தோடம்பழங்களைச் சந்தையில் ஒரு பழவியாபாரி பிரமிட் கோபுர வடிவில் அடுக்கி வைத்திருந்தான். புதிய பழங்கள் பார்ப்பதற்கு ஆரோக்கியமாகவிருந்தன. அப்படியே அந்தப் பிரமிட்டினை வாங்கிவிடலாம் என எண்ணினேன். இதில் மொத்தமாக எத்தனை பழங்கள் உள்ளன? என அவனைக் கேட்டேன். எனக்குத் தெரியாது சாமி நீயே கணித்துக் கொள். அடியில் 25 பழங்களை ஐந்தைந்தாக அடுக்கி அப்படியே ஒரு பழம் உச்சியில் வரத் தக்கதாக அடுக்கினேன் என்றான். நான் கணித்து 59 பழங்களுக்குப் பணம் கொடுத்துவிட்டு வாங்கினேன். பழத்தை வாங்கும் போது வியாபாரி சிரித்த நமுட்டல் சிரிப்பின் அர்த்தம் வீட்டிற்கு வந்து மனவியிடம் வாங்கிக் கட்டிக்கொண்ட பிறகுதான் தெரிந்தது. நான் எத்தனை பழங்களுக்குக் கூடக்கணித்துக் கொடுத்தேன்?

**இதற்கான விடையினை தபாலட்டையில் மாத்திரம் எழுதி உங்கள் பாடசாலை முகவரியுடன் 29.03.2002க்கு முன்பாக அனுப்பி வைப்பதோடு தினக்கதிர் முகவரியை வெட்டி ஒட்டி அனுப்பவும்.**

கடந்த வாரம் கண்டுபிடியுங்களுக்கான சரியான விடை '8 நிமிடங்கள்' என்பதாகும்.

**இவ்விடையினை ஏராளமான தம்பி, தங்கைகள் எழுதி அனுப்பியுள்ளனர். அதில் பரிசுக்காகத் தெரிவு செய்யப்பட்டவர்.**

**பாராட்டுக்குரியவர்**

1. ஏ.ஜே.எம்.மினாஜ்,
தரம் - 10[A],
அல்ஹிறா பாடசாலை,
காத்தான்குடி.

2. கி.ஐஸ்வர்யா,
மே/பா/கு கிருஷ்ணகுமார்
பழந்தோட்டம்,
களுவாஞ்சிக்குடி- 09.

3. பி.சுகுணா,
52, வாவி வீதி
சின்ன உப்போடை

அருணோதயன்,
68, பெய்லி குரோஸ் ரோட்,
மட்டக்களப்பு.

4. ச.பானுஜா
மட்/ஆரையம்பதி
இ.கி.மி.த.மா. வித்தியாலயம்,
ஆரையம்பதி.

கண்டுபிடியுங்கள்-44
தினக்கதிர் வாரவெளியீடு,
த.பெ.எண்:- 06,
இல:- 155, திருமலை வீதி,
மட்டக்களப்பு.

## வைரஸ்கள்

வைரஸ்களே நுண்ணுயிரிகளில் மிகவும் சிறியனவாக உள்ளன. இவற்றின் உடம்பு புரோட்டீன் மூலக் கூறுகளால் ஆனது. இலத்தின் மொழியில் வைரஸ் என்பது நச்சுப் பொருள் எனப்பொருள்படும். பெயருக்கேற்ப தம் நச்சுத் தன்மையால் பல நோய்களை உண்டு பண்ணுகின்றன.

## அறிந்து கொள்ளுங்கள்

இரு முதுகுரவர் -தாய்தந்தை
இருமை - இம்மை மறுமை
இரு மரபு -தாய் மரபு தந்தை மரபு
இரு சுடர்- சூரியன்,சந்திரன்.
இரு நிதி - சங்கநிதி, பதுமநிதி
இருவகைப் பொருள்- கல்விப் பொருள், செல்வப்பொருள்

கு.ரமணன்
தரம்-8
மட்/புனித மிக்கேல்
கல்லூரி

## பொது அறிவு

1. இலங்கையின் முதலாவது ஜனாதிபதி யார்?
ஜே.ஆர்.ஜெயவர்த்தன.
2. இலங்கையின் முதலாவது பிரதமர் யார்?
டி.எஸ். சேனநாயக்க.
3. இலங்யையின் இலவசக்கல்வியின் தந்தை
சி.டபில்யு.டபில்யு கன்னங்கரா
4. 2004ல் ஒலிம்பிக் போட்டி நடைபெறும் நாடு
கிரேக்க நாட்டில் ஏதன்ஸ் நகரில்
5. எயார் லங்கா நிறுவனம் ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு
1979
6. இந்தியாவின் முதல் பிரதமர் யார்
பண்டிட் ஜவஹர்லால் நேரு
7. இலங்கையில் ஆகக்கூடிய மழை வீழ்ச்சி உள்ள பிரதேசம்
வட்டவளை
8. இந்தியா சுதந்திரம் பெற்ற ஆண்டு எது?
1947

வி. நிஷாந்தன்
தரம்--9
மட்/ஸ்ரீ மாமாங்கேஸ்வரர்
வித்தியாலயம்
மட்டக்களப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நலமாய் வாழ......

# பிணி பல தீர்க்கும் மூலிகை மகத்துவம்



## அரசு

பெரும் மர இனங்களில் ஒன்றான அரசு இலங்கை இந்தியா போன்ற நாடுகளில் சாதாரணமாகப் பயிராகின்றது. இம் மரத்தை தெய்வத்தன்மை உடையது என மக்கள் நம்புவதால் கோயில்களிலும் கோயில்களை சுற்றி உள்ள இடங்களிலும் நாட்டி வளர்க்கின்றார்கள். காட்டில் உள்ள மிருகங்களுக்கு எல்லாம் சிங்கம் ராஜாவாக இருப்பதைப் போல மரங்களுக்கெல்லாம் இவ்விருட்சம் ராஜாவாக இருப்பதினால் அரசு என பெயர் நாமம் சூட்டப்பட்டுள்ளதாக பழைய நூல்களின் வாயிலாக அறியக் கூடியதாக உள்ளது.

இதன் வேர், பட்டை, வித்து், இலை, ஆகிய யாவுமே சித்த மருத்துவத்தில் மிகவும் முக்கிய இடத்தினை வகிக்கின்றது. இதன் இலைகள் உடலின் வன்மையை மெருகூட்டும் தன்மை வாய்ந்தது. சுரத்தையும் முத்தோஷத்தையும் நீக்கும் பெண்களின் கருப்பையில் உண்டாகும் கோளாறுகளைப் போக்கி கரு வளர்ச்சியை துரிதப்படுத்தும் தன்மையும் வாய்ந்தது. இதன் இலைக் கொழுந்தை பசும்பாலில் அரைத்து சர்க்கரை சேர்த்து அருந்த சுரம் முத்தோஷம் நீங்கும். தேகம் குளிர்ச்சியடையும். இதன் இலைகளை மைபோல் அரைத்து புண்கள் படைகள் முதலியனவற்றுக்குப் போட அவை விரைவில் ஆறிவிடும். அரசம் இலைச்சாற்றை காலில் ஏற்படும் பித்த வெடிப்புக்கு போட வெடிப்பு ரணங்கள் ஆறிப் போகும். அரசம் பட்டையை இடித்து பொடியாக்கி அதனை தீயில் இட்டு கறியாக்கி நீரில் சிறிது நேரம் ஊறவைத்து வடிகட்டி கொடுக்க வீக்கம் தீரும். பட்டைதூளில் சிறிது நீர் ஊற்றி கசாயமாக்கி கொடுக்க சொறிசிரங்குகள் நோய் ஆகியன மிக இலகுவில் சுகமடையும். இப்பட்டையுடன், ஆலம்பட்டை, ஒதியம்பட்டை, நாவல்பட்டை, அத்திப்பட்டை சமன் எடுத்து இடித்து ஒரு பாத்திரத்தில் இட்டு நீர் ஊற்றி கசாயமாக்கி காலை மாலை கொடுத்துவர புரையோடிய புண்கள் குணமடையும். இப்பட்டைத் தூளை புண்களின் மேலே தூவிவர வேண்டும்.

அரசம் வித்தை தேவையான அளவில் சேகரித்து சூரணமாக்கி காலை மாலை உண்டுவர மலச்சிக்கல் தீரும். சீரான சக்தியையும் தாதுவிருத்தியையும் ஏற்படுத்தும் அபூர்வ குணம் இதற்கு உண்டு. இதன் விதைகளைச் சேகரித்து பிற்பாடு இடித்து சூரணமாக்கி காலை மாலை வெந்நீருடன் கொடுத்து வந்தால் சுவாச காசம் எனப்படும் ஆஸ்மா நோய் குணமைடயும். இம் மரத்தின் பாலை சேகரித்து தலைமயிரில் தடவிவரின் சடைமுளைக்கும் இதை துறவிகள் தான் செய்வார்கள்.

இம்மரத்தின் பாலை பித்த வெடிப்பு காணும் பாதங்களில் தடவிவரின் பித்த வெடிப்புக்கள் குணமடையும். இம் மரத்தின் பொதுக்குணம் என்னவெனில் உடலில் பித்தத்தை சமப்படுத்தும். பித்தம் உடலில் மீறினால் வெளி உண்டாக்கும். இதனால் தான் ஞானம் பெற்ற மகான்கள் அரச மரத்தடியில் அமர்ந்து ஞானம் பெற்றதாகவும் அமைதி அடைந்ததாகவும் நாம் அறியக்கூடியதாய் இருக்கின்றது.

**மூலிகை வேந்தன்**
**ஆயுர்வேத சித்த வைத்தியர்**
**ஸ்ரீராமநாதன் கலைவாணன்**
**99/3, வைத்தியர் வீதி,**
**சீலாமுனை, மட்டக்களப்பு.**



### போட்டி இல:-41 பரிசுக்குரியது

## பூபதியின் புகழ்

''தமிழ் மண்ணை காத்திட்ட
பூபதி தாயே! - இந்த
புவியதில் உண்ணா நோன்பிருந்து
உன்னையே ஆகுதியாய்
தியாக வேள்வியதில்
அர்ப்பணித்திட்டாய்
சாத்வீக எதிரில் அராஜகம்
துவண்டு தானே போயிற்று-உன்
புகழ் என்றும் ஒலிக்கட்டும்!''

க. தேவராஜா,
மாணிக்கப்பிள்ளையார் வீதி,
இருதயபுரம் மேற்கு-12.

## மீண்டும் பிறப்பாய் தாயே!

தமிழீழ விடுதலைக்காய் உண்ணா
விரதமிருந்து உயிர் நீத்த அன்னை
பூபதித்தாயே, உன் 14 ஆண்டு
நிறைவு சென்றாலும்,
உன் பெயருக்கு
அழியாத சரித்திரத்தைப்
படைத்துவிட்டாயே.
சாவுக்கு அஞ்சா நெஞ்சம்
படைத்தவள் நீயே
உன் சாந்தமான முகத்தைப்பார்
தாயே! அன்னை பூபதி.
சாந்தி, சமாதானம் ஏற்பட்டால்
எமது மண்ணில் மீண்டும் அன்னை
பூபதியாகப் பிறப்பாய் தாயே!

ம. பிரியா,
கோடைமேடு,
எருவில், களுவாஞ்சிகுடி.

## துணிவு

அகராதியில் அழித்தெழுதிக்
கொள்ளுங்கள் பூபதி அம்மா
ஒரு பெண்ணின் பெயரல்ல
பூகம்பத்துக்குப் புதுப் பெயர்
காலக். குரலுக்கு
சேலை கட்டிய தோற்றம்
சத்தியத்திற்காகச்
சாகத் துணிந்துவிட்டால்
ஒரு சாதாரண மனிதப் பிறவியும்
சரித்திரத்தைப் படைக்க முடியும்.

எம். என். எம். ஜீப்ரி,
காத்தான்குடி-04.

### பாராட்டுக்குரியவை

## இனி வருங்காலம்...

நம் இனம் வாழவென்று
உன் தியாக உயிர் கொண்டு,
வீர வேங்கைகளின் செயல் கண்டு
வெண்புறாவும் உலாவருகுதின்று
ஈரேழு ஆண்டுகள் இருளோடிப் போனதம்மா
எம் தமிழர் இதயம் நொந்து வாடுதம்மா
பூபதிக்கென்றொரு அகராதி புனையட்டும்
ஈழத் தமிழர் வீரம் எங்கும் பேசட்டும்

க. சுரேந்தின்,
29, வன்னியார் வீதி,
கல்முனை-02.

## அணையாத தீபம்

பூப்போன்ற பூபதி
புயலாக மாறி
கரையை கடந்து
காலங்கள் பல
உருண்டோடினாலும்
உண்ணாமல்
உயிர் தியாகம் செய்து
தமிழர் உரிமைகள்
தழைத்தோங்க
நீ ஏற்றிய தியாக தீபம் இன்னும் அணையவில்லையம்மா
தமிழர் உரிமை தம்வசமாகுவரை
இன்னும் உருவாகுவார்கள் உன் போன்ற தியாகச் சுடர்கள்.

ஆ. ஸ்ரீஜா,
காளி கோயில் வீதி,
[illegible]
மட்டக்களப்பு.

## தியாகத் தாயாய்...

முப்பது நாள்
உண்ணா நோன்பிருந்து
முழுப் பௌர்ணமியாய் - நீ
ஜொலித்தாய் அம்மா.
முத்தான உன் சொத்தாக
தமிழ் மக்களின்
முழு உரிமைக்காகப் போராடி....
முடிவொன்று காண்பதற்குள்
உன் பொன்னுடலை
முடித்திட்டாய்
இலங்கைத் திரு நாட்டில்
முன்செய்த தவப்பயனால்
மீண்டும் நீர்
முகிழ்ந்திடுவாய் தமிழ்மக்களின்
வாழ்வினிலே...!

த. தருமராஜா,
காளி கோயில் வீதி,
பெரிய போரைதீவு.




இப்படத்தைப் பிரதிபலிக்கும் கவிதையினை எழுதி அனுப்புங்கள். அனுப்பும் கவிதைகள் வார்த்தைகளில் எண்ணிக்கையில் அதிகமில்லாமல் தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து கீழ்க்காணும் முகவரியைவெட்டி ஒட்டி அனுப்புங்கள். சிறந்த கவிதைகளுக்கான நல்ல தரமான கவிதைப் புத்தகப் பரிசு காத்திருக்கிறது. மேலும் உங்களுடைய கவிதைகளை எதிர்வரும் பங்குனி மாதம் 27ம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்கவும்.

**உங்களுக்கான பரிசினை வழங்குபவர் நாவலூர் சிவஸ்ரீ உ. ஜெகதீஸ்வர ஐயர்.**

**கவிதைப்போட்டி-42**
**தினக்கதிர் வாரவெளியீடு**
**த.பெ.எண்:- 06**
**மட்டக்களப்பு**

# தினக்கதிர் குறுக்கெழுத்துப் போட்டி இல: 13



**இடமிருந்து வலம்**

1. சிகிரியாவில் அரண்மனை அமைத்த மன்னன்.
5. இயேசுக் கிறிஸ்துநாதர் புயலை, அடக்கிய புதுமை இந்த நாட்டில் தான் இடம் பெற்றது. ஆனால் குழம்பியுள்ளது
6. அரபு நாடுகளில் ஒன்றான இந் நாட்டின் பெயரே இதன் நகரமாகும்.
7. பிரபுதேவாவும், சிம்ரானும் இணைந்து நடித்த ஓர் திரைப்படம். சொல் திரும்பி வரக் காரணம் எல்லாம் நேரம் தான்.
8. இந்தியாவின் தாய் மொழி:
12. அறம், பொருள், இன்பம், வீடு எனும் நாற்பொருளும் அமைந்து வருவது (திரும்பியிருக்கிறது)
14. பிரான்ஸ் நாட்டின் நாணய அலகு
15. நிறம் என்பதால்தானோ குழம்பியிருக்கிறது.
16. அரிசி குற்றுவதற்கு இதுவும் அவசியம். (இப்போதல்ல)

**மேலிருந்து கீழ்**

1. தன்னூருக்கு அன்னம். வெளியூருக்கு இதுவென ஒரு பழமொழியுண்டு. ஒற்றுமைக்கும் இப் பறவை உதாரணம்.
2. இரு பொருள் அமையத் தொடுக்கும் சொல்லணி (சிலேடை)
3. சட்டங்கள் அனைத்தும் அடங்கிய கோவையை இப்படி அழைக்கலாம். (குழம்பியுள்ளது)
4. புனித அருளப்பர் சின்னப்பரின் வதிவிடம். இந் நாட்டில்தான் பிரபல்யமான அரண்மனையும் உண்டு.
9. உலகம் (குழம்பியுள்ளது)
10. உலக அதிசயங்களில் ஒன்றான தொங்கு தோட்டம் இங்குதான் இருக்கிறது. ஆனால் இறுதி எழுத்தை இழந்துள்ளது.
11. வாசனை தருவ்து.
13. ஒற்றுமையின் கேடு.
16. மனிதனின் அத்தியாவசியத் தேவைகளில் ஒன்று; ஆள் பாதி.

இதைப் பூர்த்திசெய்து அருகிலுள்ள விலாசத்தையும் வெட்டி ஒட்டி, தபாலட்டையில் மாத்திரம் அனுப்பி வைக்கவும். அதிஷ்டசாலிக்கு ஒருமாத காலத்துக்கு 'தினக்கதிர்' வாரவெளியீடு இலவசமாக அனுப்பி வைக்கப்படும்.

**குறுக்கெழுத்துப்போட்டி -13**
**தினக்கதிர் வாரவெளியீடு,**
**த.பெ.எண்:- 06,**
**இல:- 155, திருமலை வீதி,**
**மட்டக்களப்பு.**

கடந்தவார குறுக்கெழுத்துப் போட்டி - 12 ற்கான சரியான விடைகள் வருமாறு:

| இடமிருந்து வலம் | மேலிருந்து கீழ் |
|---|---|
| 1. தீர்க்கதரிசி | 1. தீர்த்தம் |
| 5. புரட்டா (தி) | 2. ஈராக் |
| 7. ஈகை | 3. தபு |
| 9. லெனின் | 4. சிட்னி |
| 10. தனு | 6. பாடான் (ண்) |
| 11. புரவி | 8. புகை |
| 14. பயறு | 9. லெவியதன் |
| 16. கவி | 12. பரதன் |
| 17. (ம) ன்மதன் | 13. மகலன் |
| 19. தன்மை | 15. மறுமை |
| 20. பிரான்ஸ் | 18. சிபி. |

குறுக்கெழுத்துப்போட்டி -12ற்கு சரியான விடைகளை ஏராளமானோர் நிரப்பி அனுப்பியுள்ளனர். அதில் பரிசுக்காகத் தெரிவானவர்:

**வீ. ரங்கநாதன்,**
**தேற்றாத்தீவு-01,**
**தேற்றாத்தீவு.**

### பாராட்டுக்குரியவர்கள்

**1. மே. அனுசாந்தி,**
**செட்டிபாளையம்.**

**2. ஆ. டினேஸ்,**
**ஒந்தாச்சிமடம்.**

**3. ச. ரவிச்சந்திரா,**
**மங்கையற்கரசியர்**
**மகளீர் இல்லம்,**
**மட்டக்களப்பு.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீரைத் தூயதாக்கும் மாற்றுச் செயற்பாடு சூரிய வெப்பக் கிருமிநாசினி முறை

## -தாகத்திற்குத் தண்ணீர்-தண்ணீருக்கு சோடீஸ்-

மனித உடற் தொழிற்பாட்டுக்கு நீர் அத்தியாவசியமானது. அவ்வாறு அத்தியாவசியமான நீர் வளர்முக நாடுகளில் கிணறுகளிலிருந்தும் நீரோடைகளிலிருந்தும் ஆறுகளிலிருந்தும் குளங்களிலிருந்தும் பெறப்படுகின்றது. ஆனால் இந்நீரில் பல நோய்களுக்குக் காரணமான ''கொலி போம்'' (Coliforms Bacteria) பக்டீரியா காணப்படுகின்றது. ஆயிரக்கணக்கான மக்கள் இறப்பதற்குக் காரணமான வயிற்



றோட்டம், வயிற்றுளைவு, வாந்திபேதி, மலச்சிக்கல், கொலறா, மஞ்சள்காமாலை போன்ற பல்வேறு நோய்கள் அசுத்த நீரினால் உண்டாகின்றது. இந் நீர் நிலைகளுக்கு அண்டையில் மலசலகூடம், கழிவு வாய்க்கால்கள் இருப்பதும் மற்றும் மிருகங்களின் கழிவுகளை வெட்டிப் புதைத்தல் போன்ற பல்வேறு காரணங்களினால் பக்டீரியாக்கள் வாழ்வதற்கு ஏதுவான சூழல் ஏற்படுகின்றது. இவ்வாறான நிலைமைகளை மாற்றியமைத்தல் என்பது கல்லில் நார் உரிப்பதற்கு ஒப்பானதாகும்.

ஆகவே இவ்வாறு நீரினால் ஏற்படும் பிரச்சினைகளை தீர்க்க, சுகாதார முறைகள் மூலம் நீரிலுள்ள பக்டீரியாக்களை அழித்தல். என்பது அனேகமான நகர்ப்புறங்களிலும், கிராமங்களிலும் வாழும் மக்களுக்கு பெரும் சிரமமாகவே உள்ளது. நீரைக் கொதிக்க வைத்து ஆறவைத்துக் குடிப்பது அல்லது குளோரின் போட்டு சுத்தமான நீரை குடிப்பது என்பது மக்களின் வழக்கமான செயற்பாடாகவுள்ளது. இதற்குப் பணம், நேரம் அதிகம் தேவைப்படுவதனால் ஒரு மாற்றுச் செயற்பாட்டினை நாம் பயன் படுத்தவேண்டியுள்ளது.



இவ்வகையில் ஒரு இலகுவான முறையினை ''அரச சார்பற்ற நிறுவனங்களின் நீர் விநியோகம் மற்றும் கழிப்பிட வசதி தசாப்த கால சேவை'' நிறுவ்னம் ''மன்று'' நிறுவனத்தி னூடாக அறிமுகப்படுத்தி வருகின்றது. இது இயற்கையாய்க் கிடைக்கும் சூரிய ஒளியைப் பயன்படுத்தி நீரைத் தொற்று நீக்கிப் பருகுவதுதற்கு மிகச்சிறந்த முறையாக காணப்படுகின்றது. இச்செயற்பாட்டினை ''சோடீஸ்'' அதாவது ''சூரிய வெப்பக் கிருமிநாசினிமுறை'' எனக் குறிப்பிடலாம். மார்ச் 22 உலக நன்னீர் தினம். இத்தினத்தை முன்னிட்டு நீரைத் தூய்மைப்படுத்தும் முறையினை இன்றைய நாளில் வாசகர்களுக்கு வெளிப்படுத்துகிறோம்.

சோடீஸ் என்பது சூரிய ஒளியைப் பயன்படுத்தி நீரைச் சுத்தமாக்கும் மிக இலகுவான முறையாகும். அதாவது சூரிய ஒளியில் உள்ள (அல்ட்ராவயலட்) ஊதாக் கதிர் ஏ(A) யைப் பயன்படுத்தி, பக்டீரியாக்களையும், வைரசு போன்ற நுண்ணிய கிருமிகளையும் அழித்து சுத்தமான நீரை அருந்தி நோய்களைத் தடுப்பதே இதன் முக்கியமான குறிக்கோளாகும்.

இம்முறை மூலம் நீரைச் சுத்தப்படுத்துவதற்குப் பின்வரும் படிமுறைகளைச் செயற்படுத்தலாம்.

- ❑ ஒளி ஊடுருவக்கூடிய நிறமற்ற பிளாஸ்டிக் போத்தலே இதற்கு சிறந்ததாகும்.
- ❑ அப்போத்தலின் வெளிப்புறத்தின் அரைப் பகுதிக்கு (நீள் பகுதியாக) கறுப்பு நிறமையினைப் (லெகர்) பூசி நன்றாகக் காய வைக்கவும். கறுப்பு நிறத்தினைப் பயன்படுத்துவதன் நோக்கம், கறுப்பு நிறம் சூரிய ஒளியை உறிஞ்சிக்கொள்ளும் தன்மையுள்ளது. இதனால் போத்தலிலுள்ள நீர் விரைவாக வெப்ப நிலையை அடையும்.
- ❑ போத்தலை நன்றாகப் கழுவிய பின்னர், 30% கலங்கலற்ற நீரை முழுவதுமாக நிரப்பி நன்றாக இறுக்கி மூடி, நிறம் பூசப்பட்ட பகுதி கீழேயும், நிறம் பூசப்படாத பகுதி மேல் நோக்கியும் (படத்தை கவனிக்கவும்) இருக்கத்தக்கவாறு, கிடையாக மரம், செடி, கொடிகளால் மறைக்கப்படாத, நன்றாக சூரிய ஒளி படக்கூடிய இடத்தில், குறைந்தது 5-6 மணித்தியாலங்கள் வைக்கவும்.
- ❑ போத்தலை சூரிய ஒளியில் வைத்த பின்னர் 50°C வரை சூடானதும் நீரிலுள்ள பக்ரிரீயாக்களும் (கொலிபோம்), நுண்கிருமிகளும் அழிந்து விடும்.
- ❑ இப்போது சுத்தமாக்கப்பட்ட நீரை குடிப்பதற்கும், வீட்டுப்பாவனைக்கும், சேமித்து வைத்துப் பயன்படுத்த முடியும். சூரிய ஒளி மூலம் நீரை சுத்தப்படுத்தும் இம் முறை மூலம், நேரம் மிச்சப்படுகின்றது, நீரைக் கொதிக்க வைத்து ஆற வைத்து அருந்துவதில் ஏற்படும் சிரமங்களான விறகு, மின்சாரம், வாயு மற்றும் எரிபொருள் செலவு இல்லாமல் போகின்றது, நீரிலுள்ள பாதிப்பை உண்டு பண்ணக்கூடிய பக்டீரியா, (Coliform Bacteria) அழிக்கப்படுகின்றது, நீரில் உள்ள மணம், நிறம், சுவை என்பவற்றில் எந்தவிதமான மாற்றமும் ஏற்படாத அதேவேளை இந் நீர் அதிகரிக்கவோ, குறைக்கப்படவோ மாட்டாது என்பது இங்கு கவனிக்கப்பட வேண்டிய முக்கிய விடயமாகும்.

**பிரான்சிஸ்**
**மன்று**

சோடீஸ் முறையானது தற்பொழுது எமது பகுதியில் அறிமுப்படுத்தப்பட்டு வருகின்றது. நாம் பல கிராமங்களிலுள்ள குடிநீரை எடுத்து பரீட்சித்துப் பார்த்ததில் பெரும் அதிர்ச்சி காத்திருந்தது. குறிப்பாக காத்தான்குடிப் பிரதேசத்தில் எடுக்கப்பட்ட நீரில் ''1800 கொலி போம்'' பக்ரிரியா இருப்பது தெரியவந்தது. இந்நீரினை 'சோடீஸ்' முறையில் பரீட்சித்து தண்ணீர் ஆய்வுக்கு உட்படுத்தியதில் 1798 கொலிபோம் பக்ரிரீயாக்களின் அழிவுக்கு இம்முறை உறுதுணையாக இருந்துள்ளது தெரியவந்தது.

ஆகவே இம்முறையானது தற்பொழுது அறிமுகப்படுத்தப்பட்டு வந்தாலும் வளர்ச்சியடைந்துவரும் நாடுகளில் அறிமுகப் படுத்தப்பட்டு பல காலங்கள் ஆகின்றன. குறிப்பாக கொலம்பியா, இந்தோனேசியா, தாய்லாந்து, சீனா போன்ற பல்வேறு நாடுகள் 'சோடீஸ்' முறையினை நடைமுறைப்படுத்தி வருகின்றது. 'சோடீஸ்' முறை மூலம் 84%மான மக்கள் நன்மை அடைந்தது மாத்திரமல்லாது நோயிலிருந்தும் பாதுகாக்கப்பட்டதை பல ஆராய்ச்சிகள் வெளிப்படுத்தியிருக்கின்றது.

எனவே 'சோடீஸ்' சம்பந்தமான மேலதிக தகவல்களைப் பெற்று பயனடைய விரும்புவோர் ''**மன்று**'' நிறுவனத்துடன் தொடர்பு கொள்ளலாம்.

நல்ல சுத்தமான குடிநீர் நல்ல ஆரோக்கியத்தைத் தருகின்றது. வாழ்க்கையில் கிடைக்கக்கூடிய அத்தனை வளங்களையும் கொடுக்கின்றது. சுத்தமான நீரைக் குடித்து சுகமாக வாழ்வோம்.

---

# திருகோணமலை பெரிய குளத்து விகாரைக் கல்வெட்டு!

**திருகோணமலையில் முதலாம் ராஜேந்திர மன்னனால் உருவாக்கப்பட்டதே வெல்கம் விகாரை! அதன் மறுபெயர் நடனார் கோயில். வெல்கம் விகாரைத் தமிழ்க் கல்வெட்டு எடுத்தியம்பும் தமிழனின் மதப் பொறுமை வரலாறு.**

இந்த வாரம் திருகோணமலை மாவட்டத்தில் பெரிய குளத்துக்கு அருகே அமைந்திருந்த வில்கம் விகாரைக் கல் வெட்டுகள் சம்பந்தமாக உங்களுடன் எழுத்து மூலம் கதைக்க இருக்கிறேன். இக் கட்டுரைகள் சம்பந்தமாக விமர்சனம் செய்யுமாறு வரலாற்று ஆர்வலர்களைக் கேட்டுக் கொள்கின்றேன். தமிழ்க் கல்வெட்டுக்கள் பற்றி எழுதப்படும் இக் கட்டுரைகள் பொது மக்களுக்காக எழுதப்படும் விளக்க கட்டுரைகளாகும். இதன் ஆராய்ச்சி சம்பந்தமான அதிக தகவல்கள் எம்மிடமுண்டு. ஆராய்ச்சி மாணவர்கள், ஆர்வம் உள்ளோர் இதன் மேலதிக விபரங்களை எம்மிடம் பெறலாம்! பெரிய குளம் அருகே வெல்கம் விகாரை

**வரலாற்று வாணன்**
**திக்கவயல்**
**சி.தர்மகுலசிங்கம்**

திருகோணமலை மாவட்டத்தில் அமைந்திருக்கிறது. இந்த விகாரையின் பழைய பெயர் நடனார் கோயில். இக் கோயிலில் கண்டுபிடிக்கப்பட்ட கல்வெட்டுகள் நான்கு. ஒரு கல்வெட்டில் மூன்று உடைவுகள் இருக்கின்றன. இந்த உடைவுகள் உள்ள கல்வெட்டு சோழர் காலத்து மன்னன் ராசேந்திர சோழன் காலத்துக் கல்வெட்டு என வர லாற்று ஆய்வாளர்கள் தெளிவுபடக் கூறியுள்ளனர். இக் கல்வெட்டுகளில் இரண்டாவது, மூன்றாவது, நான்காவது கல்வெட்டுக்கள் பதி னோராம், பன்னிரண்டாம் நூற்றாண்டுக் கல் வெட்டுக்கள் என்றே மதிப்பிடப்படுகின்றது. இந்த நான்கு தமிழ்க் கல்வெட்டுக்களும் கண்டுபிடிக்கப் பட்ட செய்தி 1953ம் ஆண்டின் புதைபொருள் ஆரர்ய்ச்சி அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. இக் கல்வெட்டுக்களின் புதைபொருள் ஆராய்ச்சிக் கல்வெட்டு எண் 2246.

முதலாவது கல் வெட்டில் 13 வரிகள் கூறும் செய்தி முக்கிய செய்தியாகும். ''ராஜேந்திர சோழன் மேற்குச் சாளுக்கிய மன்னன் ஜெயசிம்மாவை துணிகரமாக வென்றான்''

கல்வெட்டின் இரண்டாவது உடைவின் பின்பு 4 வரிகளும், மூன்றாவது உடைவின்பின்பு 16 வரிகளும் உள்ளன. இது தென்கிழக்கு ஆசியாவில் ஸ்ரீவிஜய என்பவருக்கு ராஜேந்திர சோழன் எடுத்த எதிர் நடவடிக்கைகளைக் காட்டி நிற்கிறது.



1வது பிரதான கல்வெட்டு. புதைபொருள் ஆராய்ச்சித் திணைக்களத்தால் வெளியிடப் பட்டது.



2வது கல்வெட்டு



வெல்கம் விகாரையில் அல்லது நடனார் கோவிலில்கண்டுபிடிக்கப்பட்ட உடைந்த கல்வெட்டு



4வது கல்வெட்டு

### இரண்டாவது கல்வெட்டு

வெல்கம் விகாரையில் கண்டுபிடிக்கப் பட்ட இரண்டாவது கலவெட்டு பின்வரும் வாசகங்களை உள்ளடக்கி இருக்கின்றது. ''எழுநாடன் கந்தன் இயக்கன் இட்ட திருநந்தா விளக்கு'' எழுநாடு, ஏழ்பனைநாடு என இரண்டு நாடுகள் தமிழிலக்கியத்தில் சுட்டிக் காட்டப்படுகின்றன. எழுநாடு என்பது சோழ நாட்டைக் குறித்தது. எழுபனை நாடு என்ற பதம் இலங்கையை அல்லது யாழ்ப்பாணத்தைக் குறித்து இருக்கலாம்.

'சோழ நாட்டைச் சேர்ந்த கந்தன் மகன் இயக்கன், ஏற்றிய திருநந்தா விளக்கு' என்பதே இரண்டாவது கல்வெட்டுக் சுட்டிக் காட்டிய வாசகங்கள் (மிகுதி தெளிவில்லை)

### மூன்றாவது கல்வெட்டு

மூன்றாவது கல்வெட்டும் பிரதானமான ஒன்றே. தமிழில் உள்ள இந்தக் கல்வெட்டு புத்தரின் பெயரால் விகாரைக்கு அளிக்கப்பட்ட அன்பளிப்புகளைக் குறிப்பிடுகின்றது. பதினொரு வரிகளைக் கொண்ட இக் கல்வெட்டில் இரண்டு வரிகள் தெளிவில்லாது உள்ளது. மூன்றில் இருந்து பதினொராவது வரிசை வரை உள்ள வசனங்கள் பின்வருமாறு த்மது செய்தியினைச் சொல்லியுள்ளது.

ஐந்து எருது மாடுகள், முப்பத்தைந்து பசு மாடுகள், புத்தபெருமானின் பெயரால் சத்த விகாரை எனச் சொல்லப்படும் வெல்கம் விகாரை அல்லது ராஜராஜப் பெரும்பள்ளிக்கு வழங்கப் படுகின்றது.

இந்த விகாரை மும்முடிச் சோழ மண்டலத்தில் அமைந்திருப்பதாய்க் கல்வெட்டு சுட்டிக் காட்டுகின்றது. மும்முடிச் சோழ மண்டலம் இலங்கைக்குச் சோழர்களால் வைக்கப்பட்ட பெயர் என வரலாறு கூறுகின்றது.

### நாலாவது கல்வெட்டு

இந்தக் கல்வெட்டின் இலக்கம் 2245 16 வரிகளைக் கொண்ட இக் கல்வெட்டில் 3 வரிசைகள் அழிந்துள்ளன.

### எமது விவாதங்கள்

வெல்கம் விகாரை ஒரு பௌத்த விகாரை. அங்கு நான்கு தமிழ்க்கல்வெட்டுக்கள் கண்டுபிடிக்கப்பட்டன. ஒரு கல்வெட்டில் கூடச் சிங்களம் இல்லை. அவ்வாறு எனில் இங்கு தமிழ் பேசிய பௌத்தர்களே இதனை ஸ்தாபித்தனர். அவ்வாறு இல்லையெனில் சோழ மன்னன் முதலாம் ராஜேந்திரன் இதனை ஸ்தாபித்து இருக்கலாம். ஏனெனில் முதலாம் ராஜேந்திரன் போர் வெற்றியைப் பாடும் கல்வெட்டும், புத்தரின் பேரால் கொடுக்கப்பட்ட சோழ ராச்சியத்தின் தானங்களும், நிச்சயமாக இந்த விகாரை சிங்களம் பேசும் தேரர்களைக் கொண்ட ஒரு பௌத்த விகாரையாக இருந்தது என்பதை முற்று முழுதாக நிராகரிக்கிறது. கந்தன் மகன், இயக்கன் எனக் காட்டப்படுவது இயக்கர் பரம்பரையின் தொடர்ச்சி சோழ ராச்சியத்தில் நிலவியதைத் துலாம் பரமாக எடுத்துக் காட்டுகிறது.

இலங்கை வரலாற்றில் குவேனி இயக்கர் குலப் பெண்ணாகவே சொல்லப்படுகிறாள். அவ்வாறு எனில் அவள் திராவிடப் பெண்ணே! சிங்கபாகுவின் மகன் விஜய எனச் சொல்லப்படுவது விஜயன் என்பதன் திரிபே. அவன் ஒரு திராவிட பாரம்பரியத்தைக் கொண்டிருந்தமையால் தான் முதற் தடவையாக இயக்கர் குலம் பெண் குவேனியைத் திருமணம் செய்ய முடிந்தது.

இலங்கை வரலாற்றில் சிங்களமும்-பௌத்தமும் என்பது ஏற்றுக் கொள்ள முடியாத ஒன்று. பௌத்தத்தை முதலில் வளர்த்தவர்கள் தமிழர்களே என்பது வெளிப்படையானது. அதனைவெல்கம் விகாரைத் தமிழ்க் கல்வெட்டுகள் துலாம்பரமாக எடுத்தியம்புகின்றன.

கீழேயுள்ள படங்கள் வெல்கம் விகாரை அல்லது நடனார் கோயில் எனச் சொல்லப் பட்ட திருகோணமலை மாவட்டத்தின் ஆதித் தமிழ்க்கல்வெட்டுகள்!

இந்த நான்கு கல்வெட்டுகளும் இங்கு காட்டப்பட்டு உள்ளன! இப் படங்கள் தமிழ்க் கல்வெட்டுக்கள் சம்பந்தமாக ஏ.வேலுப்பிள்ளை எழுதிய நூலில் இருந்தே எடுக்கப்பட்டன. அவருக்கும் எமது நன்றி உரியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## –ஒரு இலட்சம் தமிழ் மக்களின் குருதி படிந்தது இம்மண்–
# சுயநிர்ணய உரிமையுடன் கூடிய தீர்வையே விடுதலைப்புலிகள் எதிர்பார்க்கின்றனர்!

## புலிகளின் துணை அரசியல் பொறுப்பாளர் விசு

(அரியம்)

''நோர்வே அனுசரணையுடன் உருவான பாலஸ்தீன இஸ்ரேல் சமாதான உடன்படிக்கையின் பின் யசீர் அறபாத் வீட்டுக் கைதியாக வைக்கப்பட்ட சம்பவம் எங்களுக்கு நிச்சயமாக வராது. ஏனெனில் நாங்கள் படைப்பலத்துடன் தான் பேச்சுவார்த்தைக்கு செல்கின்றோம்'' என மட்டக்களப்பு அம்பாறை மாவட்ட துணை அரசியல் பொறுப்பாளர் விசு கரடியனாறு மகா வித்தியாலயத்தில் நேற்று இடம்பெற்ற அபிவிருத்தி ஆலோசனைக் கூட்டத்தில் தெரிவித்தார்.

துணை அரசியல் பொறுப்பாளர் விசு அங்கு தொடர்ந்து பேசுகையில், ''தமிழனின் படைப் பலத்தை அதிகரிக்கும் நோக்கில் தான் வீட்டுக்கொரு போராளியை தாருங்கள் என்று கேட்கின்றோம். இன்று எமது படைப்பலம் குறைந்திருந்தால் நாம் இந்த நிலைக்கு வந்திருக்க முடியுமா? என்பதை சிந்தித்துப் பாருங்கள். படுவான்கரைப் பகுதி மக்கள் வீட்டுக்கொரு போராளியைத் தந்தனர்.

தற்போது ஸ்ரீலங்கா அரசின் பிரதமர் ரணிலுடன் எமது தேசிய தலைவர் மேதகு பிரபாகரன் அவர்கள் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் நோர்வேயின் மத்தியஸ்தத்துடன் கைச்சாத் திட்டார். எல்லோரும் எதிர்பார்த்தார்கள் ஸ்ரீலங்காவின் பிரதமரும் எமது தேசிய தலைவரும் ஒரே மேசையில் வைத்துத்தான் கையொப்பம் இடுவார்கள் என. ஏன் அவ்வாறு இடவில்லை? தற்போது செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தம் புரிந்துணர்வு உடன்படிக்கை மட்டுமே. உறுதியான தீர்வு எட்டும் பட்சத்தில் மட்டுமே அவ்வாறான நிலை தோன்றும்.

தற்போது புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திட்ட பின் அதனை மிகவும் கவனமாக எமது இயக்கப் போராளிகள் கடைப்பிடித்து வருகின்றனர். இப்புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் படி ஏ-9பாதை எதிர்வரும் 24ஆம் திகதிக்கிடையில் திறக்கப்பட வேண்டும். இதற்கு சகல ஒத்துழைப்பையும் எமது தரப்பு வழங்கியுள்ளது. ஆனால் படைத்தரப்பு இன்னும் இழுத்தடித்துக் கொண்டு இருக்கிறது. இது ஒன்றில் இருந்து யார் புரிந்துணர்வு ஒப்பந்தத்தை சரிவர அனுஷ்டிக்கிறார்கள் என்பது தெரியும்.

கடந்த போராட்ட காலத்தில் இருந்து இன்று வரை எமது இயக்கத்தில் 17603 பேர் மாவீரர்களாகியுள்ளனர். கிட்டத்தட்ட 70 ஆயிரம் தமிழ் மக்களை இழந்துள்ளோம். இரண்டும் சேர்த்து மொத்தமாக ஒரு இலட்சம் தமிழ் மக்களின் இரத்தம் சிந்திய மண்ணில்தான் நாம் இன்று வாழ்ந்து கொண்டிருக்கிறோம்.

அவர்க[illegible]பாகங்கள் வீண் போகக் கூடாது. சுயநிர்ணய உரிமையுடன் கூடிய தீர்வுதான் எமக்கு தேவை. இதை எட்டுவதற்காகத்தான் எமது படைப்பலத்தை அதிகரிக்க வேண்டியுள்ளது. படைப்பலம் என்றால் போராடுவதற்கு மட்டும் என்று நினைக்கக்கூடாது. அரசியல் வேலைகளை திட்டமிட்ட முறையில் செய்யவும் படைப்பலம் அவசியம். எமது இயக்கத்தில் எத்தனையோ இளைஞர்கள் விருப்புடன் இணைந்து கொண்டுதான் இருக்கிறார்கள். விரும்பி வரும் இளைஞர்களை நாங்கள் வீட்டிற்கு அனுப்பமாட்டோம். தமிழனின் படைப்பலத்தை தொடர்ந்தும் அதிகரிக்க வேண்டிய காலத்தின் தேவை எமக்குண்டு.

எமது தேசியத் தலைவரை முழு உலகத் தமிழர்களும் தலைவராகவும் விடுதலைப் புலிகளை ஏக பிரதிநிதிகளாகவும் ஏற்றுள்ளனர். வடக்கு கிழக்கு வாழ் மக்கள் பொங்கு தமிழ் எழுச்சி மூலம் இதனை நிரூபித்துள்ளனர்.

விடுதலைப் புலிகளுடன் தமிழ் மக்கள் அனைவரும் நேரடியாக உறவாடி உரிமையுடன் எந்தப் பிரச்சினைகளானாலும் தயக்கமின்றி கூறுங்கள். உங்களின் பிள்ளைகள் தான் நாங்கள் என்பதை மறக்க வேண்டாம்'' எனவும் கூறினார்.

# கி.ப.கழக மாணவர்களின் உலகமயமாதல் கருத்தரங்கு

(அதிரன்)

'உலக மயமாதலின் விளைவுகளும் அதனை அபிவிருத்தியடைந்து வரும் நாடுகள் எதிர்கொள்ளலும்' என்ற தலைப்பிலான உலக மயமாதல் கருத்தரங்கொன்று நேற்று முன்தினம் கிழக்குப்பல்கலைக்கழக புவியியல் துறை மாணவர் சங்க ஏற்பாட்டில் கிழக்குப்பல்கலைக்கழகத்தில் நடைபெற்றது.

மாணவர் சங்கத்தலைவர் யோகராஜ் தலைமையில் நடைபெற்ற இக்கருத்தரங்கில் கருத்துரையினை கிழக்குப்பல்கலைக் கழக உபவேந்தர் பேராசிரியர் ம.செ.மூக்கையா வழங்கினார்.

உபவேந்தர் தமது கருத்துரையில் உலகமயமாதலில் இரண்டு விடயங்கள் பங்காற்றுகின்றன. ஒன்று உலகம் முழுவதிலுள்ள தகவல் பரிமாற்றப்படும் வேகம், இரண்டாவது திறந்த பொருளாதார கொள்கை. இதன் ஓட்டத்துக்கு ஏற்ப நம்மைத்தயார்படுத்திக்கொள்ளவேண்டும் என்றார்.

அதனைத் தொடர்ந்து நுண்கலைத்துறை விரிவுரையாளர் சி.ஜெயசங்கர்,மாணவன் கே.கௌரீஸ்வரன் ஆகியோரும் கருத்துரை வழங்கினர்.

உலகமயமாதல் கருத்தரங்கு நிகழ்வு புவியியல்துறை மாணவர் சங்கச் செயலாளர் செல்வி புஸ்பறாஜினியின் நன்றியுரையுடன் நிறைவுபெற்றது.

# களுவன்கேணி சந்தி இராணுவ முகாமில் படையினருடன் பொலிஸாரும் கடமை

வந்தாறுமூலை களுவன் கேணி சந்தியில் அமைந்துள்ள இராணுவ முகாமில் படையினருடன் பொலிஸாரும் கடமையில் ஈடுபட்டுள்ளனர்.

அரசாங்கத்திற்கும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்த கைச்சாத்துக்குப் பின்னர் மேற்படி இராணுவ முகாமில் படையினருடன் பொலிஸார் நிறுத்தப்பட்டுள்ளனர்.

பிரதான வீதி கண்காணிப்பின் போது மேற்படி பொலிஸாரும் கடமையில் ஈடுபடுவதை அவதானிக்க முடிகின்றது.

இதே வேளை இது போன்ற பல இராணுவ முகாம்கள் இருந்தும் வந்தாறுமூலையில் மாத்திரம் படையினருடன் பொலிஸார் நிறுத்தப்பட்டது குறிப்பிடத்தக்கது.

# அன்னை பூபதியின் நினைவு நாள் பல்வேறு இடங்களிலும் தோரணம்

(பாண்டிருப்பு நிருபர் கேதீஸ்)

அன்னை பூபதியின் 14வது ஆண்டு நினைவு தினத்தை அனுஷ்டிக்கும் முகமாக கல்முனைப் பிரதேசத்திலும் அண்டிய பல இடங்களிலும் சிவப்பு மஞ்சள் கொடிகள், வாழை மரத்தோரணங்கள் கட்டப்பட்டும், அன்னை பூபதியின் உருவப்படம், அன்னை தொடர்பான வாசகங்கள் என்பன ஒட்டப்பட்டும் இம்முறை பொதுமக்கள் மிகவும் மும்முரமாக அன்னையின் நினைவு தினத்தை அனுஷ்டித்து வருவதைக் காணக்கூடியதாக உள்ளது. கல்முனை நகரம்.

நற்பிட்டிமுனை, பாண்டிருப்பு, நீலாவணை, கல்லாறு என தொடராக அன்னை பூபதியின் நினைவுதின பதாதைகளும், சிவப்பு மஞ்சள் கொடிகளும் வாழைமரங்களும் கட்டப்பட்டு காணப்படுகின்றன.

# நட்புக்காக...

(9ம் பக்கத் தொடர்...)

நீயோ பணக்காரப் பிள்ளை. யூட் ஒரு அநாதை. அவன் உன் மீது அன்பு கொண்டிருந்தான். அவன் விடுதி நண்பர்கள், நீ இப்படிச் செய்து விட்டதாகச் சொன்னார்களாம். அவன் என்ன சொன்னான் தெரியுமா? என் பெரியப்பா எனக்கு எந்த உதவியும் செய்யவில்லையென்றாலும் பரவாயில்லை. ஆனால் என் உயிர் நண்பனை இவர்கள் எல்லாரும் இப்படி நினைத்தது தான் என்னால் தாங்க முடியவில்லை. பாதர் அவன் எனக்குப் பொய் சொல்ல மாட்டான் என்றான். பார்த்தாயா? உனக்கு இப்படி ஒரு நல்ல நண்பனை ஆண்டவர் தந்தார். நீ.. நீ.. செய்தது அவனுக்கு துரோகம். இப்படி உன் மீது நம்பிக்கை கொண்ட நண்பன். நீயோ துரோகம் செய்து விட்டாய் என்று அறிந்தால் எப்படித்துடித்துப் போவான் என்பதைச் சிந்தித்துப்பாரும் எட்வின். இதே போல்தான் அன்று நம் ஆண்டவராகிய யேசுக் கிறிஸ்துவும் அவர் நேசித்திருந்த நண்பர்களில் ஒருவனான யூதாஸ்காரியோத் அவரைக் காட்டிக்கொடுக்க முனைந்ததை அறிந்த யேசு எப்படித் துடித்தார் தெரியுமா? இப்போது சொல். யூதாசுக்கும் உனக்கும் என்ன வேறுபாடு? நீ யூட்டின் மனதை மட்டும் துன்பப்படுத்தவில்லை. யேசுவின் இதயத்தையும் கூடத்தான் நீ துன்பப்படுத்தியுள்ளாய்.

எட்வினின் கண்கள் தாரை தாரையாக நீரை வடித்தது. அவன் இதயம் மிகவும் நொந்துபோனான். பாதரின் இந்தப்பேச்சு அவன் வாழ்வையே மாற்றிப்போட்டது.

பாதர் என்னை மன்னித்து விடுங்கள். இனிநான் அப்படி நடந்து கொள்ள மாட்டேன. அது மட்டுமல்ல இவ்வளவு காலமும் நான் நடந்து கொண்டவிதத்தை வெறுக்கிறேன். இப்பவே நான் யூட்டைப்பார்க்வேணும். எழுந்து ஓடினான். விடுதியை நோக்கி ஓடினான். அங்கே தன் ரூமுக்குள் அடைபட்டுக்கிடந்து எட்வினின் பிரிவுத்துயரத்தை எண்ணிக்கண்ணீர் விட்டுக் கொண்டிருந்தான் யூட்.

யூட் எட்வினைக் கண்டதும் மிக்க மகிழ்ச்சி அடைந்தான். எட்வின் யூட் எதிர்பாராவண்ணம் அவன் கால்களில் விழுந்தான். பதறிப்போன யூட், டேய் எட்வின் என்ன காரியம் செய்கிறாய். என்னைமன்னித்து விடு யூட். 3 மாதத்துக்கு முன்னமே உன் பெரியப்பா உனக்கு லெட்டரும் ஐந்து லட்சம் ரூபா பணமும் அனுப்பி அமெரிக்கா வரும்படி எழுதி இருந்தார். அவருக்கும் வயது போய் விட்டதால். அவர் பொறுப்பை உன்னிடம் ஒப்படைக்க காத்திருப்பதாக எழுதியிருந்தார். பணப்பேய் கொண்ட நான் கொஞ்சமா? ஐந்து லட்சம் கண்ணில் கண்டதும் உன்னை. உன் அன்பை மறந்து விட்டேன். உனக்குத் துரோகம் பண்ணிவிட்டேன். இவ்விடயத்தை நான் ஒரு தடவை குடிபோதையில் என் நண்பர்களிடம் உளற அவனுகளில் ஒருத்தனைப் பிடித்து பாதர் கேட்டுத் துளைத்து எடுத்துவிட்டார். என்னை மன்னிப்பாயா யூட். சொல்லு யூட். உன் அன்பு எனக்குத்திரும்பவும் வேணும் யூட். உன் நட்பு எனக்கு வேணும் யூட். நான் திருந்திட்டேன் யூட் நானே உன்னை அமெரிக்கா அனுப்பி வைக்கிறேன்டா. மன்னிச்சேன் என்று வார்த்தை சொல்லுடா யூட்.

யூட்டின் இரண்டு கைகளையும் பிடித்துக் கதறினான் எட்வின். யூட். அவனைத்தன்னுடன் சேர்த்து அணைத்துக் கொண்டான். என்னடா நமக்குள்ள மன்னிப்பு. உன் சுபாவத்துல உன்னையும் அறியாம தப்பு பண்ணிட்டாய். நீ திருந்திட்டேன் என்றாயே அதுவே எனக்கு போதும்டா. அதுவே போதும் என்றான் யூட்.இரண்டு உள்ளங்களும் கண்ணீர் வடித்தன ஆனந்தத்தில் எட்வின் பாதரிடம் பாவமன்னிப்பு வேண்டினான். பாதரும் அவன் பாவங்களுக்குப் பிரதியுபகாரமாக மனநிறைவோடு பக்தியாக ஒரு செபமாலை செபிக்கும்படி கட்டளையிட்டார். எட்வினும் மனமுருகி செபமாலை செபித்தான். இனி தவறு செய்வதில்லை என உறுதி பூண்டான்.

–சிறுவிளம்பரம்–

**இசைக் கலைஞர்கள் தெரிவு**

புதிதாக ஆரம்பிக்கப்படவிருக்கும் இசைக்குழுவுக்கு இசைக்கருவிகள் இயக்கத் தெரிந்தவர்களும், பாடகர்கள், பாடகிகளும் சேர்த்துக்கொள்ளப்படவுள்ளனர். திறமை உள்ளவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

விண்ணப்பங்கள் 20 வயதுக்குட்பட்டவர்களிடம் இருந்து எதிர்பார்க்கப்படுகின்றது. விருப்பமுள்ளவர்கள் 31–03–2002க்கு முன்னர் நேரிலோ, கடித மூலமோ பின்வரும் விலாசத்திற்கு தொடர்பு கொள்ளலாம்.விலாசம்,

அ.மனோகரதாஸ்,
296 பார் வீதி,மட்டக்களப்பு.

# -சிநேகபூர்வ கிரிக்கட் போட்டி-
# மட்/ கழகங்களின் கூட்டணியை எதிர்த்து பதுளை மெறான்ஸ் விளையாட்டுக் கழகம்

(நிமலன்)

இலங்கை மண்ணில் சமாதானத்தை நிலைநாட்ட அரசாங்கம் மேற்கொண்டு வரும் முயற்சிகளுக்கு விளையாட்டுத் துறை மூலமும் பங்களிப்பு செய்ய முடியும் என்ற அளவற்ற நம்பிக்கையில் எமது மட்டக்களப்பு மாவட்டத்தில் சமாதான நல்லிணக்கத்தின் முன்னோடியாக இரு சமூகங்களும் இணைந்து ஆடும் ஒரு சிநேகபூர்வ கிறிக்கட்போட்டி முதன்முறையாக மட்டக்களப்பு மாவட்டத்தின் வெபர் மைதானத்தில் அறிமுகம் செய்து வைப்பதில் மட்டு. மைக்கல் மென் விளையாட்டுக் கழகமும் அதன் நிர்வாகமும் பெருமைப்படுகின்றது.

இப்போட்டியானது இன்று 9.00 மணிக்கு மட்டக்களப்பு வெபர் மைதானத்தில் மைக்கல் மென் விளையாட்டு கழக அனுசரணையுடனும்,மட்டக்களப்பு மாவட்ட கிறிக்கட் பயிற்றுவிப்பாளர் சஷான் இராஜேந்திரத்தின் இடைவிடாத முயற்சியாலும்,மட்டக்களப்பு மாவட்ட முன்னணி கழகங்களின் கூட்டணியுடன் எதிர்த்து பதுளை மெறான்ஸ் விளையாட்டுக் கழகமும் போட்டியிட இருக்கின்றது.

இப் போட்டியைக் காணவும், இன்நிகழ்வானது மேலும் சிறப்புற மட்/மாவட்ட அனைத்து கிறிக்கட் ரசிகர்களையும், வெபர் மைதானத்திற்கு வருகை தருமாறும், நுழைவுச் கட்டணமான ரூபா 10/- செலுத்தி அனைத்து ரசிகர்களையும் உட்சென்று அமர்ந்து இப்போட்டியினை கண்டுகளிக்குமாறும் போட்டி ஏற்பாட்டாளர்கள் கேட்டுக்கொள்கின்றார்கள். எமது மண்ணில் எம்மவர் சாதனைகளை காண அனைத்து இதயங்களையும் அன்புடன் அழைக்கின்றோம். இன்நிகழ்வானது இனிதே நடந்தேறிட நாமும் இறைவனைப் பிராத்திக்கின்றோம். இப்போட்டியினை கண்டுகளிப்பதற்கு அனைத்து ரசிகர்களும் வருகை தரவேண்டுமெனவும் விளையாட்டு நிகழ்வானது மேலும் சிறப்புற, நுழைவுக் கட்டணம் 10 ரூபா செலுத்த வேண்டுமெனவும் போட்டி ஏற்பாட்டாளர்கள் கேட்டுக் கொள்கிறார்கள்.

# அந்-நூர்தேசிய கல்லூரி மாணவர்கள் ஆங்கில ஆசிரியர் இன்றி அவதி

(மீராவோடை நிருபர்)

வாழைச்சேனை அந்-நூர் தேசிய கல்லூரியின் மாணவர்கள் இதுவரையும் ஆங்கில ஆசிரியர் எவரும் இன்றி அவதியுறுகின்றனர். இக்குறைபாடுகளை நீக்குமாறு மாகாணக்கல்விப்பணிப்பாளர் வலயக் கல்விப்பணிப்பாளர் ஆகியோருக்கு தெரியப்படுத்தியும் இதுவரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. புதிய கல்விச்சீர்திருத்தத்தின் கீழ் க.பொ.த.சா.தரப்பரீட்சை மாணவர்களுக்கு ஆங்கிலம் கட்டாயப் பாடமாக்கப்பட்டுள்ளது. தற்போது தொண்டராசிரியர் ஒருவரைக் கொண்டு ஆங்கிலம் கற்பிக்கப்படுகின்றது. இது மாணவர்களது எதிர்காலத்தை பாதிப்பதாக அமைந்துள்ளது. இது தொடர்பாக சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுக்கப்படவேண்டுமென மாணவர்கள் வேண்டுகின்றனர்.

**தவறி விட்டது**

பென்சன் காட், வங்கி புத்தகங்கள் ஆகியவற்றுடன் முதலைக்குடா சந்திரசேகரம் என்பவரின் டயறி ஒன்று 23-03-2002 மதியம் 12 மணியளவில் மட்டு.பொலிஸ் நிலையத்திற்கும், கல்லடிக்கும் இடைப்பட்ட வீதியில் தவறிவிட்டது. இதனைக்கண்டு எடுத்தவர்கள் தொடர்பு கொள்ள வேண்டிய விலாசம்,

வ.சபாநாதன்,
41/6 விவசாய இலாகா விடுதி வீதி,
கல்லடி, மட்டக்களப்பு. Advt

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜஷீர் அரபாத்துக்கு ஏற்பட்ட வீட்டுக் காவல் நிச்சயம் எமக்கு ஏற்பாடாது!

## புலிகளின் மட்டு.அம்பாறை அரசியல்துறைத் துணைப் பொறுப்பாளர்

(அரியம்)

''நோர்வே அனுசரணையுடன் உருவான பாலஸ்தீன இஸ்ரேல் சமாதான உடன்படிக்கையின் பின் ஜசீர் அறபாத் வீட்டுக் கைதியாக வைக்கப்பட்ட சம்பவம் எங்களுக்கு நிச்சயமாக வராது. ஏனெனில் நாங்கள் படைப் பலத்துடன்தான் பேச்சு வார்த்தைக்குச் செல்கின்றோம்'' என மட்டக்களப்பு அம்பாறை மாவட்டத் துணை அரசியல் பொறுப்பாளர் விசு கரடியனாறு மகா வித்தியாலயத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற அபிவிருத்தி ஆலோசனைக் கூட்டத்தில் தெரிவித்தார்.

துணை அரசியல் பொறுப்பாளர் விசு அங்கு தொடர்ந்து பேசுகையில், ''தமிழனின் படைப்பலத்தை அதிகரிக்கும் நோக்கில்தான் வீட்டுக்கொரு போராளியைத் தாருங்கள் என்று கேட்கின்றோம். இன்று எமது படைப்பலம் குறைந்திருந்தால் நாம் இந்த நிலைக்கு வந்திருக்க முடியுமா? என்பதை சிந்தித்துப் பாருங்கள். படுவான்கரைப் பகுதி மக்கள் வீட்டுக்கொரு போராளியைத் தந்தனர்.

தற்போது ஸ்ரீலங்கா அரசின் பிரதமர் ரணிலுடன் எமது தேசியத் தலைவர் மேதகு பிரபாகரன் அவர்கள் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் நோர்வேயின் மத்தியஸ்தத்துடன் கைச்சாத்திட்டார். எல்லோரும் எதிர்பார்த்தார்கள் ஸ்ரீலங்காவின் பிரதமரும் எமது தேசியத் தலைவரும் ஒரே மேசையில் வைத்துத்தான் கையொப்பம் இடுவார்கள் என ஏன் அவ்வாறு இடவில்லை? தற் போது செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தம் புரிந்துணர்வு உடன்படிக்கை மட்டுமே. உறுதியான தீர்வு எட்டும் பட்சத்தில் மட்டுமே அவ்வாறான நிலை தோன்றும்.

தற்போது புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திட்ட பின் அதனை மிகவும் கவனமாக எமது இயக்கப் போராளிகள் கடைப்பிடித்து வருகின்றனர். இப்புரிந்துணர்வு ஒப்பந்தத்தின்படி ஏ-9 பாதை எதிர்வரும் 24ஆம் திகதிக்கிடையில் திறக்கப்பட வேண்டும். இதற்குச் சகல ஒத்துழைப்பையும் எமது தரப்பு வழங்கியுள்ளது. ஆனால் படைத்தரப்பு இன்னும் இழுத்தடித்துக் கொண்டு இருக்கிறது. இது ஒன்றில் இருந்து யார் புரிந்துணர்வு ஒப்பந்தத்தைச் சரிவர அனுஷ்டிக்கிறார்கள் என்பது தெரியும்.

கடந்த போராட்ட காலத்தில் இருந்து இன்றுவரை எமது இயக்கத்தில் 17603 பேர் மாவீரர்களாகியுள்ளனர். கிட்டத்தட்ட 70 ஆயிரம் தமிழ் மக்களை இழந்துள்ளோம். இரண்டும் சேர்த்து மொத்தமாக ஒரு இலட்சம் தமிழ் மக்களின் இரத்தம் சிந்திய மண்ணில்தான் நாம் இன்று வாழ்ந்து கொண்டிருக்கிறோம்.

அவர்களின் தியாகங்கள் வீண் போகக் கூடாது. சுயநிர்ணய உரிமையுடன் கூடிய தீர்வுதான் எமக்குத் தேவை. இதை எட்டுவதற்காகத்தான் எமது படைப்பலத்தை அதிகரிக்க வேண்டியுள்ளது. படைப்பலம் என்றால் போராடுவதற்கு மட்டும் என்று நினைக்கக் கூடாது. அரசியல் வேலைகளைத் திட்டமிட்ட முறையில் செய்யவும் படைப்பலம் அவசியம். எமது இயக்கத்தில் எத்தனையோ இளைஞர்கள் விருப்புடன் இணைந்து கொண்டுதான் இருக்கிறார்கள். விரும்பிவரும் இளைஞர்களை நாங்கள் வீட்டிற்கு அனுப்பமாட்டோம். தமிழனின் படைப்பலத்தைத் தொடர்ந்தும் அதிகரிக்க வேண்டிய காலத்தின் தேவை எமக்குண்டு.

எமது தேசியத் தலைவரை முழு உலகத் தமிழர்களும் தலைவராகவும் விடுதலைப் புலிகளை ஏக பிரதி நிதிகளாகவும் ஏற்றுள்ளனர். வடக்கு, கிழக்கு வாழ் மக்கள் பொங்கு தமிழ் எழுச்சி மூலம் இதனை நிரூபித்துள்ளனர்.

விடுதலைப்புலிகளுடன் தமிழ் மக்கள் அனைவரும் நேரடியாக உறவாடி உரிமையுடன் எந்தப் பிரச்சினைகளானாலும் தயக்கமின்றிக் கூறுங்கள். உங்களின் பிள்ளைகள் தான் நாங்கள் என்பதை மறக்க வேண்டாம்'' எனவும் கூறினார்.

# யாழ். கிளிநொச்சி ஏ.09 வீதி திறப்பு ஏப்ரல் 08ம் திகதி

(நமது நிருபர்)

யாழ். கிளிநொச்சி வீதியை இன்று திறந்து வைப்பதற்கு சகல ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டுவந்த போதும் தவிர்க்க முடியாத காரணங்களினால் எதிர்வரும் ஏப் ரல் 08ம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இவ் ஏ. 09 வீதியை மக்களின் போக்குவரத்திற்குத் திறந்து விடுவதற்கான சகல வேலைகளையும் விடுதலைப்புலிகள் பூர்த்தி செய்துள்ளதாக அறிவித்துள்ள போதும் படையினர் எழுதுமட்டுவாள் பகுதியில் சோதனைச்சாடி அமைக்கச் சிலகாலம் தேவைப்படுவதாகக் கூறியுள்ளதாலேயே இவ் ஒத்திவைப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

எனினும் சிங்களத் தமிழ் புத்தாண்டையொட்டி ஏப்ரல் மாதத்தில் இவ்வீதிகளைத் திறந்து விடுவதற்கு அரசும் புலிகளும் இணக்கம் தெரிவித்துள்ளனர்.

# சிங்கள, தமிழ் இசைக் கலைஞர்கள் கலந்துகொண்ட இசை நடன நிகழ்வு

(நமது நிருபர்)

மட்டக்களப்பு வெபர் அரங்கில் நேற்று முன்தினம் இரவு சிங்கள, தமிழ் இசைக் கலைஞர்கள் கலந்து கொண்ட இசை நடன நிகழ்வொன்று நடைபெற்றது.

படைத்தலைமையகத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந் நிகழ்வில் சிங்கள இசைக் கலைஞர்களோடு மட்டு நகரின்.இசைக் கலைஞர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

இரவு 7.30 மணியளவில் ஆரம்பமான இவ்விசை நடன நிகழ்வினை மட்டக்களப்பின் சுமார் ஐந்தாயிரம் பேர் வரையான மக்கள் பார்வையிட வருகை தந்திருந்தனர்.

பலவருடங்களுக்குப் பின்னர் மட்டு. நகரின் முக்கிய விளையாட்டரங்கான வெபர் விளையாட்டரங்கில் இரவு வேளை கலை நிகழ்வொன்று முதன் முறையாக நடைபெற்றது என்பதும் பெரும் திரளான மக்கள் குடும்பம் சகிதம் கலந்து கொண்டனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# இன்று ஆயுதங்களைக் கையளிப்போம் உடன்படிக்கைக்கு பூரண ஆதரவு!

**-ஈ.பி.டி.பி. அலுவலகப் பொறுப்பாளர் பிரதீபன்-**

(நமது நிருபர்)

தம்மிடம் உள்ள சகல ஆயுதங்களையும் இன்றைய தினம் கையளிக்கவுள்ளதாக மட்டு ஈ.பி.டி.பி. இயக்க அலுவலகப் பொறுப்பாளர் பரணீதரன் பிரதீபன் நேற்று முன்தினமிரவு தினக்கதிருக்குத் தெரிவித்தார்.

தமது அலுவலகத்திற்குப் பாதுகாப்பு வழங்குவதாகப் பொலிஸார் உறுதியளித்துள்ளதாகத் தெரிவித்த பரணீதரன் ரீ-56 ரக துப்பாக்கிகள் 10, கைத் துப்பாக்கிகள் 07, கைக் குண்டுகள், மற்றும் ரவைகள் அடங்கிய ஆயுதங்களையே தாம் இன்றைய தினம் கையளிக்கவுள்ளதாகக் கூறினார்.

ஈ.பி.டி.பி. இயக்கம், தற்போது நடைமுறைப்படுத்தப்படும் புரி ந்துணர்வு உடன்படிக்கைக்கோ, சமாதான நடவடிக்கைக்கோ எதிரானவர்கள் அல்ல. சமாதான நடவடிக்கைக்குத் நாம் பூரண ஆதரவு வழங்குவோம் எனவும் தெரிவித்த அவர்,

ஆயுதக் கையளிப்பின் பின்னர் மக்களுக்குப் பூரணமான சமாதானம் கிடைக்கும் வரையும், சுமூக நிலை உருவாகும் வரையும் தாங்கள் ஒரு அரசியற் கட்சியாக செயற்படவுள்ளதாகவும் மேலும் தெரிவித்தார்.

# இனப் பிரச்சினைக்கான தீர்வு விடயத்தில் முஸ்லிம்களின் பிரச்சினைகளும் தீர்க்கப்பட வேண்டும்.

## இல்லையேல் சிக்கல் ஏற்படும் என்கிறார் பா.உ. இஸ்மையில்

(நமது நிருபர்)

ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் நாட்டில் சமாதானம் நிலவவேண்டும் என்பதற்காகப் பல முன்னெடுப்புக்களை எடுத்து வருவதனையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன். ஆனால், அதில் முஸ்லிம் சமுதாயத்தின் உரிமைகள் ஸ்ரீ.ல.மு.காவில் இருந்து வருகிறது.

இவ்வாறு சம்மாந்துறை முஸ்லீம் மத்திய தேசிய கல்லூரி வழங்கிய வரவேற்புவிழாவில் கலந்து கொண்டு பேசிய அம்பாறை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எம்.ஐ. அன்வர் இஸ்மாயில் குறிப்பிட்டார்.

விழாவிற்கு கல்லூரி அதிபர் கவிஞர் எச்.எம்.பாறூக் தலைமை தாங்கினார்.

பாராளுமன்ற உறுப்பினர் அன்வர் இஸ்மையிலைக் குறித்த பாட சாலை மாணவர்கள் பாண்ட் வாத்தியம் சகிதம் வரவேற்றனர். அவர் மேலும் பேசுகையில்.

இனப்பிரச்சினைக்கான தீர்வு முயற்சிகள் நடைபெற்று வரும் இக் காலகட்டத்தில் ஸ்ரீ.ல.மு காங்கிரஸ் வாய்மூடி மௌனியாக இருப்பது ஏன்? எனச் சிலர் கேட்கின்றனர்.

ஆயுதந்தாங்கிய இருகுழுக்களிடையே தற்போது யுத்த நிறுத்தம் மட்டும் ஏற்பட்டுள்ளது. சமாதான முன்னெடுப்புகளின் ஆரம்பம் இது. பேச்சுவார்த்தைத் தீர்வு முயற்சி என்று வரும் போது நாம் வாய் திறப்போம் அரசுக்கும் புலிகளுக்குமிடையிலான யுத்த நிறுத்த காலத்தை நாம் நன்னடத்தைக் காலமாகப் பார்க்கிறோம். இதன் பலாபலன்களை ஆராய்ந்த பின்னே நாம் சில தீர்மானங்களை எடுப்போம் அதே வேளை நாம் ஜே.வி.பி. போன்று இனவாதப்போக்குடன் செயற்படமாட்டோம்.

இந்நாட்டில் சிங்கள, தமிழ் மக்களுக்குரிய அதே உரிமைகள் எமது முஸ்லிம் மக்களுக்கும் வழங்க வேண்டும் இன்றேல் பிரச்சினை தீர்ப்பதில் சிக்கல் ஏற்படும் என அவர் மேலும் தெரிவித்தார்.

# வவுனியாவில் சமாதான இசை நிகழ்ச்சி பாதை திறப்பு தொடர்பாகவும் ஆற்றுகை!

(வவுனியா)

வவுனியா முத்தவெளி மைதானத்தில் அமைச்சர் ஜயலத் ஜெயவர்த்தனா தலைமையில சமாதான இசை நிகழ்ச்சியொன்று நேற்று இரவு நடாத்தப்பட்டது.

இந்த இசை நிகழ்ச்சியில் மூன்று மொழிகளிலுமான பாடல்கள் சமாதானத்தை வலியுறுத்தும் வகையில் இசைக்கப்பட்டன. இந் நிகழ்வில் ஆயிரக்கணக்கான மக்கள் கலந்து கொண்டனர்.

இதேவேளை நேற்று மாலை 5.30 மணி முதல் யாழ் வீதி திறப்பு விடயம் தொடர்பாகவும் புரிந்துணர்வு ஒப்பந்தம் தொடர்பாகவும் சுமார் 80 பேரடங்கிய குழுவொன்று வவுனியா மணிக்கூட்டுக் கோபுர சுற்று வட்டப் பகுதியில் ஆற்றுகை ஒன்றினை நடத்தியுள்ளது.

# அன்னை பூபதியின் கலாசார போட்டி நிகழ்வுகள் நேற்று முதல் ஆரம்பம்!

(அலுவலக நிருபர்)

அன்னை பூபதியின் 14வது ஆண்டு நினைவு தினத்தையொட்டி மட்டக்களப்புப் பாடசாலைகளுக்கிடையில் நான்கு பிரிவுகளாக நடாத்தப்படும் கலாசாரப் போட்டிகளின் முதலாவது நிகழ்வு நேற்று ஈச்சந்தீவு இராமகிருஷ்ண வித்தி யாலயத்தில் நடைபெற்றது.

இதில் 24 பாடசாலை மாணவர்கள் கலந்து கொண்டனர். பிரதம விருந்தினராக மட்டக்களப்பு வலயப் பிரதேசக் கல்விப் பணிப்பாளர் எஸ்.சண்முகம் கலந்து கொண்ட இந்நிகழ்வினை பாடசாலை அதிபர் எஸ். மனோகிதராஜா தலைமையேற்று நடாத்தினார்.

கலாசாரப் போட்டிகளின் சிறப்பு நிகழ்வுகளாக கன்னன்குடா மகா வித்தியாலய மாணவர்களின் நாடகம், ஈச்சந்தீவு இராமகிருஷ்ண வித்தியாலய மாணவர்களின் தாளலயம் என்பன அமைந்திருந்தன.

விழாவின் இறுதியில் அன்னதானம் வழங்கப்பட்டது. நினைவுதின இரண்டாவது கலாசார நிகழ்வுகள் நாளை திங்கட்கிழமை கரடியனாறு மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளன.

# படைமுகாமில் கூட்டம்

(நல்லரெட்ணம்)

களுவன்கேணி படைமுகாமில் அக் கிராமத்தின் அபிவிருத்தி குறித்த கூட்டமொன்று இன்று பிற்பகல் 2 மணியளவில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்திற்கு களுவன்கேணி கிராமப் பிரமுகர்கள், அரச உத்தியோகத்தர்கள், கிராம சேவகர்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் போன்றோருக்கு நேரடியாகஇக்கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

# யோக சுவாமிகள் குரு பூஜைதினம்

(நமது நிருபர்)

யோக சுவாமிகளின் குரு பூஜை தினம் எதிர்வரும் 25ம் திகதி சித்தாண்டி யோக சுவாமி சைவ மகளிர் இல்லத்தில் நடைபெறவுள்ளது.

இத்தினத்தில் குரு பூஜை தினத்தையொட்டி மகளிர் இல்லத்தினர் கல்குடா வலயப் பாடசாலைகள், அறநெறிப் பாடசாலைகள், இந்து மன்றங்கள், மாணவர் இல் லங்கள் போன்றவற்றின் மாணவர்களை உள்ளடக்கி நேற்றைய தினம் வந்தாறுமூலை மத்திய மகா வித்தியாலயத்தில் நடாத்தப்பட்ட நற்சிந்தனைப் பாடல் மனனம் செய்தல் போட்டியில் வெற்றியீட்டியவர்களுக்கான பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளது.

# வருடாந்த மகோற்சவம்

(நமது நிருபர்)

கிழக்குப் பல்கலைக்கழக வளாகத்தில் அமைந்துள்ள ஆலையடி சித்திவினாயகர் ஆலயத்தின் வருடாந்த மகோற்சவம் இம் மாதம் 19 ம் திகதி ஆரம்பமாகித் தொடர்ந்து 10 நாட்கள் திருவிழா பக்திபூர்வமாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

கடந்த 2ம் திகதி வியாழக்கிழமை வர்த்தகமுகாமைத்துவ பீடமாணவர்களின் திருவிழா பக்திப்பரவசமூட்டும் பஜனைப் பாடல்களுடன் நடைபெற்ற போது நூற்றுக்கணக்கான மாணவர்களும் விரிவுரையாளர்களும் கலந்துகொண்டனர்.

இத் திருவிழாவில் மட்டக்களப்பு மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் ஞா.கிருஷ்ணபிள்ளையும் கலந்து கொண்டு பூசையில்பங்கேற்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப் பத்திரிகை வேல்ட் வொயிஸ் பப்ளிகேஷன் நிறுவனத்தினால் ஈஸ்ரன் கிராபிக்ஸ் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.